REGISTERED AS A
NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2021 மே 11 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN
තිනකරන්
89
1932 - 2021

வரு. 89 இல. 110
May 11, Tuesday, 2021
16பக்கங்கள்
30/-

நீங்கள் பாதுகாப்பாக
வீட்டிலிருந்தவாறு பயிலுங்கள்,
வேலை செய்யுங்கள்.
MS Teams, Zoom, Office 365, m-Learning, SLT Lynked மற்றும் SLT eSiphala இற்கு SLTMobitel மொபைல் இடமிருந்து கிடைக்கும் சிறந்த டேட்டா ப்ளேன் உங்கள் கரங்களுக்கு.
25GB பக்கேஜ் ரூ.150/- +வரி
50GB பக்கேஜ் ரூ.590/- +வரி
100GB பக்கேஜ் ரூ.990/- +வரி
FASTEST INTERNET WIDEST COVERAGE 4G LTE
www.sltmobitel.lk
SLTMOBITEL

மேற்கு வங்கத்தின்
துணிச்சல் பெண்!
04

ஜெரூசலத்தில்
வன்முறை
10

மத்தலையிலிருந்து
விமான சேவை
12

பாக்.அணி
இன்னிங்ஸ் வெற்றி
16

# கொவிட்-19 பரவுவதை கட்டுப்படுத்த கடுமையான சட்ட நடவடிக்கைகள்

## சுகாதார அமைச்சர் தலைமையில் ஏழு விசேட தீர்மானங்கள்

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

கொவிட்19 வைரஸ் பரவுவதைக் கட்டுப்படுத்த கடுமையான முடிவுகளை எடுப்பதற்கு சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தலைமையிலான கொவிட் ஒழிப்பு செயல்பாட்டு செயலணி முடிவெடுத்துள்ளது.

நேற்று திங்கட்கிழமை சுகாதார அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற கொவிட்19 ஒழிப்பு செயற்பாட்டு செயலணியின் மதிப்பீட்டு ஆய்வுக் கூட்டத்திலேயே இவ்வாறு கடுமையான முடிவுகளை எடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு,

1.கொழும்பு, களுத்துறை மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு முன்னுரிமை அளிக்கும்

06

### தென் கொரிய எக்சிம் வங்கியிடமிருந்து

# இலங்கைக்கு மில்.500 அமெரிக்க டொலர் கடன்

தென் கொரியாவின் எக்சிம் (Exim) வங்கியிடமிருந்து இலங்கைக்கு 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் சலுகைக் கடன் வழங்கப்பட்டுள்ளதாக நிதி அமைச்சரின் செயலாளர் தெரிவித்துள்ளார். குறித்த 500 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மானியக்கடனை 40 வருடங்களுக்குள் திருப்பி வழங்குவதற்கான ஒப்பந்தத்தில் தென் கொரியாவின் எக்ஸிம் வங்கி கையெழுத்திட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாட்டை முற்றாக முடக்கும் எவ்வித தீர்மானமும் இல்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

03

NAITA விலுள்ள பயிலுநர் இளைஞர்கள் 10 நாட்களில் 10,000 கட்டில்களை நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டுள்ளனர். நாடு முகம் கொடுத்துள்ள இக்கட்டான சூழலுக்கு இளைஞர்கள் கை கொடுத்துதவும் இம் முன்னுதாரண வேலைத்திட்டத்தை விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ பார்வையிட சென்ற போது பிடிக்கப்பட்ட படம்.

# பொதுப் போக்குவரத்து பயன்பாடு; மட்டுப்படுத்த விசேட செயற்திட்டம்

### நேற்று முதல் நடைமுறை -பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண

- **பஸ்களில் ஆசன அளவிற்கே பயணிகள்**
- **ஆட்டோக்களில் 2 பேர் மாத்திரம்**

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பொதுப் போக்குவரத்துக்களில் பயணிகளை ஏற்றிச் செல்லும் செயற்பாடுகளை மட்டுப்படுத்துவதற்கான விசேட

06

### நாட்டை 3 வாரங்கள் முடக்கி

## குடும்பத்திற்கு ரூ.20,000 வழங்க அரசிடம் மனோ M.P கோரிக்கை

நாட்டை மூன்று வாரங்களுக்கு முடக்கி, ஒவ்வொரு குடும்பத்துக்கும் 20,000 ரூபாய் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மனோ கணேசன் எம்.பி அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் இவ்வாறு தெரிவித்த மனோ எம்பி மேலும் தெரிவித்ததாவது,

06

## ஆறு அடி தள்ளி இருந்தாலும் கொரோனா பரவ வாய்ப்பு

### அமெரிக்க ஆய்வில் வெளியான தகவல்



கொரோனா தொற்றுள்ளோர் 6 அடிக்கு அப்பால் இருந்தாலும் அவரிடமிருந்து வெளிப்படும் காற்றில் கலந்த வைரஸ் மற்றவர்களுக்கு மூச்சுக்காற்றின் மூலம் உட்புக வாய்ப்புள்ளதாகத் தெரியவந்துள்ளது.

அமெரிக்க நோய்க் கட்டுப்பாட்டு

06

### இந்தியாவில் நிர்க்கதியாகி தவிக்கும்

## இலங்கையரை அழைத்துவர விசேட வேலைத் திட்டம் அடுத்தவாரம் முதல் ஏற்பாடு

### - பிரசன்ன ரணதுங்க

**சுப்பிரமணியம் நிஷாந்தன்**

வைத்திய நோக்கத்திற்காக அல்லது வேறு காரணங்களுக்காக இந்தியாவிற்கு

06

| திகதி | 09– 14 |
|---|---|
| சஹர் | 04–20 |
| சுபஹ் | 04–35 |
| சூ.உதயம் | 05–55 |
| லுஹர் | 12–08 |
| அஸர் | 03–28 |
| மஃரிப் | 06–20 |
| இஷா | 07–33 |

ரமழான்
தொழுகை
நேரம்

Halo
Complete Family
Protection
Hotline: 077 4648855

### கொரோனா நிலைமை மோசமடைந்தால்

## அவசியமான தீர்மானத்தை எடுக்க அரசு தயார் நிலையில்

### தேவையேற்படின் பயணக்கட்டுப்பாடு -பீரிஸ்

**ஷம்ஸ் பாஹிம்**

கொரோனா பரவல் நிலைமை தொடர்ந்தும் மோசமடைந்தால் மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் அவசியமான தருணத்தில் பயணக்கட்டுப்பாடு விதித்து அமுல்படுத்தவும் அரசாங்கம் தயாராகவுள்ளதாக கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார். தடுப்பூசி வழங்குவதற்கான

06

### 10 வருடங்களுக்கு பின் பிறந்த

## குழந்தை இறந்த சோகத்தில் பெற்றோரும் உயிர் மாய்ப்பு

### யாழில் நெஞ்சை உருக்கிய சம்பவம்

திருமணமாகி 10 வருடங்களின் பின்னர் பிறந்த குழந்தை இறந்த சோகத்தில் தாய், தந்தை நஞ்சருந்தி தற்கொலை செய்துகொண்ட சம்பவமொன்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றுள்ளது.

திருமணமாகி 10 வருடங்களுக்குப் பின் பிறந்த முதல்

06

## நாட்டில் இடியுடன் கூடிய மழை இன்றும் தொடரும்

நாட்டின் பெரும்பாலான பிரதேசங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக காலநிலை அவதான நிலையம்

06

### அரச சேவையை தடையின்றி முன்னெடுத்துச் செல்லும்

## விசேட வழிகாட்டல் சுற்றுநிருபம் வெளியீடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அரச சேவையை தடையின்றி முன்னெடுத்துச் செல்வது தொடர்பில் விசேட வழிகாட்டல்கள் அடங்கிய சுற்றுநிருபம் அரசாங்கத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. பொதுநிர்வாக அமைச்சினால் வெளியிடப்பட்டுள்ள

06

### ரமழான் பண்டிகையுடனான நீண்ட விடுமுறை :

## நிலைமையை கருத்திற் கொண்டு போக்குவரத்து கட்டுப்பாடு

### - இராணுவத்தளபதி விளக்கம்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ரமழான் பண்டிகையுடனான நீண்ட விடுமுறைக்கு இடைப்பட்ட நாட்களில் நிலைமையைக் கருத்திற் கொண்டு, போக்குவரத்து

06

### உரிமையை மறுக்கவில்லை; கொவிட் பரவல் தீவிரம்:

## முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடினால் தராதரம் பாராது கைது செய்யப்படுவர்

### வீடுகளிலிருந்து நினைவுகூர ஆட்சேபனையில்லை

நாட்டில் கொவிட் வைரஸ் பரவல் தீவிரம் அடைந்துள்ள நிலையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வுகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இறந்தவர்களை நினைவுகூரும் உரிமையை நாம் மறுக்கவில்லை. வீடுகளில் தனித்து அதனைச் செய்வதில் எமக்கு ஆட்சேபனையில்லை என்றும் இராணுவ தளபதி தெரிவித்துள்ளார்

06

### பழைய இரும்பு விற்கும் போர்வையில் விற்பனை;

## 590க்கும் அதிகமான போதை மாத்திரைகளுடன் ஒருவர் கைது

### கல்முனையில் CID யினரால் வாகனம் சுற்றிவளைப்பு

**கல்முனை விசேட நிருபர்**

பழைய இரும்பு விற்கும் போர்வையில் பட்டா வாகனம் ஒன்றில் போதை மாத்திரைகள் மற்றும் ஹெரோயின் விற்பனையில் ஈடுபட்டு வந்த நபர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரிடம் இருந்து

06

### விக்கல் வீராச்சாமி



என்ன, அந்த டிவி ஸ்டேஷனுக்கு சில பெற்றோர் கல் எறிகினம், சிலர் கூடாத வார்த்தைகளால பேசுகினம்....

ஓ, அதுவா, வீட்டில லீவுல இருக்கிற மாணவர்களுக்கான விசேஷ நிகழ்ச்சி எண்டு அறிவிச்சுவிட்டு 'பாடி மம்மி வீட்டில் இல்ல விளையாட லாம் வா புள்ளே' எண்ட பாட்டை போட்டுட்டாங்களாம்...!!!

89 ஆண்டுகால பாரம்பரியத்துடன் தமிழ் பேசும் மக்களின் தேசிய குரல்

# கொவிட் 19 தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்கும் இடை மத்திய நிலையமாக ஜாமிஆ நளிமிய்யா

### மர்ஜான் பளீல் எம்.பி துரித நடவடிக்கை

கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கான இடை மத்திய நிலையமாக பேருவளை ஜாமிஆ நளிமிய்யா கலாபீடம் பயன்படுத்தப்படவுள்ளது. இது தொடர்பில் துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன, பொதுஜன பெரமுன கட்சி பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் ஆகியோர் சுகாதார உத்தியோகத்தர்களுடன் ஜாமிஆ நளீமிய்யா கலா பீடத்திற்கு கடந்த வார இறுதியில் நேரில் சென்று பார்வையிட்டனர். சுமார் 270 பேருக்கு சிகிச்சை அளிப்பதற்கான இடை மத்திய நிலையமாகப் பயன்படுத்துவதற்கு தேவையான சகல வசதிகளும் கடற்படையினரின் பங்களிப்புடன் இங்கு மேற்கொள்ளப்படுகின்றது.

இதேவளை, பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல், பேருவளை நகர சபைத் தலைவர் மஸாஹிம் முஹம்மத், பேருவளை பிரதேச சபைத் தலைவர் உட்பட பிரதேச மட்ட அதிகாரிகளும் இந்நிலையத்திற்கு நேற்று முன்தினமும் நேரில் சென்று பார்வையிட்டதோடு பாராளுமன்ற உறுப்பினர் தேவையான அறிவுறுத்தல்களையும் வழங்கினார்.

# சுகாதார துறையினருக்கு பங்களிக்கும் முப்படையினர்

இராணுவ, விமான, கடற்படை என முப்படைகளும் இந்நாட்டு சரித்திரத்தில் நாட்டு மக்களுக்காக ஆற்றிய பணிகளை எழுத, கூற வார்த்தைகள் கிடையாது. தங்களது கடமைகளுக்கு அப்பால் சென்று முப்படையினர் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியவையாகும். தற்போது ஏற்பட்டுள்ள தொற்று நிலைமையில் நாட்டு மக்களை விடுவிக்க தங்களது பங்களிப்பை சுகாதாரப் பிரிவினருக்கு வழங்குகிறார்கள். ஆனால் தற்போது எதிர்பாராத வகையில் கொரோனா தொற்று இந்நாட்டில் மீண்டும் பாரியளவில் அதிகரித்துள்ளது. நோயாளிகள் நாளுக்கு நாள் ஆயிரக்கணக்கில் அதிகரிக்கும் நிலைமை தோன்றியுள்ளது. அவர்களுக்கு அத்தியாவசியமான சேவையாக மாறியுள்ள வைத்தியசாலை வசதிகளை முப்படையினரும் ஏற்படுத்திக் கொடுக்க முன் வந்துள்ளார்கள்.

ஆயிரக்கணக்கான கட்டில்களைத் தயாரித்து குறுகிய காலத்தில் தற்காலிக வைத்தியசாலைகளை இரவு, பகல் பாராது அமைத்து வருவதை நாம் காணலாம். அதனடிப்படையில் இராணுவத்தினரால் கொவிட் 19 ஆல் பாதிக்கப்பட்ட நோயாளிகளின் தேவைக்காக சீதுவைப் பகுதியில் அமைந்துள்ள ‘பிரண்டிக்ஸ் கிறீன் ப்ளெனெட்’ நிறுவனத்தின் கட்டடத்தில் இராணுவ மகளிர் பிரிவின் பங்களிப்புடன் அனைத்து சுகாதார வசதிகளையும் கொண்ட இலங்கையின் நவீன வசதிகளுடன் கூடிய அதிக இடப்பரப்பைக் கொண்ட வைத்தியசாலை அமைக்கும் பணி நிறைவடைந்துள்ளது.

நவீன வசதிகளைக் கொண்ட இவ்வைத்தியசாலையில் கொரோனா நோயாளிகளுக்குத் தேவையான அனைத்து வசதிகளும் உள்ளதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா கூறினார். இவ்வைத்தியசாலை 24 மணித்தியாலத்துக்குள் அமைக்கப்பட்டது விசேட அம்சமாகும். 2000 நோயாளிகள் தங்கியிருந்து சிகிச்சை பெறும் இவ்வைத்தியசாலை நோயாளிகளுக்கு பல அணிகளாக சேவைகளை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

## லேக் ஹவுஸ் ஆகிய நாம் உங்கள் பாதுகாப்பின் முக்கியத்துவம் கருதி பின்வரும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்



படி 1
அனைத்து ஊழியர்களும் நிறுவனத்திற்குள் நுழையும் முன் கிருமிநீக்கும் அறை வழியாக அனுப்பப்படுவர்

படி 2
கால்களால் இயக்கி கை கழுவும் நடவடிக்கைக்கு உட்படுத்தப்படுவர்

படி 3
நுழைவாயிலில் உடல் வெப்பநிலை அளவிடப்படும்

படி 4
தூய்மையை மேலும் உறுதிப்படுத்த கால் தூய்மையாக்கும் தட்டு

படி 5
தொடுகையுறும் ஒவ்வொரு இடத்திலும் கை தூய்மையாக்கி

படி 6
வாடிக்கையாளருடன் தொடர்புறும் பாதுகாப்பு உத்தியோகத்தருக்கு தனிப்பட்ட பாதுகாப்பு அங்கி

படி 7
உற்பத்தி கடமையில் உள்ளவர்களுக்கு கையுறை, முகக்கவசம் கட்டாயமானது

படி 8
பணிகள் ஆரம்பிக்கும் முன்னர், உற்பத்தி பகுதி கிருமி நீக்கம் செய்யப்படும்

படி 9
விநியோகத்திற்கு முன்னரும் பின்னரும் வாகனங்கள் கிருமி நீக்கம் செய்யப்படும்

பத்திரிகையின் பக்கங்கள் ஊழியர்களால் வீடுகளிலிருந்து வடிவமைக்கப்பட்டு மின்னஞ்சல் செய்யப்படும்

முழுமையான தன்னியக்க அச்சிடல், நன்கு பாதுகாப்பான ஊழியர்களால் பொதியிட்டு, ஏற்றி, இறக்கல், விநியோகம்

மிகக் குறைந்த மனிதத் தொடர்புடன் வெளிவரும் பத்திரிகை, மிகவும் பாதுகாப்பாக உங்களை வந்தடைகிறது

ANCL | MN Graphic

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2021 மே 11 செவ்வாய்க்கிழமை
தினகரன்
THINAKARAN
දිනකරන්

**தொழுகை நேரம்**

09முதல் 14 வரை

சுபஹ் - 04.35
லுஹர் - 12.08
அஸர் - 03.28
மஃரிப் - 06.20
இஷா - 07.33

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் சித்திரை 28

ராகுகாலம் : மாலை : 03.00 - 04.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: அமாவாசை

**இராசி பலன்கள்**

மேஷம் - செலவு
ரிஷபம் - பாராட்டு
மிதுனம் - தனம்
கடகம் - போட்டி
சிம்மம் - கோபம்
கன்னி - முயற்சி
துலாம் - நன்மை
விருச்சிகம் - நிறைவு
தனுசு - வெற்றி
மகரம் - பொறுமை
கும்பம் - மறதி
மீனம் - சுகம்

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள்
(பாபு சர்மா)

## மே மாத பரீட்சைகள் ஒத்திவைப்பு

### பரீட்சைகள் திணைக்களம் அறிவிப்பு

பரீட்சைகள் திணைக்களத்தின் ஊடாக மே மாதத்தில் நடத்தப்படவிருந்த அனைத்து பரீட்சைகளும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மறு அறிவித்தல் வரையில் இவ்வாறு பரீட்சைகள் அனைத்தும் பிற்போடப்பட்டுள்ளதாக பரீட்சைகள் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

நாட்டின் தற்போதைய கொரோனா வைரஸ் பரவல் நிலைமையை கருத்திற்கொண்டு இந்த தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## நாட்டை முற்றாக முடக்கும் எவ்வித தீர்மானமும் இல்லை

### இராணுவத் தளபதி சவேந்திர சில்வா

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டை முற்றாக முடக்கும் ( “Lockdown” ) எவ்வித தீர்மானமும் இல்லை என கொவிட் – 19 ஒழிப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவர், இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும், அடுத்துவரும் சில நாட்களில் மாகாணங்களுக்கு இடையிலான பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். இதேவேளை, அரச அலுவலகங்கள் மற்றும் சேவை நிலையங்களுக்கு அந்த நிறுவனங்கள் அமைந்துள்ள மாவட்டங்களுக்கு, வெளி மாவட்டங்களிலிருந்து ஊழியர்களை அழைப்பதை மட்டுப்படுத்துமாறு சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அதுதொடர்பில் விசேட பணிப்புரைகள் வெளியிடப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ள அவர், முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷவின் தலைமையில் நடைபெற்ற விசேட கூட்டத்தின்போது பொது நிர்வாக அமைச்சின் செயலாளருக்கு அது தொடர்பில் உரிய பணிப்புரைகள் வழங்கப்பட்டுள்ளதாகவும் இராணுவத் தளபதி

06

### கல்முனை விடயத்தில் ஒன்றிணைந்தது போன்று

## அரசியல் கைதிகள் விடுதலை விடயத்திலும் ஒன்றுபடுங்கள்

### உறவினர்கள் தமிழ் தலைமைகளிடம் கோரிக்கை

கல்முனை வடக்கு பிரதேச செயலக விவகாரத்தில் ஒன்றிணைந்து செயற்பட்டதை போன்று தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலையினையும் தமிழ் அரசியல் கட்சிகள் இணைந்து வலியுறுத்த வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் அறிக்கையொன்றின் மூலம் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளனர்.

கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரம் உயர்த்துவதற்காக தமிழ் தேசிய கட்சிகளின் 10 நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து அமைச்சர் சமல் ராஜபக்ஷவுடன் கலந்துரையாடியுள்ளனர். இது ஒரு ஆரோக்கியமான விடயமாகும்.

அதேநேரம், கொழும்பு புதிய மகசின் சிறையில் 40 பேரும், அனுராதபுர சிறையில் 27 பேரும், நாட்டில் உள்ள மேலும் பல்வேறு சிறைகளில் 12 பேரும் என மொத்தமாக 79 தமிழ் அரசியல் கைதிகள் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

வயோதிபர்கள், அவயங்கள் பாதிக்கப்பட்டவர்களும் அவர்களில் அடங்குகின்றனர். அவர்கள் நீண்ட காலமாக சிறையில்

06

## அல்லாஹ்வை அதிகமதிகம் புகழுவோம்

அடுத்துவரும் இரண்டொரு தினங்களில் ரமழான் நோன்பு காலம் எம்மிடமிருந்து விடைபெற உள்ளது. அல் குர்அன் அருளப்பட்ட இம்மாதத்தில் அல்லாஹ்வுக்காக நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களின் படி வருடா வருடம் நிறைவேற்றப்படும் கடமையே இது. அருள் வளம் நிறைந்த மாதமாக விளங்கும் ரமழான் ஈருலக வாழ்வுக்கு தேவையான பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்கான சிறந்த பயிற்சிக்களமாகவும் விளங்குகின்றது. இப்பயிற்சியின் ஊடாக மனிதனை பண்படுத்தி நெறிப்படுத்துவதற்கு இஸ்லாம் எதிர்பார்க்கின்றது. அதனால் இம்மாதத்தில் பெற்றுக்கொண்ட பயிற்சியை வாழ்நாள் முழுவதும் எடுத்து நடப்பதில் ஒவ்வொருவரும் உறுதிகொள்ள வேண்டும்.

அதேநேரம் நோன்பு எம்மை விட்டு விடைபெறும் போது அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தி புகழவும் தவறக் கூடாது. ஏனெனில் அவன் இம்மாதத்தில் குர்ஆனை அருளி எமக்கு ஈருலகிற்கும் தேவையான வழிகாட்டல்களை வழங்கி இருப்பவனாவான். இதனை அல் குர்ஆன், 'உங்களுக்கு நேர்வழிகாட்டியதற்காக அவனை நீங்கள் பெருமைப்படுத்த வேண்டும்' (2:185) என்று குறிப்பிட்டுள்ளது.

பொதுவாக ஒருவர் ஒரு கடமையை நிறைவேற்றியதும் அவரில் இயல்பாகவே தற்பெருமை ஏற்படும். அது அவரை தவறானதும் பிழையானதுமான எண்ணங்களுக்கும் பார்வைக்கும் இட்டுச்செல்லலாம். அவ்வறான நிலைக்கு எவரும் உள்ளாகி விடக்கூடாது என்பதற்காகவே ஒரு கடமையை நிறைவேற்றியதும் அவனை நினைவுகூர்ந்து பெருமைப்படுத்தும் ஒழுங்கை அல்லாஹ் ஏற்பாடு செய்து வைத்திருக்கினறான்.

அதனால் கடமையான தொழுகைக்கு பின்னர் அல்லாஹ்வை துதிப்பதும் அவனைப் புகழ்வதும் அவனைப் பெருமைப்படுத்துவதும் விரும்பத்தக்கது என நபிமொழிகள் சுட்டிக்காட்டுகின்றன.

நபி (ஸல்) அவர்கள் தொழுகையை நிறைவு செய்து விட்டார் என்பதை அன்னார் அல்லாஹ்வைப் பெருமைப்படுத்தும் முகமாக தக்பீர் கூறுவதைக் கொண்டே நாங்கள் அறிந்து கொள்வோமென இப்னு அப்பாஸ்( ரலி) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

ஆகவே ரமழான் நோன்பு எம்மிடமிருந்து விடைபெற்று பெருநாள் தொழுகைக்கான பிறை தென்பட்டது முதல் தக்பீர் கூறி அவனை அதிகமதிகம் புகழ்ந்து துதிப்போம்.

**மர்லின் மரிக்கார் ...**

## சினோபார்ம் சீனத் தடுப்பூசியை இலங்கையில் தயாரிக்க தீர்மானம்

### சீனத்தூதுவருடன் அமைச்சர் சன்ன ஜயசுமன பேச்சு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

சீனாவினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள சினோபார்ம் கொரோனா வைரஸ் தடுப்பூசியை இலங்கையில் தயாரிப்பது தொடர்பில் சீன தூதுவருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்டு வருவதாக மருந்து உற்பத்தி விநியோகம் மற்றும் ஒழுங்குபடுத்தல் இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க சீனாவிலிருந்து மூலப்பொருட்களை இலங்கைக்கு கொள்வனவு செய்து சினோபார்ம் தடுப்பூசியை இலங்கையில் தயாரிப்பது தொடர்பில் சீனத் தூதரகமும் ஆர்வமுடன் செயற்படுவதாக இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

அதேவேளை, காலாவதியான கொரோனா வைரஸ் தடுப்பூசிகள் சீனாவிலிருந்து இலங்கைக்கு கொண்டுவரப்பட்டுள்ளதாக பரப்பப்படும் வதந்திகளில் எந்தவித உண்மையும் கிடையாதென்றும் அதனை முற்றாக நிராகரிப்பதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

சீனாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டுள்ள தடுப்பூசிகள் மேலும் இரண்டு வருடங்களுக்கு உபயோகிக்கக் கூடியவை. அவற்றுக்கான காலாவதி காலத்துக்கு இன்னும் இரண்டு வருடங்கள் உள்ளன என்றும் அவர் தெரிவித்தார்.(ஸ)

## கொரோனா வைரஸ் தொற்றுக்கு மற்றுமொரு கர்ப்பிணித்தாய் பலி

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொரோனா வைரஸ் தொற்று நோயாளியான மற்றுமொரு கர்ப்பிணித்தாய் காலி கராப்பிட்டி போதனா வைத்தியசாலையில் மரணமடைந்துள்ளார்.

45 வயதான இக் கர்ப்பிணித்தாய் அக்குரஸ்ஸ வில்பிட்ட பகுதியைச் சேர்ந்தவர் என்றும் அவர் கொழும்பில் நிறுவனமொன்றில் பணிபுரிந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. தனது முதலாவது குழந்தையைப் பெறுவதற்காக தயாரான நிலையிலேயே அத்தாய் மரணமடைந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த ஏப்ரல் 21ம் திகதி அவருக்கு வைரஸ் தொற்று இனம் காணப்பட்டு , அவர் முல்லேரியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். பின்னர் மேலதிக சிகிச்சைக்காக காலி கராப்பிட்டிய வைத்திய சாலைக்கு மாற்றப்பட்டார். அங்கு ஒருவார காலம் சிகிச்சைபெற்று வந்த நிலையிலேயே நேற்று முன் தினம் அவர் உயிரிழந்துள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

அவரது கணவருக்கும் கொரோனா வைரஸ் தொற்று இனம் காணப்பட்டுள்ளது. அவர்களுக்கு எவ்வாறு தொற்று ஏற்பட்டது. என்பது தொடர்பில் இதுவரை கண்டறியப்படவில்லை என்றும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறெனினும் அவர்களோடு நெருங்கிய தொடர்புடைய மேலும் 17 பேர் வைரஸ் தொற்று நோயாளிகளாக இனம் காணப்பட்டுள்ளனர்.

இக்கர்ப்பிணித் தாயுடன் அவரது சிசுவும் மரணமடைந்துள்ள நிலையில் நாட்டில் கொரோனா வைரஸ் காரணமாக மரணமடைந்த இரண்டாவது கர்ப்பிணித்தாய் இவரெனவும் ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. முதலாவது வைரஸ் தொற்றுக்கு இலக்கான கர்ப்பிணித்தாய் கடந்த வாரத்தில் றாகம ஆஸ்பத்திரியில் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

## தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் 104 ஆவது பிறந்த தின நிகழ்வுகள் நாளை

முன்னாள் சபாநாயகரும், முன்னாள் அமைச்சருமான மறைந்த தேசமான்ய எம்.ஏ.பாக்கீர் மாக்காரின் 104 ஆவது பிறந்த தினம் எதிர்வரும் 12 ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது.

இதன் பிரகாரம் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் வருடாந்தம் ஒலிபரப்பப்படும் பன்மொழி சொற்பொழிவுகள் இம்முறையும் ஒலிபரப்பப்படவுள்ளன.

சிங்கள சந்தேஷய சேவையில் இரவு 09.15 மணிக்கு கொழும்பு ரோயல் கல்லூரி ஆரம்பப் பிரிவின் முன்னால் பிரதி அதிபர் ரோஸ் பெர்னான்டோ சொற்பொழிவாற்றுவார்.

தமிழ் சேவையில் இரவு 08.30 மணிக்கு பேராசிரியர் பி.ஏ.ஹுஸைன் மியா சொற்பொழிவாற்றுவார். முஸ்லிம் சேவையில் இரவு 07.40 மணிக்கு அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகளின் சம்மேளத் தேசியத் தலைவர் ஷஹாப்தீன் லுக்மான் சொற்பொழிவாற்றுவார். ஆங்கில சேவையில் மாலை 06.30 மணிக்கு பேராசிரியர் ரவீந்திர பெர்னான்டோ சொற்பொழிவாற்றுவார் .

## நாட்டை முழுமையாக முடக்குவதே சிறந்த நடைமுறையாகலாம்

### விசேட மருத்துவர் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

தற்போதைய சூழ்நிலையில் நாட்டை முழுமையாக தனிமைப்படுத்தலுக்காக முடக்குவது அவசியமென விசேட மருத்துவர்களின் சங்கத் தலைவர் விசேட மருத்துவ நிபுணர் லக்குமார பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தேவையான தீர்மானத்தை மேற்கொள்ளும்வகையில்அரசாங்கத்திற்கு சுகாதார துறை அதிகாரிகள் போதிய தகவல்களை வழங்கத் தவறியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று சமூக பரவலாக விரிவடைந்துள்ளது.

வைரஸ் தொற்றினால் மக்கள் மரணிப்பதற்கு இடமளிக்க முடியாது. உலக சுகாதார நிறுவனம் எதனையும் கூறலாம் எனினும், நாம் எம்மையே ஏமாற்றிகொள்ளக்கூடாது. கிராம சேவை உத்தியோகத்தர் பிரிவு மட்டத்தில் தனிமைப்படுத்தலுக்கான முடக்கத்தை மேற்கொள்வது எந்தவகையிலும் போதுமானதல்ல. மாவட்ட ரீதியிலாவது முடக்கங்களை மேற்கொள்ளவேண்டியது அவசியம். அதன் மூலம் மாவட்டங்களுக்கிடையிலான நடமாட்டங்களை முழுமையாக நிறுத்த முடியும். பலரும் நாட்டை முழுமையாக முடக்குமாறு கேட்டுக் கொள்கின்றனர். சிலர் அந்த சொல் நல்லதல்ல என கூற விழைகின்றனர். அதனை சுகாதார துறையினரும் முறையான வகையில் அரசியல் துறையினருக்கு எடுத்துச் சொல்ல தவறிவிட்டனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## செப்டம்பர் மாதமாகும் போது இலங்கையில் கொரோனா மரணம் 20 ஆயிரத்தைத் தாண்டலாம்

### வொஷிங்டன் பல்கலைக்கழகம் எச்சரிக்கை

அமெரிக்காவின் வொ ஷிங்டன் பல்கலைக்கழக ம திப்பீட்டு நிறுவனத்தின் கணிப்பின்படி தற்போதுள்ள கொ ரோனா வைரஸ் பரவல் வேகத்தைக் கணிப்பிட்டு இவ்வருடம் செப்டெம்பர் முதலாம் திகதி வரையான காலத்தில் இலங்கையின் மொத்த கொரோனா மரண எண்ணிக்கை 20 ஆயிரத்தைத் தாண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோ னா வைரஸ் பரவல் தொடர்பான ஆய்வில் ஈடுபட்டுள்ள மேற்படி நிறுவனம் அது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ஜூன் மாத நடுப்பகுதியில் இலங்கையில் வைரஸ் பரவல் பெரும் அழுத்தங்களுக்கு உள்ளாகும். அந்த காலம்வரை தினமும் இடம்பெறும் மரணங்களின் எண்ணிக்கை 2 0 0 வரை அதிகரிக்கும். அதன் உச்ச அளவு ஜூன் நடுப்பகுதியில் வெளியாகும். அக்காலப்பகுதியில் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை தினமும்

06

## காலாவதியாகும் சாரதி அனுமதி பத்திரங்களுக்கு சலுகைக் காலம்

### மோட்டார் போக்குவரத்து திணைக்களம் அறிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

ஏப்ரல் முதலாம் திகதி முதல் செப்டம்பர் 30ம் திகதி வரையான காலப் பகுதியில் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப்பத்திரங்களுக்கும் சலுகைக் காலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு மோட்டார் போக்குவரத்து திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கிணங்க மேற்படி காலத்துக்குள் காலாவதியாகும் அனைத்து சாரதி அனுமதிப் பத்திரங்களும் காலாவதியாகும் தினத்திலிருந்து மேலும் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகுமென திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சுமித் அழகக்கோன் தெரிவித்துள்ளார். நாட்டில் நிலவும் கொரொனா வைரஸ் அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக அலுவலகக் கடமைகளுக்கு தடை ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி தீர்மானத்தை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அடுத்த வாரத்திலிருந்து மறு அறிவித்தல் வரை போக்குவரத்துத் திணைக்களத்தின் நாரஹேன்பிட்டி மற்றும் வேரஹெர அலுவலகங்கள் மூடப்பட்டிருக்கும் என்றும் அதேவேளை திணைக்களத்தின் பிரதேச அலுவலகங்கள் அனைத்திலும் சேவைகள் மட்டுப்படுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அவசர தேவைகளுக்காக 0112677877 என்ற தொலைபேசி இலக்கம் வழங்கப்பட்டுள்ளதுடன் அதனோடு தொடர்பு கொண்டு நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (ஸ)

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை 2020இல் பிரதிபலிக்கப்பட்டவாறு
பொருளாதாரத்தின் நிலை
சவால்கள் மற்றும் தோற்றப்பாடு
LIVE WEBINAR
zoom
Scan QR to Register or email: thanuja@cbsl.lk or dirukshir@cbsl.lk
LIVE
facebook.com/cbsrilanka
2021 மே 12 புதன்கிழமை
மு.ப. 10.30 மணிக்கு
(தமிழ் மொழி மூலம்)
பேச்சாளர்
முனைவர். (திருமதி.) சுஜீதா ஜெகஜீவன்
மேலதிகப் பணிப்பாளர் - பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி.
CBS
CENTRE FOR BANKING STUDIES
Guide to the future...
வங்கித்தொழில் கற்கைகளுக்கான ஆய்வுநிலையம்
இலங்கை மத்திய வங்கி
☎ 011-2477840, 011-2477821 011-2867384 directorcbs@cbsl.lk

தினகரன்
THINAKARAN

35, டி.ஆர்.விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

பிலவ வருடம் சித்திரை மாதம் 28ம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1442 ரமழான் பிறை 28

### குறள் தரும் சிந்தனை

தவஞ்செய்வார் தங்கருமஞ் செய்வார்மற் றல்லார்
அவஞ்செய்வார் ஆசையுட் பட்டு

தவத்தைச் செய்பவரே தமக்குரிய செயலைச் செய்தவர்; மற்றவர்களோ ஆசை வலைப்பட்டு வீணானவற்றைச் செய்தவர் ஆவர்.

## கொவிட் தரவுகள், தகவல்கள் உணர்த்துகின்ற அபாய அறிகுறி!

நாட்டில் நாளுக்கு நாள் கொவிட் 19 தொற்றுக்கு உள்ளாகின்றவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்ற தற்போதைய சூழலில் வெளிவருகின்ற தரவுகளும் தகவல்களும், மக்கள் பொறுப்புணர்வுடனும் முன்னவதானத்துடனும் செயற்பட வேண்டிய தேவையை வலியுறுத்தி நிற்கின்றன.

இந்நாட்டில் 2020 மார்ச் மாத நடுப்பகுதி முதல் இத்தொற்று பதிவாகத் தொடங்கியது. அது தொடக்கம் நேற்றுமுன்தினம் வரையும் சுமார் ஒரு இலட்சத்து 26 ஆயிரம் பேர் இத்தொற்றுக்கு உள்ளாகியுள்ளனர். அவர்களில் ஒரு இலட்சத்து 5,000 பேரளவில் குணமடைந்துள்ளனர். இத்தொற்றினால் 801 பேர் உயிரிழந்துள்ளனர்.

தற்போது இத்தொற்றின் மூன்றாவது அலை நாட்டில் தோற்றம் பெற்றுள்ளது. கடந்த சிங்கள தமிழ் புத்தாண்டின் பின்னர்தான் இந்நிலைமை ஏற்பட்டிருகின்றது. மக்களது கவனயீனத்தினதும் அசிரத்தையினதும் வெளிப்பாடே இது. சுகாதாரத் தரப்பினர் புத்தாண்டுக்கு முன்னர் வழங்கிய அறிவுரைகளை உரிய ஒழுங்கில் பின்பற்றி சுகாதார வழிகாட்டல்களைப் பேணி செயற்பட்டிருந்தால் இந் நிலைமை ஏற்பட்டிருக்காது என்பதுதான் மருத்துவ நிபுணர்களின் அபிப்பராயமாகும்.

அதேநேரம், தற்போது நாட்டில் தோற்றம் பெற்றுள்ள அலையானது முதலிரு அலைகளை விடவும் மிக வேகமாகப் பரவக் கூடியதாக காணப்படுவதோடு, 30 வயதுக்கும் 60 வயதுக்கும் இடைப்பட்டோரே இத்தொற்றுக்கு அதிகளவில் உள்ளானவர்களாகப் பதிவாகும் நிலைமையும் உருவாகியுள்ளது.

அத்தோடு இத்தொற்றுக்கு உள்ளாகின்றவர்களதும், உயிரிழப்பவர்களதும் தீவிர சிகிச்சைப் பிரிவுகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்படுகின்றவர்களதும் எண்ணிக்கையில் முன்னொரு போதுமே இல்லாத அளவுக்கு அதிகரிப்பும் ஏற்பட்டிருக்கின்றது.

இந்நாட்டில் சுமார் 14 மாத கால வரலாற்றைக் கொண்டிருக்கும் இத்தொற்றுக்கு இப்போதுதான் முதற் தடவையாக அதிகபட்சமாக ஒரே நாளில் 2,659 பேர் நேற்றுமுன்தினம் உள்ளாகினர். ஆனால் கடந்த முதலிரு அலைகளிலும் ஆயிரத்துக்கும் குறைவானவர்களே நாளாந்தம் பதிவாகினர். அதேபோன்று இத்தொற்றினால் 22 பேர் முதற் தடவையாக கடந்த சனியன்று உயிரிழந்தனர் எனப் பதிவாகியது. ஆனால் இதற்கு முன்னரான இரண்டு அலைகளிலும் நாளாந்தம் பத்துக்கும் குறைவான மரணங்களே பதிவாகின.

மேலும் இத்தொற்றின் பரவுதல் வேகம் கடந்த ஒரு வார காலப் பகுதியில் இந்நாட்டில் 82 வீதம் காணப்பட்டதாக பிரபல இணைய தளமொன்று சுட்டக்காட்டியுள்ளது. இக்காலப்பகுதியில் தெற்காசியாவிலுள்ள நேபாளத்தில் இத்தொற்றின் பரவுதல் வேகம் 105 வீதமாகவும் இந்தியாவில் சனத்தொகைக்கு ஏற்ப 11 வீதமாகவும் காணப்பட்டதாகக் அவ்விணைய தளம் குறிப்பிட்டுள்ளது. இதன்படி, இப்பிராந்தியத்தில் இத்தொற்று பரவுதல் வேகம் இலங்கையில் இரண்டாவது இடத்தில் காணப்படுவதாகவும் அந்த இணையதளம் சுட்டிக்காட்டியுள்ளது.

இவை இவ்வாறிருக்க, தற்போது இலங்கையில் பதிவாகும் கொவிட் 19 தொற்றாளர்களின் புள்ளி விபரங்களை அடிப்படையாகக் கொண்டு அமெரிக்காவின் வொஷிங்கடன் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஐ.எச்.எம்.மி என்ற சுயாதீன அமைப்பு மேற்கொண்ட ஆராய்ச்சியில், எதிர்வரும் ஜுன் மாதமாகும் போது இந்நாட்டில் இத்தொற்று மரணங்கள் மேலும் அதிகரிக்கும்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறான சூழலில் இந்நாட்டில் இத்தொற்றின் நான்காவது அலை எதிர்வரும் நவம்பர் மாதமாகும் போது தோற்றம் பெறுமென மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். தற்போது இந் நாட்டில் இத்தொற்றின் மூன்றாவது அலை ஏற்பட்டுள்ள போதிலும், இந்தியாவில் உருவாகி இருப்பதோ இரண்டாவது அலைதான். அதனால் நவம்பர் மாதமாகும் போது இந்நாட்டில் இத்தொற்றின் நான்காவது அலை தோற்றம் பெறுவதற்கான சாத்தியம் அதிகம் என்பதுதான் ஆய்வாளர்களின் கருத்தாகும்.

இவ்வாறான தகவல்களும் தரவுகளும் நாட்டின் ஒவ்வொரு பிரஜையும் விழிப்புணர்வுடனும், முன்னவதானத்துடனும் நடந்து கொள்வதன் அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன. அதனால் எதிர்வரும் நாட்கள் அதிக அவதானத்துக்கும் முன்னெச்சரிக்கும் உரியதாக உள்ளது.

ஆகவே இத்தொற்று தவிர்ப்புக்கான சுகாதார வழிகாட்டல்கள், தனிமைப்படுத்தல் சட்டங்கள் என்பவற்றை உச்சளவில் பேணி நடந்து கொள்ளவும் இத்தொற்று தவிர்ப்புக்கான தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வதிலும் மக்கள் அதிக கவனம் செலுத்த வேண்டும். இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்தவும் அதன் தொற்றுக்கு உள்ளாகின்றவர்களுக்கு சிகிச்சை அளித்து பராமரிக்கவும் தேவையான உச்சபட்ச நடவடிக்கைகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. என்றாலும் இது வேகமாக தொற்றிப் பரவும் தொற்று நோயாக இருப்பதால் மக்கள் பொறுப்புணர்வுடனும் முன்னெச்சரிக்கைகளுடனும் செயற்படுவதே மிகவும் அவசியமானது. அதுவே இத்தொற்றின் பரவுதலைக் கட்டுப்படுத்துவதற்கான உச்ச பங்களிப்பாக அமையும்.

editor.tkn@lakehouse.lk

---

# மேற்கு வங்கத்தில் அசைக்க இயலாத துணிச்சல் பெண்!

இந்தியாவில் இடதுசாரிகளின் கோட்டையாக 34 வருடங்களாக விளங்கிய மேற்குவங்க மாநிலமானது, இடதுசாரி ஜாம்பவான் ஜோதிபாசுவின் மறைவிற்குப் பிறகு இடதுசாரிகளின் கையிலிருந்து நழுவத் தொடங்கியது. அவர் மறைந்த பிறகும் தொடர்ந்து ஒரு தடவை இடதுசாரிகள் வென்று ஆட்சி செய்தனர். ஆனால் மம்தா பானர்ஜி காங்கிரசிலிருந்து பிரிந்து 1998இல் திரிணாமுல் காங்கிரஸ் கட்சியைத் தொடங்கி 13 வருடங்களில் காங்கிரஸ் ஆதரவுடன் ஆட்சியைப் பிடித்தார்.

அவர் ஆளத்தொடங்கி 10 வருடங்களில் இடதுசாரிகளை இருந்த இடமே தெரியாமல் ஆக்கி விட்டார். ஆனால் 'பிள்ளையார் பிடிக்கப் போய் பூதம் புறப்பட்ட கதையாக' மேற்கு வங்கத்தில் முகவரியே தெரியாது இருந்த பாரதிய ஜனதா கட்சி, இடதுசாரிகள் மற்றும் காங்கிரசின் மறைவோடு இந்த மாநிலத்தில் விஸ்வரூபம் எடுக்கத் தொடங்கியது. பாரதிய ஜனதா வங்கத்தில் முகவரி தெரியாத கட்சி என்று ஒரேயடியாக சொல்லி விடவும் முடியாது. பாரதிய ஜனதாவின் முன்னோடிகளாக 1940,1950களில் விளங்கிய ஆர்.எஸ்.எஸ், ஜனசங்கம் முதலியவற்றுக்கு வித்திட்ட ஷியாமா பிரசாத் முகர்ஜி, தீன் தயாள் உபாத்யாயா போன்றோர் வங்காளிகளே.

எனவே வங்காள மண் பி.ஜே.பிக்கு புதிதன்று. அதே போல் தேர்தல் விஷயத்தில் வாஜ்பாய் முதலில் ஆட்சியமைத்த காலத்திலேயே அதாவது 1998இல் பி.ஜே.பிக்கு வங்காளத்தில் எம்.பிக்கள் தெரிவாகினர். மத்திய அமைச்சராக வாஜ்பாய் அரசில் நியமிக்கப்பட்ட தபன் சிக்தர் அவர்களில் பிரதானமானவர்.

இந்தப் பின்னணியை தெளிவாகப் புரிந்து வைத்திருந்த நரேந்திரமோடியும், அமித் ஷாவும் ஒவ்வொரு மாநிலமாக காங்கிரசிடமிருந்து கபளீகரம் செய்து முடித்து விட்டு இனி வங்காளத்தில் கைவைக்கலாமென முடிவு செய்தனர்.

அதற்கு ஏதுவாக மம்தாவும் சில அரசியல் தவறுகளை விடத் தொடங்கினார். இடதுசாரிகளை முற்றாக வேரறுக்கும் முயற்சியில் அவர் மும்முரமாக இருக்க, பா.ஜ.க மதவாத பிரசாரத்தில் இறங்கியது. வங்காள சனத்தொகையில் மூன்றிலொரு பங்கினர் முஸ்லிம்கள். இவர்களில் பெரும்பான்மையினர் முன்பு இடதுசாரிகளுக்கும், சிறுபிரிவினர் காங்கிரசுக்கும் வாக்களித்து வந்தனர். இந்துக்களில் பெரும் பகுதி இடதுசாரிகளுக்கு வாக்களித்ததால்தான் 34 வருடங்கள் தொடர்ந்து இடதுசாரிகளால் ஆள முடிந்தது. காங்கிரஸ் தவிர்ந்து வேறொரு கட்சி இந்தியாவின் எந்த மாநிலத்திலும் இவ்வாறு ஆட்சி செய்ததே இல்லை. அந்த இடதுசாரி சாம்ராஜியத்தின் ஜாம்பவான் ஜோதிபாசுவும் இன்று இல்லை, அவரது ஆட்சியும் அவருடன் இருந்த இடம் தெரியாது போய் விட்டது.

மதச்சார்பின்மையே மையக் கொள்கை என்று ஆண்ட இடதுசாரிகளுக்கு நேர் மாறான பாரதிய ஜனதா இன்று அதே இடதுசாரி வாக்கு வங்கியை கபளீகரம் செய்து கொண்டுள்ளது. இதன் அர்த்தம் யாதெனில் 34 ஆண்டுகளாக இடதுசாரிகளுக்கு வாக்களித்த மக்கள் உளப்பூர்வமாக மாக்ஸிய இடதுசாரி கொள்கைகளை விளங்கிக் கொண்டு வாக்களித்தவர்கள் அல்ல. இந்தியாவில் கல்வியறிவில் மிகவும் பின்தங்கிய மாநிலங்களில் மேற்கு வங்காளமும் ஒன்று. ஏதோ 'கும்பலில் கோவிந்தா' என்று இடதுசாரிகளுக்கு 34 வருடம் வாக்களித்து விட்டு இப்போது அந்த சித்தாந்தத்துக்கு நேரே திராகத் திரும்பி பி.ஜே.பிக்கு வாக்களிக்கிறார்கள்.

அதற்கு மம்தாவும் காரணம்தான். வென்று ஆட்சியைப் பிடித்தவுடன் இடதுசாரிகளின் ஆதரவாளர்களை அரவணைத்து தன்பக்கம் திரும்பாமல் அவர்களை துன்புறுத்த இடமளித்தார். அதனால் பி.ஜே.பி வளர முடிந்தது. பூச்சியத்தில் இருந்து கடந்த 2019 லோக்சபா தேர்தலில் 18 எம்.பிக்களை பெறுமளவுக்கு பி.ஜே.பி பெரும் முன்னேற்றம் கண்டது. 18 லோக்சபா தொகுதிகளில், 121 சட்டசபைதொகுதிகளில் பி.ஜே.பி மம்தாவின் கட்சியை முந்தியது. மொத்தமுள்ளவை 294 சட்டசபை தொகுதிகள். இன்னும் 25 தொகுதிகளை வென்றால் பெருபான்மை தானே என மோடி கருதினார்.

ஆனால் வங்க மக்கள் படிப்பறிவில் குறைந்தாலும் லோக்சபா தேர்தல், சட்டசபை தேர்தல் என பிரித்து பார்க்க தெரிந்தவர்கள். 2019இல் நடந்தது லோக்சபா தேர்தல். அதில் பிரதமர் தெரிவு செய்யப் படுவார், அதற்கு மோடிதான் சரியானவர் என்றும் தற்போது நடந்து முடிந்தது சட்டசபை தேர்தல். அதில் முதல்வராக தகுதியானார் மம்தா என்றும் வங்க மக்கள் தீர்மானித்தனர்.

பி.ஜே.பியோ பெரும் ஆரவாரமாக பிரசாரம் தொடங்கியது. மோடி, அமித்ஷா 100 கூட்டங்களில் அதுவும் கொரோனா காலத்தில் பேசி முடித்தனர். அதுவும் 7 கட்டமாக நடந்த வங்காளத் தேர்தலில் கடைசி இரண்டு கட்ட பிரசாரத்தை நடத்த முடியாது, கொரோனா எல்லை மீறிவிட்டது என்று உச்சநீதிமன்றம் தடை விதித்து விட்டது. கடைசி இரு கட்ட தேர்தல் பிரசார ரத்து பி.ஜே.பிக்கு பெரும் பின்னடைவாக முடிந்தது.

## சவாலை நேருக்குநேர் எதிர்கொண்டதால் தொகுதியில் மாத்திரம் தோல்வியுற்ற மம்தா! ஆனாலும் தந்திரங்கள் பலிக்காததால் மண் கவ்வியது பா.ஜ.க!

இதுதவிர பி.ஜே.பியின் முதலமைச்சர் யார் என பி.ஜே.பியால் அறிவிக்க முடியவில்லை. மறுபுறம் மம்தா அசைக்கமுடியாத முதல்வர் வேட்பாளராக மக்களால் அறியப்பட்டிருந்தார். வெற்றிகரமான இந்திய முன்னாள் கிரிக்கட் கப்டன் கங்குலி வங்காள அரச குடும்பம் ஒன்றைச் சேர்ந்தவர். அவரை தன் கட்சிக்குள் இழுத்து முதல்வர் வேட்பாளராக்க பி.ஜே.பி முயன்றது. அவரோ கிரிக்கட் நிர்வாகத்தில் உச்சத்துக்கு வருவதையே தனது முன்னுரிமையாக கொண்டுள்ளார். 50 வயதுக்குள் இந்திய கிரிக்கட் கட்டுப்பாட்டு சபையின் தலைவராகவும் வந்தே விட்டார். இந்திய கிரிக்கட் சபை கிரிக்கட் உலகில் சக்தி வாய்ந்த கிரிக்கட் சபையாகும். சர்வதேச கிரிக்கட் கவுன்சில் தலைவராவதற்கும் கங்குலி முயற்சித்து வருகிறார். தவிர, மம்தாவுடன் நேரடியாக மோதவும் அவர் விரும்பவில்லை.

பி.ஜே. மூக்குடைப்பட்டதே இறுதியில் நடந்தது..5 மாநிலங்களில் தேர்தல் நடந்தாலும் மேற்குவங்க தேர்தல்தான் முக்கியமாக கூர்ந்து அவதானிக்கப்பட்டது. மம்தாவா, மோடியா என்பதே எதிர்பார்ப்பு. பி.ஜே.பி மட்டும் வென்றிருந்தால் அதன் கர்வம் மேலோங்கியிருக்கும். அந்தத் தேர்தலில் மற்றொரு முக்கிய அம்சம் முஸ்லிம்கள் காங்கிரசையும் இடதுசாரிகளையும் முற்றாகக் கைவிட்டு முற்றுமுழுதாக மம்தாவை ஆதரித்தமையாகும். பி.ஜே.பி வெற்றி பெறக் கூடாது என்ற தந்திரோபாய வாக்களிப்பை வங்காள முஸ்லிம்கள் செய்துள்ளனர்.

2019 லோக்சபா தேர்தலில் 294 சட்டசபை தொகுதிகளில் 121 இடங்களில் முன்னிலை வகித்த பி.ஜே.பி இம்முறை வாக்குகள் எண்ணி முடிந்த போது 77 தொகுதிகளில்தான் முன்னிலை பெற்றது. தேர்தல் நெருங்க நெருங்க மம்தா கட்சியின் பல மூத்த தலைவர்களை பி.ஜே.பி விலைக்கு வாங்கியிருந்தது. சுவேந்து அதிகாரி, முகுல்ராய் என மூத்த தலைவர்கள் பி.ஜே.பி இற்குப் படையெடுத்தனர். எனவே பி.ஜே.பிற்கு வெற்றிதான் என பலதரப்பிலும் முழக்கமிடப்பட்டது. ஆனால் இரண்டாம் நிலை தலைவர்களைக் கொண்டு மம்தா வென்றுள்ளார்.

இதில் முக்கிய விடயம் மம்தாவால் வளர்க்கப்பட்ட சுவேந்து அதிகாரி,அமைச்சர் பதவியெல்லாம் அனுபவித்து விட்டு கடைசியில் மம்தா முதுகில் குத்தி விட்டு பி.ஜே.பிக்கு தாவினார். அத்தோடு நில்லாது தனது தொகுதியியான நந்திகிராமில் போட்டியிட்டு பார்க்குமாறு மம்தாவுக்கு சவாலும் விட்டார். மம்தாவும் ஏற்றுக் கொண்டு வெல்லக் கூடிய தொகுதிகள் 213 இருக்கையில், அதை விட்டு விட்டு துணிச்சலாக நந்திகிராமில் களமிறங்கி 1200 வாக்குகளால் தனது சிஷ்யரிடம் தோற்றார். அவர் நினைத்தால் வேறொரு தொகுதியிலும் சேர்த்துப் போட்டியிட்டிருக்கலாம். சவால் என்றால் சவாலேதான்.

அமைச்சர் பதவியை துறந்து பி.ஜே.பிக்கு வெற்றிதான் என்று அடித்துக் கூறிய அவர், இப்போது மம்தாவை தொகுதியில் தோற்கடித்தாலும் பி.ஜே.பி மாநிலத்தில் தோற்றதால் இனி அமைச்சர் பதவி அவருக்குக் கிடையாது. போர்க்குணம் கொண்ட மம்தா மோடியை வீழ்த்தியே விட்டார். பா.ஜ.கவின் வீழ்ச்சி மேற்கு வங்காளத்தில் தொடங்கி விட்டதா என்ற கேள்வியும் எழுகிறது.

**டொக்டர்**
**எஸ். சுரேந்திரஜித்...**

---

# கர்ப்பிணித் தாய்மார் பாதுகாப்பில் கணவன்மாருக்கு பெரும் பொறுப்பு

நாட்டில் கொவிட்19 தொற்றின் பரவல் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்ற நிலையில், கர்ப்பிணித் தாய்மார் அவதானத்துடனும் பொறுப்புடனும் செயல்பட வேண்டியது மிகவும் அவசியமாகும் .இதில் கணவன்மார்களின் பொறுப்பும் முறையாகவும் நேர்த்தியாகவும் அமைய வேண்டியது பிரதானம். கர்ப்பிணித் தாய்க்கு கொவிட் தொற்று ஏற்பட்டால் சிக்கல்கள் ஏற்படக் கூடிய வாய்ப்புகள் அதிகமாக இருப்பதாக சுகாதார ஊக்குவிப்பு பணியகம் அறிவுறுத்துகின்றது.

சுகாதார அமைச்சின் சுகாதார ஊக்குவிப்பு பணியகமும் இதனை பல வழிகளிலும் வலியுறுத்தி வருகின்றது.தேசத்தின் தாய்மாரினதும் எதிர்கால சிறுவர் பரம்பரையினதும் நல்வாழ்விற்காக இந்த அறிவுறுத்தலை மக்கள்மயப்படுத்துமாறும் பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

கொவிட் தொற்று தீவிரமடைந்துள்ள நிலையில், கர்ப்பிணித் தாய்மார்களும் கருவிலுள்ள சிசுவும் சிறந்த ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டியது கட்டாய தேவையாகும்.இதற்காக கர்ப்பிணித் தாய்மார் சுகதாரப் பாதுகாப்பு வழிமுறைகளை முறையாக கடைப்பிடிப்பதுடன், தமக்கான சுகாதார ஆலோசனைகளையும் மற்றும் சேவைகளையும் கிரமமாகப் பெற்றுக் கொள்வதும் அத்தியாவசியமானதாகும்.

கர்ப்பிணி தாய்மார்கள் கிளினிக் அல்லது வைத்தியசாலைக்கு செல்ல நெர்ந்தால் ,கொவிட் 19 தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கான ஆலோசனைகளை தவறாது பின்பற்றல் வேண்டும்.

கர்ப்பிணித் தாய்மார்கள் காற்றோட்டம் இல்லாத இடத்தில் தரித்திருப்பதை முடிந்தளவில் தவிர்த்துக் கொள்ள வேண்டும். எப்போதும் முகக் கவசத்தை முறையாக அணிதல் வேண்டும்.ஆட்களுக்கிடையிலான இடைவெளி பேணல், சனக் கூட்டம் வரும் இடங்களுக்குப் போகாதிருத்தல், எப்போதும் சவர்க்காரம் கொண்டு கைகளைக் கழுவி சுத்தம் பேணல் என்பன முறையாகப் பின்பற்றப்பட வேண்டும்.

### கோவிட் விழிப்புணர்வு எவ்வேளையிலும் அவசியம்

கொவிட் நோய்ப் பயத்தினால் கர்ப்பிணித் தாய்மார் உரிய நேரத்தில் கிளினிக் மற்றும் சிகிச்சைகளைப் பெறுவதில் தாமதம் காட்டக் கூடாது. உரிய சிகிச்சை தவறினால் கர்ப்பிணித் தாய்க்கும் கருவிலுள்ள சிசுவின் ஆரோக்கியத்துக்கும் இடையூறு ஏற்படலாம். கொவிட் ஆபத்து அதிகரிப்பு காலத்தில் வழமையான சுகாதார சேவைகளில் தடைகள் ஏற்படலாம்.

இதனால் பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி அல்லது குடும்ப நல சுகாதார உத்தியோகத்தரை தொடர்பு கொண்டு ஏற்பாடுகளை செய்து கொள்ள வேண்டும். மேலும் கர்ப்ப காலத்தில் ஏற்படக் கூடிய காய்ச்சல், குருதிப் பெருக்கு, கடுமையான தலைவலி, சுவாசத்தில் சிரமம், பார்வைக் குறைவு, வலிப்பு, நெஞ்சு மற்றும் வயிற்றில் நோவு, சிசுவின் துடிப்புக் குறைவு , உடல் வீக்கம் என்பவற்றுடன்மேலும் கடினமான அசௌகரிய நிலை என்பன ஆபத்தான சமிக்கைகளாக அடையாளம் காணப்பட முடியும் என சுகாதார ஊக்குவிப்பு பணியகம் மேலும் தெரிவித்துள்ளது.

அத்துடன் இவ்வாறான அறிகுறிகள் தென்பட்டால் உடன் வைத்திய ஆலோசனை பெறுமாறும் வலியுறுத்தப்பட்டுள்ளது. கர்ப்பிணித் தாய்மார்களின் கணவன்மார் பல்வகை தொழில்துறைகளையும் சேர்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் கர்ப்பிணி மற்றும் கருவிலுள்ள சிசுவின் ஆரோக்கியத்துக்குப் பொருத்தமான விதத்தில் கொவிட் நோய்க் காப்புக்கான சுகாதார வழிமுறைகளை கணவன்மார் முறையாகப் பேணல் வேண்டும்.

தமது தொழில் மற்றும்அன்றாடப் பணிகளுக்காக பல்வேறு இடங்களுக்கும் சென்று விட்டு சுகாதார வழிமுறைகளைப் பேணாமல் கர்ப்பிணித் தாயுடன் சமூக இடைவெளி பேணாமல், தொற்றின் தாக்கத்தை உணராது அவதானமின்றிப் பழகினால் கொடுமையான தொற்றிலிருந்து தாயையும் சிசுவையும் மாத்திரமன்றி குடும்பத்தையே பாதுகாப்பதில் உத்தரவாதமில்லாது போய்விடும்.

எனவே,கர்ப்பிணிகள் மாத்திரமன்றி, வீட்டிலுள்ள அனைவரும் சுகாதார வழிமுறைகளை முறையாகப் பேணல் மிகவும் அவசியமானதாகும். இதன் மூலம்தான் துரதிருஷ்டமான நிலைமைகளைத் தவிர்க்க முடியும்.

**எம்.எஸ்.எம்.முன்தஸிர்**
(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

# முஸ்லிம்களின் உரிமைகளை பெற்றுக் கொள்ள ரி.பி.ஜாயா வழியில் பயணித்த பாக்கீர் மார்க்கார்

### அன்னாரின் 104 வது பிறந்த தினம் நாளை

முன்னாள் சபாநாயகர் மர்ஹூம் எம். ஏ பாக்கீர் மார்க்கார் மீது சிங்கள மக்கள் கொண்டுள்ள மதிப்பு அதிகமாகும். அவர் ஏனைய அரசியல்வாதிகளுக்கு முன்மாதிரியான ஓர் அரசியல்வாதியாக திகழ்ந்தார். மர்ஹூம் எம். ஏ. பாக்கீர் மார்க்காரின் குடும்பத்துக்கு சிங்கள சமூகத்தின் மத்தியில் இவ்வாறான ஒரு தனி கௌரவம் கிடைப்பதற்கான காரணம் அவரது தனிமனித ஆளுமையாகும்.

மர்ஹூம் எம். ஏ. பாக்கீர் மார்க்காரின் அரசியல் ஆதர்ச குருவாக பல இடங்களிலும் மர்ஹூம் ரீ. பி. ஜாயா சொல்லப்படுகின்றார். அவரின் வாழ்க்கையை ஆய்வு செய்கின்ற போது அவரின் அரசியலில் மட்டுமல்ல அவரின் முழு ஆளுமைக் கட்டமைப்பிலும் ரீ. பீ. ஜாயாவின் தாக்கத்தை அவதானிக்கலாம்.

ரீ. பீ. ஜாயா அமைச்சரவையின் உறுப்பினராக இருந்த போது, இலங்கைக்கு சுதந்திரம் வழங்குவது தொடர்பான விவாதம் மந்திரி சபையில் நடைபெற்றது. அவர் இந்த விவாதத்தில் உரையாற்றுகின்ற போது, சுதந்திரத்துக்காக எந்தவொரு கோரிக்கையையும் முஸ்லிம் சமூகம் முன்வைப்பதில்லை என்றும் முஸ்லிம்களின் உரிமைகளை அவர்களது மூத்த சகோதரர்களான சிங்கள மக்கள் பாதுகாத்து தருவார்கள் என்ற நம்பிக்கை இருப்பதாகவும் குறிப்பிட்டார். "பெரும்பான்மைச் சமூகத்தின் மீது வைக்கின்ற நம்பிக்கையும் பரஸ்பர விட்டுக்கொடுப்பும் சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகளைப் பாதுகாத்துத் தரும்" என்ற திடமான நம்பிக்கை அவரிடம் இருந்தது. சிறுபான்மையினரின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கும், பாதுகாத்துக் கொள்வதற்கும் புதிய ஒரு வழியை ரீ. பீ. ஜாயா காட்டினார்.

### இனங்களுக்கு இடையில் உருவாகின்ற பிரச்சினைகளுக்கு அரசியலில் தீர்வு இல்லை. மாறாக, அதற்கான தீர்வு நம்பிக்கையிலும் பரஸ்பர விட்டுக் கொடுப்பிலுமே இருக்கின்றது

அவர் சிறுபான்மையினரான முஸ்லிம் சமூகத்தின் உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்கு பெரிய போராட்டங்களை செய்யவில்லை. ஜாயாவின் வழியை நடைமுறையில் செயற்படுத்திக் காட்டியவராக மர்ஹூம் எம். ஏ. பாக்கீர் மார்க்கார் இருக்கின்றார். அவரின் குடும்பமும் அந்த வழியில் தான் பயணிக்கின்றது.

பாக்கீர் மார்க்கார் பேருவளை நகரை சபைத் தலைவராக இருந்த போது, 1953ஆம் ஆண்டு நடைபெற்ற ஒரு நகர சபை மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்க வேண்டும் என்ற பிரேரணையை முன்வைத்தார். அந்தப் பிரேரணை நிறைவேற்றப்பட்டது. அகில இலங்கை முஸ்லிம் லீக் கூட்டத்தில் சிங்களத்தை அரசகரும மொழியாக்குவதன் அவசியத்தை அவர் வலியுறுத்திப் பேசினார். இதனால் முஸ்லிம்கள் பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தின் கௌரவத்துக்கும் மதிப்புக்கும் பாத்திரமானார்கள்.

அந்த கௌரவமும் மதிப்பும் இன்று வரையும் பாக்கீர் மார்க்காரின் குடும்பத்தில் நிலை கொண்டுள்ளது. அதிகமான தேரர்கள் இன்று வரையும் பாக்கீர் மார்க்காரின் குடும்பத்தை ஆதரிக்கின்றனர். அதிகமான சிங்கள மக்கள் எம். ஏ. பாக்கீர் மார்க்காரின் குடும்பத்தில் தோன்றிய அரசயல்வாதிகளைப் பற்றி நல்ல கருத்துகளையே பதிவு செய்கின்றனர்.

மர்ஹூம் பாக்கீர் மார்க்காரின் நடை, உடை, பாவனை என்ற அனைத்து விடயங்களும் இலங்கையின் தேசிய கலாசாரத்துக்குப் பொருத்தமானதாக இருந்தன. அவர் அரசியல் கூட்டங்களில் உரையாற்றுகின்ற போது, புத்தர் பெருமானின் தர்ம பதங்களை மேற்கோள் காட்டிப் பேசினார். சிங்கள மக்கள் எம். ஏ. பாக்கீர் மார்க்காரை முஸ்லிம் இனத்தைச் சேர்ந்த ஒருவராக நோக்கவில்லை. அவர்கள் அவரை தங்களில் ஒருவராகவே நோக்கினார்கள்.

பாக்கீர் மார்க்கார் சிங்கள மக்களுடன் ஒன்றித்து வாழ்ந்தாலும், அவர் தான் ஒரு முஸ்லிம் என்ற தனித்துவத்தை இழக்கவில்லை. இதனை பாக்கீர் மார்க்காரின் குடும்பத்திலும் காணலாம். தனது சமய அடையாளத்தையும் பாதுகாத்துக் கொண்டு, சிங்கள மக்களில் ஒருவராக இருந்து கொண்டு அவர்களின் மதிப்பையும் கௌரவத்தையும் பெற்றுக் கொண்டதன் மூலம் அவர் ஒரு விஷேட தனிமனித ஆளுமையாக முஸ்லிம் சமூகத்துக்கு இனங் காட்டப்படுகின்றார்.

பாராளுமன்றத்தின் பத்தொன்பதாவது சபாநாயகராக இருந்த கரு ஜயசூரிய முன்னாள் சபாநாயகரான மர்ஹூம் எம். ஏ. பாக்கீர் மார்க்கரைப் பற்றிச் சொன்ன ஒரு கூற்றை இந்த இடத்தில் மேற்கோள் காட்ட முடியும். அதுவே எம். ஏ. பாக்கீர் மார்க்கரைப் பற்றிய சிறந்த வரைவிலக்கணமாக இருக்கின்றது. இதனை அவர் மர்ஹூம் எம். ஏ. பாக்கீர் மார்க்காரின் 21ஆவது வருட நினைவு தின விழாவில் சொன்னார். அவர் பின்வருமாறு சொன்னார்.

"இலங்கைப் பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரான எம். ஏ. பாக்கீர் மார்க்கார் ஓர் இனவாதியாக இருக்கவில்லை. ஒரு மதவாதியாகவும் இருக்கவில்லை. அவர் இனங்களுக்கு இடையில் நெருப்பை மூட்டவில்லை. அவர் அரசியலுக்கு முன்மாதிரியாக இருந்தார். அவர் இந்த நாட்டின் சிறந்த குடிமகனாக இருந்தார். அவர் ஒரு சிறந்த முஸ்லிம் பக்தனாக இருந்தார். இவற்றை நாம் எம். ஏ. பாக்கீர் மார்க்காரின் குடும்பத்திலும் காண்கிறோம்."

இந்த வரைவிலக்கணம் இன்றைய காலத்தில் நடைமுறையில் இருக்கின்ற அதிகமான பிரச்சினைகளுக்குத் தீர்வாக இருக்கின்றது. இன்றைய காலத்தில் பெரும்பான்மையான சிங்கள சமூகத்தால் தாங்கள் பாதிப்புக்கு உட்படுவதாக முஸ்லிம்களில் ஒரு தரப்பினர் கருதுகின்ற நிலை உருவாகி இருக்கின்றது.

இந்த நிலையில் சில பிரச்சினைகளின் போது முஸ்லிம் அமைப்புகளும் முஸ்லிம்களும் அதனைக் கையாளுகின்ற விதம் ஒருவகையான போராட்டத்தை ஒத்த தோற்றத்தைக் கொடுக்கின்றது. ஒரு போராட்டத்தின் முடிவு ஒரு பெரிய அழிவாகத்தான் இருக்கும். அதற்கு வரலாற்றில் நிறையப் பாடங்கள் இருக்கின்றன. போராட்டம் எமது முன்னோரின் முன்மாதிரி அல்ல.

இனங்களுக்கு இடையில் உருவாகின்ற பிரச்சினைகளுக்கு அரசியலில் தீர்வு இல்லை. மாறாக அதற்கான தீர்வு நம்பிக்கையிலும் பரஸ்பர விட்டுக் கொடுப்பிலுமே இருக்கின்றது. இந்த இடத்திலேதான் இலங்கை முஸ்லிம் சமூகம் முன்னாள் சபாநாயகரான மர்ஹூம் பாக்கீர் மார்க்காரை முன்மாதிரியாகக் கொள்ள வேண்டி இருக்கின்றது.

ஓர் இலங்கை முஸ்லிம் குடிமகனாக அவர் விட்டுச் சென்ற முன்மாதிரிகள் தற்போது இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளாக இருக்கின்றன. அவரின் முன்மாதிரிகளை இலங்கை முஸ்லிம்கள் பின்பற்றுகின்ற பட்சத்தில் பாக்கீர் மார்க்காரின் குடும்பத்துக்கு சிங்கள சமூகத்தின் மத்தியில் கிடைக்கின்ற கௌரவமும் மதிப்பும் இயல்பாகவே முழு முஸ்லிம் சமூகத்துக்கும் கிடைக்கும். அதனால், முஸ்லிம்களுக்கு ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளும் தீர்வு கிடைத்து, முஸ்லிம்கள் இந்த நாட்டில் கௌரவமாகவும் கண்ணியமாகவும் வாழ்வார்கள். எம். ஏ. பாக்கீர் மார்க்காரை நினைவுபடுத்துகின்ற இந்தக் காலத்தில் இந்தக் கட்டுரையினூடாக சொல்லக் கூடிய சிறந்த செய்தியாக அதுவே இருக்கின்றது.

**மபாஸ் ஸனூன்...**
(விரிவுரையாளர்)
கிழக்குப் பல்கலைக்கழகம்

---

# இலங்கையில் சிறுவர் பாதுகாப்புக்கென வலுவான சட்டங்கள்

ஊடகங்களில் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் செய்திகள் வெளிவராத நாளே இல்லை எனலாம். அதேபோன்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் அவசர உதவி அழைப்பு இலக்கமான 1929 இற்கும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் தொடர்பில் தினந்தோறும் முறைப்பாடுகள் கிடைத்து வருகின்றன.

சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையின் தரவுகளின்படி 2019ம் ஆண்டில் மட்டும் சிறுமிகள் மீதான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் 294 முறைப்பாடுகள் கிடைத்திருந்தன. இவற்றில் 288 முறைப்பாடுகள் மிக மோசமான பாலியல் வல்லுறவு சம்பவங்களாகும். சிறுமிகள் மீதான இவ்வாறான பாலியல் துஷ்பிரயோக சம்பவங்களினால் இளவயது கர்ப்பம், கருச்சிதைவு, சிறுபராயத்திலேயே தாய்மை அடைதல் போன்ற மேலதிக பாதிப்புகளை சிறுமிகள் எதிர்கொள்கின்றனர்.

2012 முதல் 2020 வரையிலான காலப் பகுதியில் இலங்கையில் 5891 சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் பதிவாகியுள்ளதுடன், இலங்கையில் சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் 21.9 சதவீதம் அதிகரித்து வருவதாக யுனிசெப் நடத்திய அண்மைய ஆய்வொன்றில் தெரியவந்துள்ளது. இந்த தரவுகள் அனைத்துமே சிறுவர்கள் தொடர்பிலும் அவர்கள் பாதுகாப்பு தொடர்பிலும் ஆழ்ந்த கவலையை ஏற்படுத்தும் விடயங்களாக உள்ளன.

சிறுவர்கள் தமக்குள் எந்தவொரு வேறுபாடுகளுமின்றி உரிமைகளை அனுபவிக்கும் உரிமையைக் கொண்டிருக்கின்றனர். சர்வதேச சிறுவர்கள் அனுபவிக்கும் சகல அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளையும் இலங்கையில் உள்ள சகல சிறுவர்களும் அனுபவிக்கக் கூடியவாறான உரிமைகளும் சட்டரீதியாக வழங்கப்பட்டுள்ளன.

### சட்டத்துறை சார்ந்தோர் கூறுகின்ற கருத்துகள்



குறிப்பாக பாலியல் வல்லுறவுகளிலிருந்து பாதுகாத்துக் கொள்ளும் உரிமை, சித்திரவதை குரூரமாக நடத்துதல் மற்றும் தண்டனைகளிலிருந்து தவிர்த்துக் கொள்ளும் உரிமை, சுதந்திரத்திற்கும் பாதுகாப்பிற்குமான உரிமை என்பன சர்வதேச ரீதியில் சிறுவர்களுக்குரிய உரிமைகளாகும்.

**சிறுவர்களைப் பெரிதும் பாதிக்கும் துஷ்பிரயோகங்கள்:**

சிறுவர்களை உடல் ரீதியாக அல்லது உணர்வு ரீதியாக பீதியடையச் செய்தல், பாலியல் ரீதியில் துஷ்பிரயோகம் மற்றும் துன்புறுத்தல், புறக்கணித்தல், வர்த்தகம் அல்லது வேறு விடயங்களுக்காக அவர்களை சுரண்டுதல் போன்றவற்றின் மூலம் அவர்களின் ஆரோக்கியம் உயிர் வாழ்தல், வளர்ச்சி மற்றும் கௌரவம் போன்றவற்றுக்கும் பாதிப்பை ஏற்படுத்துதல் போன்றவை சிறுவர் துஷ்பிரயோகங்கள் எனப்படுகின்றன.

அதேபோன்று பெற்றோர் அல்லது பராமரிப்பாளரின் கவனயீனம், அவர்களின் அக்கறையற்ற தன்மையின் காரணமாக ஏற்படும் காயம், மரணம், உணர்ச்சி ரீதியான பாதிப்பு அல்லது ஒரு குழந்தைக்கு பாரிய தீங்கு ஏற்படக் கூடிய ஆபத்தான நிலை என்பனவும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் எனப்படுகின்றன.

இலங்கையில் சுமார் 80 சதவீதமான சிறுவர்கள் அறியாமையினாலேயே பாலியல் துஷ்பிரயோகத்திற்கு ஆளாகின்றனர் என 'சேவ் த சில்ரன்' அமைப்பு கூறுகின்றது. இலங்கையில் உள்ள சிறுவர்கள் பாலியல் மட்டுமல்ல குடும்ப வன்முறைகளினாலும் அதிகம் பாதிக்கப்படுகின்றனர். சிறுவர் துஷ்பிரயோகங்களில் அதிகமானவை நம்பிக்கைக்குரிய நெருங்கிய உறவினர்களாலே பெரும்பாலும் ஏற்படுத்தப்படுகின்றன என்று சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை குறிப்பிடுகின்றது.

'இவரால் பிள்ளைக்கு நிச்சயம் பாதிப்பு வராது' என்று ஒருவரை முற்று முழுதாக நம்பி பிள்ளைகளை ஒப்படைத்து விட்டு செல்லும் போதே இவ்வாறான பரவலான சம்பவங்கள் இடம்பெற்றிருக்கின்றன.

கொவிட் தொற்றினால் இலங்கை நாடளாவிய ரீதியில் முடக்கப்பட்ட சந்தர்ப்பத்தில் சிறுவர் மீதான வன்முறைகள் தொடர்பான முறைப்பாடுகள் அதிகளவில் அதிகாரசபைக்கு கிடைத்திருந்தமையும் இங்கு கவனத்திற்குரிய விடயமாகும். நாடு முடக்கப்பட்ட நிலையில் பிள்ளைகள் ஒன்று பெற்றோருடன் இருந்திருப்பார்கள் அல்லது பாதுகாவலர்களிடம் இருந்திருப்பார்கள். வேலியே பயிரை மேய்ந்த கதையாக இங்கு அறிந்தவர்களினால், நெருங்கியவர்களினால் சிறுவர்களின் உரிமைகள் மீறப்பட்டிருந்தன என்பது தெளிவாகின்றது.

சிறுவர் துஷ்பிரயோகங்கள் சிதைவுற்ற குடும்பங்களில்தான் அதிகம் இடம்பெறுகின்றன என்பது மற்றுமொரு உண்மையாகும். அதாவது குடும்பத்தாரால், தாய் அல்லது தந்தையால் கைவிடப்பட்ட பிள்ளைகள், குடும்ப வாழ்வாதார பிரச்சினைகளுக்காக வெளிநாடு செல்லும் பெற்றோரின் பிள்ளைகள்தான் அதிகம் பாலியல், உடலியல். உளவியல் ரீதியான கொடுமைக்கு ஆளாகுகின்றனர் என்று சிறுவர் உரிமைகள் தொடர்பாக செயற்படும் ஆர்வலர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.

**சிறுவர்களை பாதுகாக்கும் சட்டங்களும், பாதுகாப்பும்:**

பெற்றோரின் பாதுகாப்பைப் பெறுவதற்கு சிறுவர்களுக்கு உரிமை உண்டு. அதேவேளை பெற்றோரிடமிருந்து தனிமைப்படுத்தப்படாதிருப்பதற்கான உரிமையும் சிறுவர்களுக்கு உண்டு. ஆனால் தங்கள் உரிமைகள் மீறப்படுவதனைக் கூட அறியாத குரலற்ற, நலிவுற்ற தரப்பினராகவே பல சிறுவர்கள் உள்ளனர்.

இந்நிலையில் இலங்கையில் சிறுவர்களுக்கு சட்டப் பாதுகாப்பு உள்ளதா என்பது தொடர்பாக வினவிய பொழுது கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினரும், சட்டத்தரணியுமான ரவூப் ஹக்கீம் கூறுகையில், "சிறுவர்களின் பாதுகாப்பு சம்பந்தமாக எமது நாட்டில் மிகவும் கவனம் செலுத்தப்படுகின்றது. சர்வதேச சட்டம் ஒன்றிற்கு அமைவாக குறிப்பாக ஐ.நா சபையின் தீர்மானங்களை அடியொட்டி இங்கு தனியான சிறுவர் பாதுகாப்பு சட்டமூலம் ஒன்று அமுலில் இருக்கிறது. இதனடிப்படையில் சிறுவர் துஷ்பிரயோகம் மற்றும் சிறுவர்களுடைய பாதுகாப்பு குறித்த பல விவகாரங்களில் மிக கடினமான ஆழமான பல சட்ட நடைமுறைகள் இன்று அமுலில் இருக்கின்றன. குறிப்பாக இதனடிப்படையில் குழந்தைகளுக்கு சிறுவர்களுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கென அவர்களுக்கென பிரத்தியேகமான நீதிமன்ற ஏற்பாடுகளும் செய்யப்பட்டிருக்கின்றன. பாதிக்கப்பட்ட சிறார்களுக்கு உளரீதியான பாதிப்புகள் வராத அடிப்படையிலே இந்த ஏற்பாடுகளை எமது நாடு சட்டமூலமாக செயற்படுத்தி வருகின்றது" என்று குறிப்பிட்டார்.

"சிறுவர்களுடைய செயற்பாடுகளில் அவர்களுடைய பாதுகாப்பினை உறுதி செய்வதற்காக பொலிஸ் நிலையங்களில் கூட பிரத்தியேகமான பயிற்றுவிக்கப்பட்ட பொலிஸ் அதிகாரிகள் குறிப்பாக சிறுவர்கள் பராமரிப்பு அதே போல பெண்களுடைய விவகாரங்களுக்கான பிரத்தியேக பெண் பொலிஸ் அதிகாரிகளை நியமித்து இருக்கிறார்கள். இவ்வாறான பிரத்தியேக ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதும் விசேடமானதாகும்" என்று ரவூப் ஹக்கீம் மேலும் குறிப்பிட்டார்.

### ஆனாலும் நீதி கிடைப்பதில் நிலவுகின்ற காலதாமதங்கள், குறைபாடுகள் நீக்கப்பட்டாலேயே குற்றமிழைத்தோருக்கு உரிய தண்டனையும், பாதிக்கப்படும் சிறார்களுக்கு நீதியும் கிடைக்கும்

இதேவேளை "சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு எதிராக இலங்கையில் சட்டங்கள் போதுமானதாக இருந்தாலும், இச்சட்டங்களை சரியான முறையில் அமுல்படுத்துவதில் பிரச்சினைகள் உள்ளன" என்று 'சேவ் த சில்ரன்ஸ்' அமைப்பின் கொள்கை மற்றும் ஆய்வு இயக்குநர் ரன்ஞன் வெத்தசிங்க தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில், "சிறுவர் தொடர்பான வழக்குகளுக்கான தீர்வினைப் பெறுவதற்கு ஐந்து முதல் பத்து வருடங்கள் வரை காத்திருக்க நேரிடுகின்றது. எனவே சிறுவர்களின் வழக்குகள் தொடர்பில் நீதியைப் பெற்றுக் கொடுப்பதற்கு வழக்கு விசாரணைகள் துரிதப்படுத்த வேண்டும்" என்றார் அவர். இதே கருத்தினை வலியுறுத்திய சட்டத்தரணி நதீஹா அப்பாஸ், "சிறுவர்களுக்கு எதிரான குற்றங்கள் நிரூபிக்கப்படுவதன் கடினத் தன்மை காரணமாக வழக்கு விசாரணைகள் தாமதமாவதால் தண்டனைகள் கொடுக்க போதுமான சான்றுகள் கிடைக்காமல் போகின்றன. பாலியல் ரீதியில் பாதிக்கப்பட்ட சிறுவர்களை ஆராய்ந்து சாட்சி எடுக்கும் போது சிறுவர்கள் அச்சந்தர்ப்பத்தில் உண்மையைக் கூறினாலும், மேலும் சில காலத்துக்கு பின்னர் வேறு நீதிமன்றங்களில் சாட்சியத்தை விசாரிக்கும் போது பாதிக்கப்பட்ட பிள்ளை நடந்த சம்பவத்தை மறந்து போகின்றது. எனவே இதனால் பாதிக்கப்பட்டவருக்கு சாதகமான தீர்ப்பை வழங்க முடியாமல் போகின்றது" என்று குறிப்பிட்டார்.

சிறுவர்களுக்கான சட்டம், பாதுகாப்பு, உரிமைகள் என்பன இலங்கையில் இருந்தாலும் நடைமுறையில் அவை சிறப்பாக அமுலாக்கப்படல் வேண்டும் என்று சட்டத்தரணி நதீஹா அப்பாஸ் மேலும் வலியுறுத்தினார். குற்றம் சுமத்தப்பட்டவருக்கு தண்டனை பெற்றுக் கொடுப்பதற்கு பல வருடங்கள் வரை காத்திருக்க வேண்டியுள்ளதால், பெரிய அளவில் வழக்குகள் நீதிமன்றத்தில் தேங்கிக் கிடக்கின்றன.

நிலைமை இவ்வாறிருக்கையில், இலங்கையில் பொலிஸ் நிலையங்களில் காணப்படும் வளப் பற்றாக்குறைகள் மற்றும் அனைத்து பொலிஸ் நிலையங்களிலும் பெண் பொலிஸ் அதிகாரிகள் போதியளவு இன்மை போன்றவை காரணமாக பாதிக்கப்படும் சிறுவர்களுக்கான நீதி தாமதமடைகின்றது என்று சட்டத்தரணி நதீஹா அப்பாஸ் கூறுகின்றார்.

**சில்மியா யூசுப்...**

---

# வெறிச்சோடியது தமிழ்நாடு!

கொரோனா பரவலைக் கட்டுப்படுத்த நேற்று முதல் தமிழகத்தில் முழு ஊரடங்கு அமுலுக்கு வந்துள்ளது. எதிர்வரும் 24 ஆம் திகதி வரை 2 வாரங்களுக்கு இந்த ஊரடங்கு கடைப்பிடிக்கப்படும். முழு ஊரடங்கு காரணமாக நேற்று வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன.

அரசு துறைகளில் மின்சாரம், குடிநீர், உள்ளாட்சி துறை உள்ளிட்ட முக்கிய அலுவலகங்கள் தவிர அனைத்து அலுவலகங்களும் செயல்படுவதற்கு தடைவிதிக்கப்பட்டு இருந்ததால் பெரும்பாலான அரசு அலுவலகங்களும் இயங்கவில்லை.

கடைகள் முழுமையாக மூடப்பட்டன. வழிபாட்டு தலங்களில் திருவிழா, குடமுழுக்கு நடத்துவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை. பக்தர்கள் இல்லாமல் கோவில்களில் பூஜைகள் மட்டும் நடைபெற்றன.

மக்களிடம் கண்ணியம் பேணியபடி ஊரடங்கை அமுல் நடத்தும் பொலிசார்

மாவட்டங்களுக்கு இடையேயான பொது போக்குவரத்து முழுமையாக நிறுத்தப்பட்டது. அரசு மற்றும் தனியார் பேருந்துகள், வாடகை கார்கள், ஆட்டோக்கள் ஆகியவை முற்றிலுமாக நிறுத்தப்பட்டு இருந்தன. அதேநேரத்தில் அத்தியாவசிய தேவைகளுக்கான வாகனங்கள் வழக்கம் போல் இயங்கின.

முழு ஊரடங்கு காரணமாக சென்னை உள்பட அனைத்து மாவட்டங்களிலும் பொது மக்களின் இயல்பு நிலை பாதிக்கப்பட்டு இருந்தது. அத்தியாவசிய வாகனங்கள் மட்டுமே ஓடியதால் வீதிகள் பரபரப்பின்றி காணப்பட்டன.

தமிழகம் முழுவதும் ஐ.டி. நிவனங்களில் பணிபுரிவோர் வீடுகளில் இருந்து பணியாற்ற அறிவுறுத்தப்பட்டிருந்தது. இதனால் சென்னையில் அனைத்து நிறுவனங்களும் மூடப்பட்டு இருந்தன. அங்கு பணியாற்றும் ஊழியர்கள் வீடுகளில் இருந்தே பணிகளை மேற்கொண்டனர். முழு ஊரடங்கில் தடையை மீறி தேவையின்றி வெளியில் சுற்றுபவர்களை பிடிக்க பொலிசார் ரோந்து பணியில் ஈடுபட்டு இருந்தனர்.

சென்னையில் 200 இடங்களில் வாகன சோதனை நடத்தப்பட்டது. முகக்கவசம் அணியாதவர்கள், சமூக இடைவெளியை பின்பற்றாதவர்கள் உள்ளிட்டோர் மீதும், தேவையின்றி வெளியில் வந்தவர்கள் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டது.

கடந்த ஆண்டு முழு ஊரடங்கு கடைபிடிக்கப்பட்டபோது பல இடங்களில் பொலிசார் கடுமையாக நடந்து கொண்டதாக குற்றச்சாட்டு எழுந்தது. இந்த நிலையில் ஊரடங்கு தடையை மீறி வெளியில் வருபவர்களிடம் கெடுபிடி காட்டக் கூடாது என்று டி.ஜி.பி. திரிபாதி, சென்னை பொலிஸ் கமிஷனர் சங்கர் ஜிவால் ஆகியோர் பொலிசாருக்கு அறிவுரை வழங்கி இருந்தனர்.

இதனை ஏற்று இன்று பல இடங்களில் தடையை மீறி வெளியில் சுற்றியவர்களை பிடித்த பொலிசார் வழக்குப்பதிவு செய்து எச்சரித்து அனுப்பினர். கெடுபிடியுடன் நடந்து கொள்ளவில்லை. இதற்கு மாறாக கொரோனா விழிப்புணர்வு பிரசாரங்களை தீவிரமாக மேற்கொண்டனர். தடையை மீறி வெளியில் சுற்றியவர்களின் வாகனங்களை பொலிசார் புகைப்படம் எடுத்து வழக்கு போட்டனர். அதிகாரிகளின் அறிவுறுத்தலின் பேரில் எந்த வாகனங்களையும் வீதியில் பறிமுதல் செய்யவில்லை. வழக்கு தாக்கல் செய்த சில நிமிடங்கள் கழித்து வாகனங்களை விடுவித்தனர்.

பொலிசார் முகக்கவசம் அணிந்து பணியாற்றினர். விசாரணையின் போது சமூக இடைவெளியை முழுமையாக கடைப்பிடித்தனர்.

# இவ்வாரத்திற்குள் தடுப்பூசி வழங்கத் தவறினால் அடுத்தவாரம் முதல் தொடர் வேலைநிறுத்தம்

## தனியார்பஸ் உரிமையாளர் சங்க தலைவர் கெமுனு விஜேரத்ன

**லோரன்ஸ் செல்வநாயகம்**

அனைத்து தனியார் பஸ் சாரதிகள் மற்றும் ஊழியர்களுக்கு இந்த வாரத்திற்குள் கொரோனா வைரஸ் தடுப்பூசி பெற்றுக்கொடுக்கப்படாவிட்டால் எதிர்வரும் 17ம் திகதி முதல் தொடர் வேலைநிறுத்தப் போராட்டமொன்றை மேற்கொள்ளப் போவதாக தனியார் பஸ் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரத்ன தெரிவித்தார்.

நாட்டில் கொரோனா வைரஸ் தொற்று அச்சுறுத்தல் சூழ்நிலை நிலவும் நிலையில் தனியார் பஸ் ஊழியர்களுக்கு உடனடியாக அரசாங்கம் தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க வேண்டும் என்றும் அவ்வாறின்றேல் எதிர்வரும் 17ம் திகதி முதல் வேலைநிறுத்தப் போராட்டத்தை மேற்கொள்ளப் போவதாகவும் அவர் தெரிவித்தார . தற்போது நாட்டின் பல்வேறு பகுதிகளில் தனியார் பஸ் சாரதிகள் மற்றும் ஊழியர்கள் பெருமளவில் கொரோனா வைரஸ் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். பயணிகளுடன் அதிகமான கால த்தை கழிக்கும் பஸ் ஊழியர்கள் மற்று ம் ரயில் உட்பட போக்குவரத்து துறையில் பணியாற்றும் அனைத்து ஊழியர்களுக்கும் விரைவாக தடுப்பூசியை பெற்றுக்கொடுக்க அரசாங்கம் நடவடிக்கையெடுக்க வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டுள்ளார். (ஸ)

## அரசியல் கைதிகள் விடுதலை... 03ஆம் பக்க தொடர்...

தடுத்துவைக்கப்பட்டுள்ளதால் பல நோய் தொற்றுகளுக்கும் ஆளாகியுள்ளனர். சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருப்பவர்கள் விடுவிக்கப்பட வேண்டும் என தெரிவித்து போராட்டங்களில் ஈடுப்பட்ட அவர்களது பெற்றோர்களில் பலரும் தற்போது உயிருடன் இல்லை.

கொரோனா வைரஸ் காரணமாக சிறையில் ஏற்பட்டுள்ள நெருக்கடியினை குறைப்பதற்காக விசேட ஏற்பாடுகளின் கீழ் ஆயிரக்கணக்கான கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

ஆனால் தமிழ் அரசியல் கைதிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

எனவே இந்த சந்தர்ப்பத்திலாவது அவர்களை விடுதலை செய்வதற்கு தமிழ் தேசிய கட்சிகள் ஒன்றிணைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என அரசியல் கைதிகளின் உறவினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

## செப்டம்பர் மாதமாகும் போது... 03ஆம் பக்க தொடர்...

264 ஆக அமையலாம் என்று தெரிவித்துள்ளது.

அதன் பின்னர் அன்றாடம் ஏற்படும் மரணங்கள் குறைவடைந்து செப்டம்பர் 1ம் திகதிக்குள் 88 ஆகக் குறைவடையலாம் என்றும் அந்த நிறுவனம் வெளியிட்டுள்ள கருத்துக் கணிப்பில் தெரிவித்துள்ளது. (ஸ)

## நாட்டை 3 வாரங்கள் முடக்கி...

இதுவரை 6 நாடுகளின் கொரோனா வைரஸ்கள் நம் நாட்டுக்கு வந்து சேர்ந்துள்ளன. இன்று கர்ப்பிணி தாய்மார்களும், பச்சை பாலகர்களும் சாகிறார்கள்.

வாஷிங்டன் பல்கலைக்கழகத்தின் ஐஎச்எம்ஈ நிறுவனத்தின் இலங்கை பற்றிய ஆய்வில், இப்படியே போனால், இலங்கையில் செப்டம்பர் மாதமளவில் 20,000 பேர் வரை மரணிக்கவும், தினசரி மரணம் 200 ஐ கடக்கவும் வாய்ப்புள்ளதாக கூறப்பட்டுள்ளது.

நாட்டில் மக்கள் தெருக்களில் செத்து மடியும் நிலைமையும் ஏற்படலாம் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்பி கூறியுள்ளார்.

ஆரம்பத்தில் கொரோனாவால், வயதானவர்கள் மட்டுமே சாவார்கள் என கூறப்பட்டது.

இன்று கர்ப்பிணிகள் சாகிறார்கள், குழந்தைகள் சாகிறார்கள். கொரோனா கிருமியின் வீரியம் அதிகரித்து விட்டது.

சீனா, தென்னாபிரிக்கா, நைஜீரியா, டென்மார்க், இந்தியா, இங்கிலாந்து ஆகிய நாடுகளின் திரிபடைந்த கொரோனா கிருமிகள் இன்று எம் நாட்டில் உள்ளன.

இன்று நாட்டில் நாள் ஒன்றுக்கு 2600 நோயாளிகள் இனங்காணப்படுகிறார்கள். நேற்று முன்தினம் 22 பேர் மரணித்தார்கள். இவை கணக்கில் எடுக்கப்பட்டவை மட்டுமே. இவற்றை தவிர இன்னமும் உள்ளனவா என் தேடிப்பார்க்க வேண்டும்.

அரசாங்கம் நாட்டை முடக்க மறுப்பது ஏன்? நாட்டை மூடிவிட்டு, ஒவ்வொரு குடும்பத்துக்கும் ரூ. 20,000 வழங்க வேண்டும். நாளாந்த சம்பளம் பெறுவோர், சுய தொழில் செய்வோர் என எத்தனை குடும்பங்களுக்கு பணம் கொடுக்க வேண்டும் என கணக்கெடுப்பு செய்து, அனைத்து அபிவிருத்தி திட்டங்கள், புதிய வீதிகள், புதிய உடற்பயிற்சி ஜிம்கள் ஆகியவற்றை இடைநிறுத்தி வைத்து விட்டு, ஒரு குடும்பத்துக்கு 20,000 ரூபாய் வழங்க வேண்டும் எனவும் அவர் கோரியுள்ளார்.

## கொவிட்19 பரவுவதை...

அதேவேளை பிற மாவட்டங்களிலும் கொவிட்19 தடுப்பூசி திட்டத்தை துரிதப்படுத்துதல்.

2.அனைத்து சுகாதார பிரிவுகளிலும் தற்போது செயல்படுத்தப்பட்டுள்ள தடுப்பூசி மையங்களின் எண்ணிக்கையை இரட்டிப்பாக்குதல்.

3.பி.சி.ஆர் சோதனைகளின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவும், மாவட்ட அளவில் ஆய்வகங்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதன் மூலம் விரைவான சோதனைகளின் எண்ணிக்கையை அதிகரித்தல்.

4.தற்போது சோதனைக்காக சேகரிக்கப்பட்டு வரும் மாதிரிகளின் சோதனை அறிக்கைகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுத்தல்.

5.பி.சி.ஆர் சோதனைக்கு உட்பட்டவர்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியேறுவதைத் தடுப்பதற்கான திட்டத்தை உருவாக்குதல்.

6. தற்போது அமைக்கப்பட்டுள்ள சிகிச்சை மையங்களுக்குத் தேவையான ஒக்ஸிஜன் மற்றும் பிற வசதிகளை விரைவுபடுத்துவதற்கும், பிற மருத்துவ உபகரணங்களை விரைவில் மையங்களுக்கு வாங்குவதற்கும் நடவடிக்கையெடுத்தல்.

7.மாவட்ட அளவில் பி.சி.ஆர் ஆய்வகங்களின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், தேவையான நிதி ஒதுக்கீடுகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுமென அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி இந்தக் கூட்டத்தில் சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பாக ஒரு அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

இராஜாங்க அமைச்சர் வைத்தியர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே, இராஜாங்க அமைச்சர் சன்ன ஜெயசுமன, சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க, மேலதிக செயலாளர்கள் மற்றும் பிரதி பணிப்பாளர்கள், நிபுணர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் இந்த மதிப்பாய்வு கூட்டத்தில் கலந்துகொண்டனர்.

## குழந்தை இறந்த சோகத்தில்...

குழந்தை 18 நாட்களில் இறந்துபோனதால் துயரம் தாங்காமல் முதலில் நஞ்சருந்தி தந்தை உயிரிழந்துள்ளார். கணவன் உயிரிழந்த சோகத்தால் மனைவியும், இறந்த கணவனின் கையிலிருந்து எஞ்சிய நஞ்சை அருந்தி அதே நாளில் உயிரிழந்துள்ளார். இந்தச் சோக சம்பவம் யாழ்ப்பாணம் நகர்ப் பகுதியில் வியாழக்கிழமை நடைபெற்றுள்ளது.

மட்டக்களப்பை சொந்த இடமாகக் கொண்ட 32 வயது நகைத் தொழிலாளி ஒருவர் யாழ். கல்வியங்காட்டுப் பகுதியிலுள்ள பெண் ஒருவரை திருமணம் செய்துள்ளார்.

இவர்கள் இருவருக்கும் கடந்த 10 வருடங்களாக குழந்தைப் பாக்கியம் கிடைக்கவில்லை என்பதால் வைத்தியம் மற்றும் தெய்வ தரினங்களைச் செய்து வந்த இவர்களுக்கு இந்த வருடம் குழந்தை பிறந்துள்ளது.

அந்தக் குழந்தை பிறந்து சுமார் 15 நாட்களுக்கு மேலாக வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தது. எனினும் சிகிச்சை பலனின்றி அக்குழந்தை உயிரிழந்துள்ளது.

குழந்தை இறந்த இந்தச் சோகத்தை தாங்க முடியாது தந்தை நஞ்சருந்தியுள்ளார்.

இதனையறிந்த சக தொழிலாளர்கள் மனைவிக்கு தகவல் கொடுத்தனர். சம்பவ இடத்துக்கு வந்த மனைவி கணவரின் உயிரைக் காப்பாற்ற உடனடியாக வைத்தியசாலைக்குக் கொண்டு சென்றுள்ளார்.

இருப்பினும் அவர் உயிரிழந்துவிட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர். குழந்தை மற்றும் கணவரின் இழப்பை தாங்கிக் கொள்ள முடியாத அவர் இறந்த கணவரின் கையில் இருந்து மிகுதி நஞ்சை எடுத்து தானும் குடித்துள்ளார்.

இதனால் அவரும் சம்பவம் நடைபெற்ற அரை மணி நேரத்திற்குள் உயிரிழந்துள்ளார். யாழ்.நகர்ப் பகுதியில் நடந்த இச்சம்பவம் அனைவரையும் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

## இந்தியாவில் நிர்க்கதியாகி தவிக்கும்...

சென்றிருக்கும் இலங்கையர்களை மீண்டும் நாட்டிற்கு அழைத்து வருவதற்கான வேலைத்திட்டமொன்று எதிர்வரும் வாரத்திலிருந்து முன்னெடுக்கப்படுமென சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

கம்பஹா மாவட்டத்தில் நிர்மாணிக்கப்பட்டுவரும், இரண்டாயிரம் கட்டில்களைக் கொண்ட கொவிட் மத்திய நிலையத்தை பார்வையிட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சுகாதாரத் துறையின் அறிவுறுத்தல்களின்படியே இந்திய சுற்றுலாப் பயணிகளை அழைத்து வருவதுடன் அங்கு நிர்கதியாகியுள்ள இலங்கையர்களையும் அழைத்து வருகிறோம்.

இந்தியாவில் இருந்து சுற்றுலாப் பயணிகளை அழைத்துவரும் பணி தற்காலிகமாக இரண்டு வாரங்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளது. அதே போன்று ஏனைய சுற்றுலாப் பயணிகள் குறித்தும் ஒரு சிறப்பு திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

சுகாதார காரணங்களுக்காக அல்லது பிற தேவைகளுக்காக இந்தியாவுக்குச் சென்ற இலங்கையர்களை திருப்பி அழைத்துவர ஒரு சிறப்பு திட்டத்தை செயல்படுத்துவதை விரைவுபடுத்தியுள்ளோம்.

அவர்கள் அடுத்த வாரம் வர முடியாது.ஒரு வாரத்திற்குப் பிறகு அவர்களை ஒழுங்கமைக்கப்பட்ட முறையில் நாட்டிற்கு அழைத்து வர உத்தேசித்துள்ளோம்.

எந்தவொரு சூழ்நிலையையும் எதிர்கொள்ளும் வகையில் விமான நிலையத்தை ஏற்பாடு செய்துள்ளோம்.

எனவே, புதிய முறைகளைப் பின்பற்ற வேண்டிய அவசியமில்லை. இருப்பினும், நாங்கள் மிகவும் கவனமாக இருக்குமாறு அறவிவுறுத்தியுள்ளோம். இலங்கையில் மட்டுமல்ல, உலகம் முழுவதிலும் உள்ள சுற்றுலாத் துறை தற்போது நெருக்கடியில் உள்ளது. எனவே இந்த தொற்றுநோயுடன் வாழ நாம் பழக வேண்டும்.

சுற்றுலாத் துறையில் ஈடுபடுவோருக்கு பிற வருமான ஆதாரங்களை உருவாக்க முயற்சிக்கிறோம்.

இதுபோன்ற ஒரு தருணத்தில் ஓர் அரசாங்கத்திற்குகூட சுற்றுலாத் துறையில் ஈடுபடுவோரை எவ்வாறு பாதுகாப்பது என்பது குறித்து ஒரு பெரிய பிரச்சினை எழுகிறது. எனவே, இந்த நேரத்தில் அத்தகைய திட்டம் அவசியம்.

இந்தியா மீதான தற்போதைய பயணக் கட்டுப்பாடுகள் இரண்டு வாரங்களில் மதிப்பாய்வு செய்யப்பட வேண்டும்.

அந்த மதிப்பாய்வுக்குப் பிறகு, முன்னோக்கி செல்லும் வழியில் தேவையான முடிவுகளை எடுக்க நாங்கள் தயாராக உள்ளோம் என்றார்.

## அவசியமான தீர்மானத்தை...

வேறு மாற்றுவழிகள் குறித்தும் அரசாங்கம் கவனம் செலுத்திவருவதாக கூறிய அவர், அவசியமாக நிலைமையில் சில பகுதிகள் மூடப்பட்டுள்ளதுடன், நிலைமை சரியான பின்னர் மீளத்திறக்கப்படுவதாகவும் குறிப்பிட்டார். இதுதவிர, வேறு நடவடிக்கை குறித்தும் அரசாங்கம் சிந்தித்து நடவடிக்கையை எடுக்கும். நிலைமை தொடர்ந்தும் உக்கிரமடைந்தால் அவசியமான தீர்மானத்தை எடுக்க அரசாங்கம் தயாராவதாகவும் அவர் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி தலைமையகத்தில் நடந்த ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவித்த அவர்,

எமது நாட்டிற்கு மிகப்பெரிய பிரச்சினையாக கோவிட்19 தொற்று காணப்படுகின்றது. தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்வதற்கான அனைத்து நிதி ஒதுக்கீடுகளையும் அரசாங்கம் செய்திருப்பதோடு அதுசார்ந்த எந்த சந்தேகமும், நெருக்கடியும் இல்லை. தடுப்பூசியை பெற்றுக்கொள்வதில் உள்ள தாமதமே இன்று பிரச்சினையாகவுள்ளது. தடுப்பூசிகளை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களின் ஆய்வுகூடங்களில் சில நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இந்தியாவின் பூனே பகுதியிலுள்ள தடுப்பூசி உற்பத்தி நிறுவனமாகிய சீரம் நிறுவனம் நெருக்கடியை சந்தித்துள்ளது. இந்தியாவில் ஏற்பட்டுள்ள பாரதூர நிலைமையே இதற்கு காரணமாகும். இதனால் தடுப்பூசியை பெறுவதிலுள்ள தாமதமானது எமது நாட்டிற்கான பிரச்சினை மாத்திரமல்ல. இதுவரை 03 வகையிலான தடுப்பூசிகள் எமது நாட்டில் பயன்படுத்தப்படுகின்றன.

மாகாண மற்றும் மாவட்ட மட்டங்களில் அவசியமான தருணத்தில் பயணக்கட்டுப்பாடு விதித்து அமுல்படுத்தவும் அரசாங்கம் தயாராகவுள்ளது. ஆரம்பத்திலேயே எந்த நடவடிக்கையையும் நாங்கள் நிராகரிக்கல்லை. கொரோனா தொற்று நோய் நிலைமை நாளுக்குநாள் மாற்றமடைகிறது. அதனால் அதனைக்கட்டுப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகள் குறித்தும் ஆராய்ந்து அமுல்படுத்த அரசாங்கம் தயாரகின்றது.

மக்களின் ஜீவனோபாயம் பற்றியும் கவனம் செலுத்தப்படுகிறது. நிலைமை தொடர்ந்தும் உக்கிரமடைந்து வந்தால் அவசியமான தீர்மானத்தை எடுக்க அரசாங்கம் தயாராகின்றது என்றார்.

## நிலைமையை கருத்திற் கொண்டு...

கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் நிச்சயம் அதனை செயற்படுத்துவோம். தேவை ஏற்படாவிடின் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட மாட்டாது என்று இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

எனினும் மருத்துவ நிபுணர்களின் ஆலோசனைகள் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசனைக்கு அமையவே இது குறித்த தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றும் இராணுவத்தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா சுட்டிக்காட்டினார்.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை ரமழான் விடுமுறை மற்றும் அடுத்த நாட்களில் வார இறுதி விடுமுறை என்பதால் போக்குவரத்து கட்டுப்பாடுகள் விதிக்கப்படுமா என்பது தொடர்பில் தெளிவுபடுத்தும் போதே இராணுவத்தளபதி இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் ,

நாட்டில் தற்போதுள்ள நிலைமையைக் கருத்திற் கொண்டு முழு நாட்டையும் முடக்காமல் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படும் பிரதேசங்களை மாத்திரம் தனிமைப்படுத்தும் செயற்பாடுகளே முன்னெடுக்கப்படுகின்றன.

அதற்கமைய இதுவரையில் (நேற்று முன்தினம் மாலை வரை) 6 பொலிஸ் பிரிவுகளும், 114 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

இலங்கையில் சுமார் 44,400 இற்கும் அதிகமான கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் காணப்படுகின்ற நிலையில், மிகக் குறைந்தளவானவையே தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

எனினும் ரமழான் பண்டிகையுடனான நீண்ட விடுமுறைக்கு இன்னும் சில நாட்கள் உள்ளன.

இதற்கு இடைப்பட்ட நாட்களில் நிலைமையைக் கருத்திற் கொண்டு, போக்குவரத்து கட்டுப்பாடுகளை விதிக்க வேண்டிய தேவை ஏற்பட்டால் நிச்சயம் அதனை செயற்படுத்துவோம்.

தேவை ஏற்படாவிடின் அவ்வாறான தீர்மானம் எடுக்கப்பட மாட்டாது.

அடுத்தடுத்த வாரங்கள் தொடர்பில் சுகாதார நிபுணர்களுடன் கலந்தாலோசனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதற்கமையவும் ஜனாதிபதியின் ஆலோசனைகளுக்கமையவும் நாட்டுக்கு தேவையான பொறுத்தமான தீர்மானம் எடுக்கப்படும்.

அத்தோடு இனங்காணப்படும் தொற்றாளர்களுக்கு பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் 2000 இற்கும் அதிகளவானோருக்கு ஒரே நேரத்தில் சிகிச்சையளிக்கக் கூடியவாறான வைத்தியசாலை இராணுவத்தினரால் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலைக்கான வைத்தியர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதோடு, தாதிகளும் ஏனைய ஊழியர்களும் இரு தினங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர்.

எனவே நாட்டில் தொற்றாளர்கள் இனங்காணப்பட்டாலும் அவர்களுக்கு சிகிச்சையளிப்பதில் எவ்வித நெருக்கடியும் ஏற்படாது என்றார்.

## நாட்டை முற்றாக முடக்கும்... 03ஆம் பக்க தொடர்...

தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க, பயணத் தடை மட்டுப்படுத்தி கொரோனா வைரஸ் பரவல் நடவடிக்கையை மேற்கொள்வது முதன்மை நடவடிக்கையாக முன்னெடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்று நோயாளிகள் எண்ணிக்கை குறிப்பிட்டளவு அதிகரிக்குமானால் மாகாணங்களுக்கிடையில் பயணத் தடையை விதிப்பதற்கு நேரும் என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் தொற்று பரவல் அச்சுறுத்தல் சூழ்நிலை காரணமாக நாடளாவிய ரீதியில் பொலிஸ் நிர்வாக பிரிவுகள் மற்றும் நூற்றுக்கும் மேற்பட்ட கிராமசேவை உத்தியோகத்தர் பிரிவுகள் தனிமைப்படுத்தலுக்காக முடக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறெனினும், முழு நாட்டையும் முடக்கவேண்டிய அவசியம் தற்போதைக்கு கிடையாது என அரசாங்கம் தெரிவித்துள்ளது. (ஸ)

## ஆறு அடி தள்ளி இருந்தாலும்...

மையம் புதிதாக வெளியிட்டுள்ள வழிகாட்டுதலில், கொரோனா தொற்றுள்ளோரிடம் இருந்து வெளிப்படும் வைரஸ் காற்றில் கலந்து ஆறடிக்கு அப்பால் உள்ள ஒருவருக்கும் தொற்ற வாய்ப்புள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது. காற்றோட்டம் குறைந்த, கூட்டம் அதிகமுள்ள உள்ளரங்கத்தில் தொற்றுள்ளோரின் சளியில் இருந்து வெளிப்படும் வைரஸ் அங்குள்ள பிறருக்குத் தொற்றும் அபாயம் உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளது.

## முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடினால்...

எதிர்வரும் மே 18 ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தலைக் கடைப்பிடிப்பதற்காக முள்ளிவாய்க்கால் மண்ணில் மக்கள், அரசியல்வாதிகள் என்று எவர் ஒன்றுகூடினாலும் அனைவரும் கைது செய்யப்படுவார்கள் என அவர் எச்சரித்துள்ளார்.

கோவிட் பரவுவதை கட்டுப்படுத்துவதற்காக பல்வேறு விடயங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

கடந்த 3 ஆம் திகதியிலிருந்து அரச மற்றும் தனியார் நிகழ்வுகள் மற்றும் நயினாதீவில் இடம்பெறவிருந்த வெசாக் நிகழ்வுகளும் நிறுத்தப்பட்டுள்ளன.

அத்துடன் கொவிட் கட்டுப்பாட்டுக்காக விசேட வர்த்தமானியும் வெளியிடப்பட்டுள்ளது.

நினைவுகூரலுக்கு மக்கள் முள்ளிவாய்க்காலில் ஒன்றுகூடினால் அரசில்வாதிகள், மக்கள் என்ற வேறுபாடு இல்லாது கைது செய்யப்படுவார்கள் என இராணுவத்தளபதி எச்சரித்துள்ளார்.

## பொதுப் போக்குவரத்து பயன்பாடு;...

செயற்திட்டமொன்று நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

சுகாதாரத் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்க மேற்படி செயற்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதுடன் அதனை மீறி செயற்படுவோருக்கு எதிராக கடும் சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

புதிய நடைமுறைக்கிணங்க பொதுப்போக்குரத்து பஸ்களில் ஆசனத்திற்கு மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே பணிகளை ஏற்றிச் செல்ல முடியும் என்றும் அத்துடன் வாடகை முச்சக்கர வண்டிகளில் சாரதிக்கு மேலதிகமாக 2 பேர் மாத்திரமே பயணிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். மேற்படி செயற்திட்டம் தொடர்பாக பொலிஸார் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வரென்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ஸ)

## நாட்டில் இடியுடன் கூடிய...

அறிவித்துள்ளது.

சப்ரகமுவ, மத்திய, வடமேல், மேல் மற்றும் தென் மாகாணங்களிலும் பொலன்னறுவை மாவட்டத்திலும் சில இடங்களில் 100 மி.மீக்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தெற்கு முதல் தென் கிழக்கு வரையான திசைகளில் இருந்து வீசக்கூடும். காற்றின் வேகமானது மணிக்கு 25 முதல் 35 கிலோ மீற்றர் வரை காணப்படும்.

புத்தளத்தில் இருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கடற்பரப்புகள் அவ்வப்போது ஓரளவு கொந்தளிப்பாகக் காணப்படும். நாட்டைச் சூழவுள்ள ஏனைய கடற்பரப்புகள் மிதமான அலையுடன் காணப்படும்.

இடியுடன் கூடிய மழை பெய்யும் நேரங்களில் கடற்பகுதிகளில் அவ்வப்போது பலமான காற்று வீசுவதுடன் அக்கடற்பிரதேசங்கள் மிகவும் கொந்தளிப்பாகவும் காணப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

## 590க்கும் அதிகமான ...

590 க்கும் அதிகமான போதை மாத்திரைகள் அடங்கிய பெட்டிகள் மற்றும் ஹெரோயின் பறிமுதல் செய்யப்பட்டதாக கல்முனை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்முனை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட கல்முனை மாநகர பிரதான வீதியில் நேற்று முன்தினம்(09) மாலை சந்தேக நபர் பட்டா வாகனம் ஒன்றில் சந்தேகத்திற்கு இடமாக நடமாடுவதாக மாவட்ட புலனாய்வு பிரிவு மற்றும் விசேட புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து மாறுவேடத்தில் சென்ற கல்முனை பொலிஸார் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.

திருகோணமலை , கிண்ணியா பகுதியில் இருந்து போதை மாத்திரைகள் கடத்தி வரப்பட்டுள்ளதாக விசாரணையில் தெரிய வந்துள்ளது.

கைதானவர் சாய்ந்தமருது பகுதியை சேர்ந்த 25 வயதுடைய இரும்பு சேகரித்து விற்பனை செய்பவர் எனவும் சந்தேகநபர் அண்மைக் காலமாக பாடசாலை மாணவர்களுக்கு குறித்த போதை மாத்திரைகளை விநியோகித்து வந்துள்ளதாகவும் விசாரணையில் இருந்து தெரிய வந்துள்ளது.

இவ்வாறு மீட்கப்பட்ட 590 போதை மாத்திரைகள், ஹெரோயின், சந்தேக நபர் மற்றும் போதை மாத்திரைகளை கடத்த பயன்படுத்திய பட்டா ரக வாகனம் என்பனவற்றை கல்முனை நீதவான் நீதிமன்றில் பாரப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக கல்முனை பொலிஸார் குறிப்பிட்டனர்.

## விசேட வழிகாட்டல் சுற்று நிருபம்...

மேற்படி சுற்றுநிருபத்தில் அரச துறை சேவைகளை தடையின்றி முன்னெடுத்துச் செல்லும் வகையில் மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை சேவைக்கு அழைப்பது தொடர்பான அதிகாரம் அமைச்சுக்களின் செயலாளர்கள் மற்றும் நிறுவனங்களின் தலைவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதாக பொதுநிர்வாக அமைச்சின் செயலாளர் ஜே.ஜே. ரத்னசிறி தெரிவித்துள்ளார். அவரால் கையொப்பமிடப்பட்டுள்ள சுற்றுநிருபத்தில் மேலும் தெரிவிக்கப்படுவதாவது,

அவ்வாறு மட்டுப்படுத்தப்பட்ட ஊழியர்களை சேவைக்கு அழைக்கும் நிலையிலும் சேவை முறை தொடர்பான செயற்திட்டமொன்றை பின்பற்றுமாறும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், சேவைக்கு சமூகமளிக்கும் தினமொன்றில் சம்பந்தப்பட்ட ஊழியர் சேவைக்கு சமூகமளிக்கத் தவறினால் அந்த ஊழியரின் தனிப்பட்ட விடுமுறையில் அதனை கழிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன் கர்ப்பிணிப் பெண்களை சேவைக்கு அழைப்பதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. இம்முறைமைக்கு இணங்க சேவைக்கு சமுகமளிக்காத தினங்களில் வீடுகளிலிருந்தே ஒன்லைன் மூலம் கடமைகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்றும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி அனைத்துச் செயற்பாடுகளையும் முன்னெடுக்க வேண்டும் என்றும் முடிந்தளவு பொதுபோக்குவரத்தைப் பயன்படுத்தாமல் அவர்களுக்கென தனியான வாகனங்களை ஒதுக்கவும் அல்லது சம்பந்தப்பட்டவர்களின் தனிப்பட்ட வாகனங்களை பயன்படுத்துவது சிறந்தது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.அத்துடன் மிகவும் அவசியமான தேவைகள் தவிர்ந்த சேவைகளுக்காக பொதுமக்கள் அலுவலகங்களுக்கு வருவதை மட்டுப்படுத்துவது முக்கியமாகும். (ஸ)

ஹேயஸ் தோட்டத்தில்

# 50 வருடங்கள் பழமையான தோட்டக் குடியிருப்பு இடிந்து விழுந்து சேதம்

## நிர்க்கதியான நிலையில் மக்கள் பாடசாலையில் தஞ்சம்

தெனியாய ஹே யஸ் தோட்டத்தில் தோட்டக் குடியிருப்பு ஒன்று இடிந்து விழுந்ததால் அதில் வசித்த 09 குடும்பங்களைச் சேர்ந்த 37 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

தற்சமயம் பாதிப்புக்குள்ளான மக்கள் ஹேய்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் தற்காலிமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களாக மாத்தறை மாவட்டத்தில் பெய்து வருகின்ற கடும் மழை காரணமாகவே இந்நிலைமை ஏற்பட்டுள்ளது. கடும் மழை காரணமாக தோட்ட குடியிருப்பின் ஒரு பகுதி இடிந்து விழுந்துள்ளது. இந்த குடியிருப்பில் வாழ்ந்து வந்த ஒன்பது குடும்பங்களும் இதனால் இவ்விடத்திலிருந்து பாதுகாப்பு கருதி ஹேய்ஸ் பாடசாலையில் தங்க வைக்கப்பட்டனர்.

2008ஆம் ஆண்டு முதல் இப் பிரதேசம் அடிக்கடி மண் சரிவுக்கு உள்ளாவதாகவும் அவ்வப்போது பாதுகாப்பு கருதி பாடசாலைக்கு சென்று தங்கிவிட்டு மீண்டும் அதே இருப்பிடங்களுக்கு வந்து கொண்டிருப்பதாகவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த தோட்டக் குடியிருப்பு பகுதி சுமார் 50, 60 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்டதாகவும் எனினும் எந்தவிதமான திருத்த வேலைகளும் இந்த வீடுகளில் மேற்கொள்ளப்படவில்லை எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் தெரிவிக்கின்றனர்.



எனவே இவ்விடத்தில் இருந்து தம்மை அகற்றி தமக்கென காணிகளை பெற்றுக்கொடுத்து வீட்டு வசதிகளை பெற்றுத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். மீண்டும் அதே குடியிருப்புகளுக்கு செல்ல முடியாது எனவும் புதிதாக தமக்கு வேறு காணிகளை பெற்றுக் கொடுத்து அதற்கான அடிப்படைத் தேவைகளையும் பூர்த்தி செய்து தருமாறும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இத்தினங்களில் பாடசாலை விடுமுறை என்றபடியால் இங்கு தங்க முடியும், மீண்டும் பாடசாலை ஆரம்பித்தால் தமக்கு செல்வதற்கு இடமில்லை எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். கைக்குழந்தைகள், பாடசாலை மாணவர்கள், பெரியோர் என 37 பேர் பாடசாலையில் தங்கி வருகின்றனர்.

உடனடியாக இந்த மக்களுக்கு புதிதாக வீடுகளை அமைக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தோட்ட நிர்வாகங்கள் முன் வரவேண்டும் எனவும் பாதிக்கப்பட்ட மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

---

# கண்டி பெண்கள் பாடசாலை மாணவி வத்சலா உயிரியல் பிரிவில் சாதனை

**(அக்குறணை குறுப் நிருபர்)**

பிறக்கும் போதே பல்வேறு உடல் உபாதைகளுடன் பிறந்த போதும் வாழ்க்கையில் எதிர் நீச்சல் போட்டு க,பொ,த, உயர்தரம் உயிரியல் பிரிவில் 2.ஏ, 1 பீ. சித்தி பெற்று எதிர்காலத்தில் ஒரு வைத்தியராகும் வாய்ப்பைப் பெற்றுள்ளார் கண்டி பெண்கள் உயர் கல்லூரி மாணவி ஒருவர்.

செல்வி வத்சலா யசந்தி குமாரி என்பவர் பிறக்கும் போதே வாய், நாசி போன்ற பிரதேசங்களிலும், இரண்டு கைகளிலும் குறைபாடுகளுடன் பிறந்துள்ளார்.

இவருக்கு பிறந்து மூன்று மாதத்தில் வாய், நாசி போன்ற பிரதேசங்களுக்கு கண்டி வைத்தியசாலையில் பிளாஸ்டிக் சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதன் பின்னர் வாய்க்கு இன்னும் பல சத்திர சிகிச்சைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவ்வாறு பிறந்தது முதல் இன்று வரை 27 சத்திர சிகிச்சைகளுக்கு அவர் முகம் கொடுத்துள்ளார். இறுதியாக க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு இரண்டு மாதங்கள் இருக்கும் போதும் ஒரு சத்திர சிகிச்சைக்கும் முகம் கொடுத்துள்ளார்.

அவரது வலதுகையில் முழங்கைக்குக் கீழான பகுதியை காண முடியவில்லை. அதேநேரம் இடது கையின் பெருவிரல் தவிர்ந்த ஏனைய விரல்கள் இல்லை. இப்படியான ஒரு நிலையில் தான் அவர் மேற்படி சாதனையை பெற்றுள்ளார்.

இவர் தரம் 1 முதல் க.பொ.த. சாதாரண தரம் வரை கண்டி சுவர்ணமாலி மகளிர் கல்லூரியில் கல்வி பயின்றார். அங்கு அவர் க.பொ.த. சாதாரண தரத்தில் 8 ஏ மற்றும் 1 பி தரத்தில் சித்திகளைப் பெற்றார். பின்னர் கண்டி பெண்கள் உயர் கல்லூரியில் இணைந்து உயர் தரத்தில் உயிரியல் விஞ்ஞான பிரிவில் கல்வி கற்று க,பொ,த, உயர்தரம் உயிரியல் பிரிவில் 2.ஏ, 1 பீ. சித்தி பெற்றுள்ளார்.

இவர் நிதி அமைச்சின் மேலதிக பணிப்பாளர் நாயகம் அனுர பண்டார முத்துகுடே மற்றும் லும்பினி குமாரி முத்துகுடே ஆகியோரின் புதல்வியாவார்.

---

# கண்டி தேசிய வைத்தியசாலை தொற்றாளர்களுக்கு ஒட்சிசன் வழங்க 2 மில்லியன் ரூபா செலவு

**கண்டி தினகரன் சுழற்சி நிருபர்)**

கண்டி தேசிய வைத்தியசாலையில் கொவிட் தொற்றுக்குள்ளாகியுள்ள 10 பேருக்கு ஒட்சிசன் வழங்குவதற்கு இரண்டு மில்லியன் ரூபா செலவிடப்படுவதாக கண்டி தேசிய வைத்தியசாலை உதவி நிர்வாகி சந்தன விஜேசிங்க தெரிவித்தார்.

அண்மையில் நடைபெற்ற கொவிட் நிர்வாகத்திற்கான வழிநடத்தல் குழுவின் சிறப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கண்டி மருத்துவமனையில் தற்போது கொவிட் தொற்றாளர்களுக்கான அவசர சிகிச்சைக்காக ஆறு கட்டில்கள் மட்டுமே உள்ளன. அவர்களில் கொவிட் நோயால் பாதிக்கப்பட்ட இரண்டு சிறு குழந்தைகள் உள்ளனர். ஆறு மாகாணங்களிலிருந்தும் நோயாளிகள் கண்டி தேசிய மருத்துவமனைக்கு வருவதால், மற்ற அனைத்து சிகிச்சை பிரிவுகளும் வழக்கம் போல் பராமரிக்கப்பட வேண்டும். மேலும் கொவிட் வைரஸ் தொற்றால் பாதிக்கப்பட்ட நோயாளிகளை மற்ற அவசர சிகிச்சை பிரிவுகளுக்கு அனுப்ப முடியாது. எனவே, ஒட்சிசனை வழங்க கொவிட் சிகிச்சை பிரிவில் பத்து கட்டில்களை மேம்படுத்தி தந்தால் மிகவும் இலகுவாக இருக்கும். தற்போது கொவிட் வைரஸ் தொற்றாளர்கள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. சிகிச்சைக்காக தொற்றாளர்கள் அதிகம் காணப்படுவதாலும் உடனடியாக நன்கொடையாக சில கட்டில்களும் எமக்கு கிடைக்கப்பெற்றால் சௌகரியமாக இருக்கும். தற்போது மருத்துவமனையில் ஒட்சிசனுக்கு பற்றாக்குறை இல்லை, ஆனால் ஒட்சிசனை வழங்க தேவையான பிற வசதிகளை வழங்க ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

---

# 3 மில்லியன் கொவிட் 19 தடுப்பூசிகள் கொள்வனவு

## 7000 ஊடகவியலாளர்களுக்கு முன்னுரிமை

ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல

**(அக்குறணை குறுப் நிருபர்)**

இலங்கையில் விரைவில் மூன்று மில்லியன் டோஸ் கொவிட் 19 தடுப்பூசிகள் கொள்வனவு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவற்றில் ஊடகவியலாளர்களுக்கும், கண்டி மற்றும் குருநாகல் மாவட்ட மக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும் எனவும் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல தெரிவித்தார்.

கண்டி மாவட்ட செயலகத்தில் (09) நடைபெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், விரைவில் மூன்று மில்லியன் டோஸ் தடுப்பூசிகள் கொள்வனவிற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதில் தீவு முழுவதும் பரந்து வாழும் சுமார் 7000 ஊடகவியலாளர்களுக்கும், கண்டி மற்றும் குருநாகல் மாவட்ட பொதுமக்களுக்கும் முன்னுரிமை அளித்து கொரோனா தடுப்பூசி வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

தடுப்பூசிகளுக்காகப் பணம் செலுத்த அரசாங்கத்திடம் போதிய வசதி இல்லை என்ற சிலரின் குற்றச்சாட்டுகளை மறுக்கின்றேன். தடுப்பூசிகளை வாங்குவதற்கு அரசாங்கத்திடம் போதியளவு நிதி இருக்கின்றது. தேவையான தடுப்பூசிகளை விரைவில் வழங்குவதாக சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

தடுப்பூசியை நாட்டின் அனைத்து மக்களுக்கும் வழங்குவதே ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் நோக்கமாகும்.

கொரோனா தொற்றுநோயைக் கட்டுப்படுத்த நாட்டை முழுவதுமாக முடக்குவது அரசாங்கத்தின் நோக்கமல்ல, தொற்றுநோயைக் கட்டுப்படுத்த சுகாதாரத் துறையின் பரிந்துரைகளுக்குத் தேவையான தனிமைப்படுத்தல் மற்றும் பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

இந்தியாவில் இருந்து கடல் வழியாக நாட்டுக்குள் யாரும் வர முடியாத படி கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும் அமைச்சர் கூறினார்.

---

# மலையகத்திற்கு அரச நியமனங்களை இ.தொ.கா மட்டுமே பெற்றுக்கொடுத்தது

**தலவாக்கலை குறுப் நிருபர்**

மலையக சமூகத்தை சேர்ந்த ஆசிரியர்கள், அதிபர்களினாலேயே மலையக கல்வியில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளதாக இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

க.பொ.த உயர்தர பெறுபேறுகள் வெளியாகியுள்ள நிலையில் அந்த பெறுபேறுகள் மலையக பாடசாலைகளில் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளன. அதிகளவிலான மாணவர்கள் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. இந்த அசுர வளர்ச்சி எம்சமூகத்தில் தொடர வேண்டும். இன்று மாணவர்கள் சிறந்த பெறுபேறுகளை பெற்று சித்தியடைந்துள்ளனர். இன்று பாடசாலைகளில் கல்வி பெறுபேறுகளை பார்க்கும் போது வியக்கத்தக்கதாக இருக்கின்றது.

அன்று மலையக கல்விக்கு வித்திட்டவர் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சௌமிய மூர்த்தி தொண்டமான் ஆவார். அவரின் அயராத முயற்சியினால்தான் இன்று மலையகம் கல்வி வளர்ச்சியில் உயர்வடைந்துள்ளது. அதேபோல் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் அமரர் ஆறுமுகன் தொண்டமானும் மலையக கல்வி வளர்ச்சிக்காக பல்வேறு சேவைகளை செய்துள்ளார். அன்று எம்மிடம் இருந்தது ஆசிரியர் தொழில் மட்டுமே. 1982 ஆம் 1983ஆம் ஆண்டுகளில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானினால் 500 ஆசிரியர் நியமனங்கள் மலையகத்திற்கு பெற்றுக்கொடுக்கப்பட்டது. அதில் 402 நியமனங்கள் கணித பாடம் சித்தியடையாதவர்களும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். பெரும்பாலானோர் இன்று ஓய்வு பெற்றுவிட்டனர். அதன்பிறகு பல்வேறு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

ஆசிரியர் நியமனங்கள் மட்டுமல்லாமல் ஏனைய அரச நியமனங்கள் மலையகத்திற்கு இ.தொ.காவினால் மட்டுமே பெற்றுக்கொடுக்கப்பட்டன. இந்நியமனங்கள் அரசியல், கட்சி பேதமின்றி அனைவருக்கும் பெற்றுக்கொடுக்கப்பட்டன. 2007ஆம் ஆண்டு 3179 ஆசிரியர் நியமனம், ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் உதவி ஆசிரியர் நியமனம், பட்டதாரிகள் நியமனங்கள் போன்றன இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர்; அமரர் ஆறுமுகன் தொண்டமானினால் பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இருந்தும் அக்காலகட்டத்தில் எமது சமூகத்தில் கல்வி கற்றவர்கள் விரல் விட்டு எண்ணக்கூடியவர்களாகவே காணப்பட்டனர். அன்று எமது சமூகத்தின் மத்தியில் ஒரு போட்டி நிலை உருவாகவில்லை அந்த நிலை தற்போது மாறி விட்டது.

அன்று அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானால் மலையகமெங்கும் பாடசாலைகள் கட்டப்பட்டன. பின்னர் சீடா என்ற வெளிநாட்டு நிறுவனம் இலங்கைக்கு வந்தது. சீடா நிறுவனத்தின் வேலைத்திட்டங்களை மலையகத்திற்கு கொண்டு வர தலைவர் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் பெரும்பாடுபட்டார். சீடா மலையகத்திற்கு வந்த பின்னரே மலையகத்தில் கட்டடங்களை காணமுடிந்தது. எனவே இன்றைய எமது சமூகம் இதனை நன்கு உணர்ந்து செயற்பட்டு எதிர்காலத்தில் சிறந்த ஒரு சமூகமாக மாறவேண்டும் என்பதே இருவரினதும் கனவாகும் என்றார்.

---

# சூட்சுமமான முறையில் போதைப்பொருள் விற்பனை; மூவர் கைது

**( ஹற்றன் விசேட நிருபர், ஹற்றன் சுழற்சி நிருபர்)**

நோர்வூட் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட நோர்வூட் நகரில் போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட இளைஞன் உட்பட மூன்று பேரை பொலிஸார் கைது செய்தனர். இவர்களிடமிருந்து ஒரு தொகை போதைப்பொருள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

நீண்ட காலமாக நோர்வூட் நகரப் பகுதியில் போதை பொருள் வர்த்தகம் மிகவும் சூட்சுமமான முறையில் இடம்பெற்று வருவதாக நோர்வூட் பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது. நோர்வூட் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி வி.ஏ.சி.ஆர். பிரேமலால் தலைமயில் நடைபெற்றது.

மோப்ப நாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது கேரளா கஞ்சா 150 கிராம், ஐஸ் போதைப்பொருள் 10 சிறிய பக்கட்டுக்கள், ஹெரோயின் ஒரு கிராம், 14 லைட்டர்கள், 12 ஆயிரம் ரூபா ரொக்கப்பணம், இரண்டு செல்லிடப்பேசிகள், போதை பொருள் குடிப்பதற்கு பயன்படுத்தும் உபகரணங்கள், போதை பொருள் பொதி செய்வதற்கு பயன்படுத்தும் பொலித்தீன்கள் ஆகியன பொலிஸாரினால் மீட்கப்பட்டன.



குறித்த சுற்றிவளைப்பின் போது போதை பொருள் கொள்வனவு செய்வதற்காக வருகை தந்தபோது ஆட்டோ சாரதி ஒருவரும் மேலும் இருவரும் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டதுடன் ஆட்டோவும் பொலிஸாரினால் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் விற்பனை செல்லிடப்பேசினூடாக இடம்பெற்று வந்துள்ளதாகவும், சந்தேக நபர்களிடம் மேற்கொண்ட ஆரம்ப கட்ட விசாரணையின் போது தெரிய வந்துள்ளது. கைது செய்யப்பட்ட இளைஞன் நோர்வூட் பகுதியை சேர்ந்தவர் என்றும் இவர் கொழும்பிலிருந்து போதைப்பொருட்கள் கொண்டு வந்து இங்குள்ள இளைஞர்கள் மற்றும் சாரதிகளுக்கு விற்பனை செய்து வந்துள்ளதாக பொலிஸார் இதன் போது தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள்பொலிஸ் விசாரணையின் பின் ஹற்றன் நீதி மன்றத்தில் ஆஜர் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நோர்வூட் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

# கொரோனா பரவல் தீவிரம்; அவதானத்துடன் செயற்படுமாறு செந்தில் தொண்டமான் கோரிக்கை

நாட்டில் அதிகளவான கொவிட் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுவதால் நாட்டை முடக்கவேண்டிய சூழல் எழுந்துள்ளது. இதன் காரணமாக குறைந்தபட்சம் இரண்டு வாரங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை கொள்வனவு செய்து வைத்துக் கொள்வது நல்லதென பெருந்தோட்ட பிராந்தியங்களுக்கான பிரதமரின் இணைப்பு செயலாளர் செந்தில் தொண்டமான் பகிரங்க கோரிக்கையொன்றை மலையக மக்களுக்கு விடுத்துள்ளார்.

கொவிட்19 வைரஸின் வீரியம் கடந்த காலங்களை விட தற்போது இலங்கையில் ஆபத்தானதாக பரவி வரும் சூழ்நிலையில், நாட்டை முடக்கக் கூடிய சாத்தியம் அதிகமாவே உள்ளது. கடந்த காலத்தில் கொரோனா தொற்றின் பரவல் குறைவாக காணப்பட்ட சந்தர்ப்பத்திலும் முன் அறிவித்தல் இன்றி நாடு முடக்கப்பட்டது. எனவே வெளி மாவட்டங்களில் வேலை செய்யும் மலையக பகுதியைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். கடந்த வருடம் முன் அறிவித்தல் இன்றி நாடு முடக்கப்பட்டதால், வெளி மாவட்டங்களில் வேலை செய்யும் மலையக பகுதியை சேர்ந்த மக்கள் உணவு இன்றி தண்ணீரை மாத்திரம் குடித்து வந்தனர்.

குழந்தைகளுக்கு பால் மா இல்லாமல், பால் மா கொள்வனவு செய்து கொள்ள முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. எனவே பொதுமக்கள் அனைவரும் காலத்தின் தேவைக்கேற்ப 2 வாரங்களுக்கு தேவையான அத்தியாவசிய பொருட்களை முன்கூட்டியே கொள்வனவு செய்து வைத்துக்கொள்ள வேண்டியது காலத்தின் கட்டாயம் ஆகும்.

கொவிட் 19 தொற்றின் தாக்கம் அதிகரித்து வரும் நிலையில் மக்கள் அனைவரும் தங்களுடைய பாதுகாப்பை உறுதி செய்து கொள்ள வேண்டும். அநாவசிய பயணங்களை நிறுத்தி, நமது பாதுகாப்புக்காக முகக் கவசங்களை அணிந்து கொள்வது, கைகளை சுத்தமாக கழுவுதல் போன்ற சுகாதார நடைமுறைகளை பின்பற்றி எமது பாதுகாப்பை நாமே உறுதி செய்து கொள்ள வேண்டும் .

மேலும் உங்களுடைய இருப்பிடங்களுக்கு அண்மையில் உடல்நிலை குறைபாட்டால் எவரேனும் பாதிக்கப்பட்டு இருந்தால் மக்களின் நலன் கருதி சுகாதார பரிசோதகர்களுக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும். நாம் இலங்கையர் என்ற வகையில் கொரோனா பரவலை முழுமையாக கட்டுபடுத்த மலையக மக்கள் என்ற ரீதியில் முழுமையான பங்களிப்பை வழங்கி ஒரு பாதுகாப்பான இலங்கையை உருவாக்குவோம்.

# வடக்கில் பாரிய அபிவிருத்தி

## ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளிடம் அமைச்சர் டக்ளஸ் வலியுறுத்தல்

**கோப்பாய் குறுப் நிருபர்**

வடக்கு மாகாணத்தில் நிலைபேறான கடற்றொழில் அபிவிருத்தியை ஏற்படுத்தும் நோக்கிலான கலந்துரையாடல் ஆசிய அபிவிருத்தி வங்கி அதிகாரிகளுக்கும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கும் இடையில் இடம்பெற்றுள்ளது.

காணொளி ஊடாக நேற்று இடம்பெற்ற கலந்துரையாடலில், கடந்த ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக கைவிடப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டம் தொடர்பாக ஆசிய அபிவிருத்தி வங்கி மீளாய்வு செய்ய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் இதன்போது கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

பருத்தித்துறை, பேசாலை, குருநகர் ஆகிய துறைமுகங்கள் மற்றும் இறங்குதுறைகள், நங்கூரமிடும் தளங்கள் உட்பட பல்வேறு வேலைத் திட்டங்கள் உள்ளடக்கப்பட்ட பாரிய அபிவிருத்தி திட்டத்திற்கான நிதியுதவியை வழங்குவதற்கு கடந்த ஆட்சிக் காலத்தில் ஆசிய அபிவிருத்தி வங்கி முன்வந்திருந்தது.

எனினும், அப்போதைய ஆட்சியாளர்களின் தவறான அணுகுமுறை காரணமாக ஆசிய அபிவிருத்தி வங்கியினால் குறித்த திட்டத்தினை கைவிடுவதற்கு தீர்மானித்திருந்தது.

இந்நிலையில், கைவிடப்பட்ட அபிவிருத்தி திட்டத்தினை மீளச் செயற்படுத்த வேண்டியதன் அவசியம் தொடர்பாக நேற்றைய கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சினால் தெளிவுபடுத்தப்பட்டது.

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா முன்வைத்த கருத்துக்களை ஏற்றுக் கொண்ட அசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்று அதிகாரிகள், குறித்த விடயம் தொடர்பாக ஆராய்வதாக உறுதியளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கு மாகாண சுகாதாரத் தொண்டர்கள் நிரந்தர நியமனம் கோரி ஆர்ப்பாட்டம்

**பருத்தித்துறை விசேட நிருபர்**

வடக்கு மாகாணத்தில் தற்காலிக சுகாதாரத் தொண்டர்களாகப் பணியாற்றிய 970 சுகாதாரத் தொண்டர்களுக்கும் நிரந்தர நியமனம் தர வேண்டும் என வடமாகாண ஆளுநர் செயலகம் முன் நேற்று கவனயீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது.

இப் போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் கருத்து தெரிவிக்கையில்,

யுத்த காலத்தில் சேவையாற்றிய 840 பேரை சுகாதாரத் தொண்டர்களாக வடக்கு மாகாண சபையினால் உள்வாங்கப்பட்டனர்.

பின்னர் வடமாகாண ஆளுநர் குரே காலத்தில் 130 பேர் சுகாதார தொண்டர்கள் தற்காலிகமாக கடமையாற்றிய நிலையில் அவர்களையும் இணைத்து 970 பேர் சுகாதாரத் தொண்டர்களாக பணி நிரந்தர நியமனம் கேட்டு போராடி வருகிறோம்.

சுகாதார தொண்டர்களுக்கான நேர்முகத் தேர்வு இரு தடவைகள் இடம்பெற்ற நிலையில் ஊழல்கள் இருப்பதாக நாம் அறிகிறோம்.

இறுதி யுத்தத்தின் போது கடமையாற்றிய சுகாதார தொண்டர்கள் இறுதியாக இடம்பெற்ற நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்படவில்லை. எம்முடைய சகல ஆவணங்களும் ஏற்கெனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்ட நிலையில் நேர்முகத் தேர்விற்கு எம்மை அழைக்காமை பெரும் ஏமாற்றத்தைத் தருகிறது. ஆகவே வடமாகாணத்தில் சுகாதாரத் தொண்டர்களாக நிரந்தர நியமனம் கேட்டு விண்ணப்பித்த 970 பேருக்கும் குறித்த நியமனத்தை பாகுபாடின்றி தர வேண்டும் என அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

வட மாகாண சபையின் கிராம அபிவிருத்தி திணைக்களத்தின் மாகாண பணிப்பாளருக்கான நியமனக் கடிதம் இராஜேந்திரா சசீலனுக்கு வட மாகாண ஆளுநர் திருமதி பீ.எஸ். எம் சார்ள்ஸ் நேற்று (10) வழங்கி வைத்தபோது,...

## கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் தொற்றாளர்கள் 36 ஆக அதிகரிப்பு

**பரந்தன் குறுப் நிருபர்**

கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் 14 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக நேற்று அறிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் பொலிஸார் 22 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டிருந்தது.

இந்நிலையில் தொற்றுக்குள்ளான பொலிஸாருடன் நெருக்கமான தொடர்பிலிருந்த பொலிஸார் தனிமைப்படுத்தப்பட்டிருந்தனர்.

அவர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனை முடிவுகள் நேற்று வெளியாகியிருந்தன.

இதன்போதே புதிதாக 14 பேருக்கு தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதனால் கிளிநொச்சி பொலிஸ் நிலையத்தினைச் சேர்ந்த கொரோனாத் தொற்றுக்குள்ளான பொலிஸாரின் மொத்த எண்ணிக்கை 36 ஆக அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பருத்தித்துறை நகரசபை அலுவலகம் ஊழியர் ஒருவருக்கு கொரோனா தொற்று

**கரவெட்டி தினகரன் நிருபர்**

பருத்திததுறை நகரசபை உத்தியோகத்தர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து நேற்று திங்கட்கிழமை முதல் நகர சபை அலுவலகம் முடக்கப்பட்டுள்ளது. கொரோனா தொற்று நோய்த் சந்தேகத்தின் பேரில் அங்கு பணி புரிந்து வரும் உத்தியோகத்தர் ஒருவர் பி. சி. ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளார்.

பரிசோதனையின் பின்னர் அவருக்கு கொரோனா தொற்று இருப்பதாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை மாலை உறுதி செய்யப்பட்டதனையடுத்து பருத்தித்துறை நகரசபை அலுவலகம் நேற்ற முடக்கப்பட்டதுடன் உத்தியோகத்தர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

## அகில உலக யோகா போட்டியில் யாழ். கணேசமூர்த்தி ராஜ்குமார் சாதனை

அகில உலக யோகா சம்மேளனம் அகில உலக யோகா வெற்றியாளர் 2021 போட்டியை ஏப்ரல் மாத இறுதிப் பகுதியில் இணைய வழியில் நடத்தியிருந்தது. இப்போட்டியில் யாழ். யோகா உலக அமைப்பு சார்பாக கணேசமூர்த்தி ராஜ்குமார் வெவ்வேறு இரு யோகா போட்டிகளில் போட்டியிட்டு முதலாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெற்று தங்கம் மற்றும் வெண்கல பதக்கங்களை வென்றுள்ளார்.

18 வயதிற்கு மேற்பட்ட ஆண்கள் பிரிவில் வளையுந்தன்மையுடைய ஆசன பிரிவிலும் (Flexibility yoga) விசேட ஆசன பிரிவிலுமே (Advanced yoga) இச்சாதனை படைக்கப்பட்டுள்ளது. அமைப்பின் நிறுவுனரும் யோகா போதனாசிரியருமான எஸ். உமாசுதன் போட்டியில் வெற்றியீட்டும் வகையில் சாதனையாளனுக்கு யோகா பயிற்சிகள் நுணுக்கமாக வழங்கப்பட்டதோடு நுட்பங்களும் பயிற்றுவிக்கப்பட்டன. யோகா வகுப்புக்கள் இடைநிறுத்தப்பட்டுள்ள நிலையில் பிரத்தியேகமான இடமொன்றில் இவருக்கென தனியான யோகா பயிற்சிகள் வழங்கப்பட்டன.

ஆர்ஜென்டினாவை தளமாகக் கொண்டியங்கும் யோகா சம்மேளனத்தின் யோகா வெற்றியாளர் நிகழ்வில் இலங்கை, இந்தியா, மலேசியா முதலான பல நாடுகள் பங்குகொண்டன. இதன் முடிவுகள் மே மாதம் 8 ஆம் திகதி வெளியாகியிருந்தன. அகில உலக யோகா போட்டியில் கலந்துகொண்டு வெற்றியீட்டியமைக்காக யோகா சம்மேளனத்தின் ஆசிய இயக்குநர் இராதாகிருஷ்ணன் தனது பாராட்டுக்களையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துள்ளார்.

## மன்னாரில் இதுவரை மொத்தமாக 388 கொரோனா தொற்றாளர்கள்

**தலைமன்னார் விஷேட நிருபர்**

கடந்த ஞாயிறு வரைக்கும் மன்னாரில் இதுவரை மொத்தமாக 388 நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தனர். இவற்றில் 2021 ம் ஆண்டு மட்டும் 371 தொற்றுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் மட்டும் (மே மாதம்) 29 நபர்கள் கொவிட் 19 தொற்று நோய்க்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது எனவும், இவற்றில் சமூகமட்டத்தில் 290 நபர்களும். மாவட்ட பொது வைத்தியசாலையில் 81 பேரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இது வரைக்கும் மன்னாரில் மூன்று நபர்கள் மட்டுமே மரணத்தை தழுவியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

என்று தொற்றுநோய் விஞ்ஞான பிரிவுகளுக்கான வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகர் தெரிவித்துள்ளார்.

மன்னாரில் கொரோனா தொற்று நோய் தொடர்பாக மன்னார் மாவட்ட தொற்றுநோய் விஞ்ஞான பிரிவுகளுக்கான வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி கதிர்காமநாதன் சுதாகரிடம் வினவியபோது அவர் தெரிவிக்கையில்,

தங்களை பாதுகாப்பதுடன் முதியவர்களையும் நோயாளர்களையும் கொரோனாவிடமிருந்து பாதுகாக்க ஒவ்வொருவரும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும். கடந்த ஞாயிறு வரைக்கும் மன்னாரில் இதுவரை மொத்தமாக 388 நோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டிருந்தனர்.

இவற்றில் 2021 ம் ஆண்டு மட்டும் 371 தொற்றுநோயாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர்.

இந்த மாதம் மட்டும் (மே மாதம்) 29 நபர்கள் கொவிட் 19 தொற்று நோய்க்கு உள்ளாகியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது எனவும், இவற்றில் சமூகமட்டத்தில் 290 நபர்களும். மாவட்ட பொது வைத்தியசாலையில் 81 பேரும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். இது வரைக்கும் மன்னாரில் மூன்று நபர்கள் மட்டுமே மரணத்தை தழுவியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

## யானைகள் அட்டகாசம்

**பரந்தன் குறுப் நிருபர்**

கிளிநொச்சி ஸ்கந்தபுரம் ஆனைவிழுந்தான் ஆகிய கிராமங்களில் தொடர்ச்சியாக காட்டு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் தமது வாழ்வாதாரப் பயிர்கள் அழிகப்படுவதாகவும் இதனைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மாவட்டத்தின் கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கந்தபுரம், ஆனை விழுந்தான் ஆகிய கிராமங்களில் தினமும் காட்டு யானைகள் புகுந்து பெரும் அழிவை ஏற்படுத்தி வருவதாக பிரதேச மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நேற்று முன்தினம் இரவு வேளை காட்டு யானைகளால் பெரும் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன என்றும் அண்மையில் கூட சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் ஒரே நாளில் அழிக்கப்பட்டதாகவும் தங்களுடைய பிரதேசங்களை நோக்கி இப்போது காட்டு யானைகளின் வருகையும் அதிகரித்து காணப்படுவதால் தங்களுடைய பிரதேசங்களை சூழ யானை வேலிகளை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராணுவத்தினரால் யாழ். மாவட்டத்தில் 3 இடைநிலை கொவிட் மையம் அமைக்கப்படுகிறது. வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, நாவற்குழியில் அரச களஞ்சியம் வயாவிளானில் அமைந்துள்ள கட்டடம் என 3 பகுதிகள் அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் அதற்கான கட்டுமான பணி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மொத்தமாக 600-1000 படுக்கைகளை கொண்ட நிலையங்களாக அமைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. கோப்பாய் குறுப் நிருபர்

## வவுனியா தெற்கு வலயத்தில் உ/த பரீட்சைப் பெறுபேற்றில் அல்- இக்பால் ம.வி முதலிடம்

**வவுனியா விசேட நிருபர்**

வெளியாகிய 2020 ஆம் ஆண்டு உயர்தரப் பெறுபேற்று சித்தி வீதத்தில் வவுனியா தெற்கு வலயத்தில் அல் இக்பால் மகா வித்தியாலயம் முதலிடம் பெற்றுள்ளது.

வெளியாகிய உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளின் சித்தி வீதம் தொடர்பில் வடமாகாண கல்வித் திணைக்களம் வெளியிட்டுள்ள பகுப்பாய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி வவுனியா தெற்கு வலயத்தில் 27 பாடசாலைகளில் இருந்து ஆயிரத்து 608 மாணவர்கள் பரீட்சைக்கு தோற்றியிருந்தனர்.

அதில் 936 மாணவர்களே முழுமையாக மூன்று பாடங்களிலும் சித்தி பெற்றுள்ளனர்.

அந்த வகையில் பரீட்சைக்கு தோற்றிய 27 பாடசாலைகளில் தோற்றிய மாணவர்களின் சித்தி வீதத்தை அடிப்படையாக கொண்டு 93.33 சித்தி வீதத்தைப் பெற்றுள்ள சூடுவெந்தபுலவு அல் இக்பால் மகாவித்தியாலயம் வவுனியா தெற்கு வலயத்தில் முதலிடத்தைப் பெற்றுள்ளதுடன், கந்தபுரம் வாணி வித்தியாலயம் 90 வீத சித்தியைப் பெற்று தெற்கு வலயத்தில் இரண்டாம் நிலையையும், பூவரசன்குளம் மகா வித்தியாலயம் 84.62 வீத சித்தியைப் பெற்று தெற்கு வலயத்தில் மூன்றாம் நிலையையும் பெற்றுள்ளன.

இதேவேளை, வவுனியா தெற்கு வலயத்தில் அல் இக்பால் மாகாவித்தியாலயம் மட்டுமே ஏ சித்தியுடன் வரலாறு பாடத்தில் 100 வீத சித்தியைப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# மே மாதம் கன்னி மரியாளுக்கான சிறப்பு மாதமாக மாறியது எவ்வாறு?

மே மாதம் ஆசீர்வதிக்கப்பட்ட கன்னி மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

கத்தோலிக்க கிறிஸ்தவர்களுக்கு, மே மாதம் மிகவும் புகழ்பெற்ற “வணக்க மாதம்” கன்னி புனித மரியாளின் நினைவாக சிறப்பு பக்தி முயற்சிகள் செய்யப்படும் ஆண்டின் சிறப்புமிக்கதொரு மாதம் இதுவாகும். மே மாதம் கன்னி மரியாளுக்கான சிறப்பு மிக்கதொரு மாதமாக மாறியது எவ்வாறு? மே மாதமானது கன்னி மரியாளுடன் தொடர்புபடுத்தப்பட்டது என்பதற்குப் பல காரணங்கள் உள்ளன.பண்டைய கிரேக்க மற்றும் உரோமை கலாச்சாரத்தில் மே மாதமானது கருவுறுதல் மற்றும் வசந்த காலத்துடன் இணைக்கப்பட்ட உரோமானிய மற்றும் கிரேக்க தெய்வங்களான ஆர்ட்டெமிஸ் (Artemis) மற்றும் ஃப்ளோரா (Flora) போன்ற தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கப்பட்டதாக இருந்தது.

இதுவே, பிற்காலத்தில் வசந்த காலத்தின் புதிய பருவத்தை நினைவுகூரும் பிற ஐரோப்பிய சடங்குகளுடன் இணைந்து, பல மேற்கத்திய கலாச்சாரங்களில் மே மாதத்தை புது வாழ்வு (new life) மற்றும் தாய்மையோடு (fertility) இணைத்துப் பார்க்கும் வழக்கம் தோன்றியது. எனவேதான் இன்றும் "அன்னையர் தினத்தை” மே மாதத்தில் நாம் கொண்டாடுகின்றோம்.

மே மாதம் ஐரோப்பிய நாடுகளில் வசந்த காலம் அதாவது மலர்கள் பூத்துக் குலுங்கும் மாதம். இந்த வசந்த காலத்தில் மகப்பேறுக்கு மதிப்பளிக்கும்வண்ணம் நாம் "அன்னையர் தினத்தைக் கொண்டாடுகின்றோம். அதேவேளையில் பெண்களுக்குள் பேறு பெற்றவளும் இறைவனின் தாயுமான அன்னை மரியாளுக்கு இந்த மே மாதத்தை அர்ப்பணித்துச் சிறப்பிக்கவும் கிறிஸ்தவர்கள் விரும்பினார்கள்.

திருச்சபையின் ஆரம்பகாலத்தில் ஒவ்வோர் ஆண்டும் மே 15ஆம் தேதி அன்று கன்னி மரியாளுக்கு பெரியதொரு விழா கொண்டாடப்பட்டதற்கான சான்றுகள் உள்ளன. ஆனால் 18ஆம் நூற்றாண்டு வரை மே மாதமானது கன்னி மரியாளுடன் எந்தவொரு குறிப்பிட்ட தொடர்பையும் பெற்றிருக்கவில்லை.

கத்தோலிக்க கலைக்களஞ்சியத்தின் கூற்றுப்படி, மே மாத மரியன்னை பக்தி அதன் தற்போதைய வடிவத்தில் உரோமை நகரில் தோன்றியது. உரோமில் இருந்த இயேசு சபையைச் சேர்ந்த தந்தை லடோமியா (Fr.Latomia), மாணவர்களிடையே துரோகத்தையும் ஒழுக்கக்கேட்டையும் கண்டு அதற்குப் பரிகாரமாக, பதினெட்டாம் நூற்றாண்டின் இறுதியில் மே மாதத்தை மரியாளுக்கு அர்ப்பணித்துச் செபித்திட ஒரு சபதம் செய்தார்.

உரோமை நகரில் இருந்துவந்த இந்த நடைமுறை மற்ற நாடுகளில் இருந்த இயேசு சபையைக் கல்லூரிகளுக்கும் பரவியது, பின்னர் இந்நடைமுறையானது கத்தோலிக்கத்திருச்சபைஎங்கும் பரவியது எனலாம்.

மரியாளுக்கென்று ஒரு மாதத்தை அர்ப்பணிப்பது அவரைச் சிறப்பிப்பதென்பது ஒரு புதிய பாரம்பரியம் அல்ல. ஏனெனில் Tricesimum என்று அழைக்கப்படும் மரியாளுக்கு 30 நாட்களை அர்ப்பணித்து செபிக்கும் பாரம்பரியமும் ஒரு காலத்தில் திருச்சபையின் வழக்கத்தில் இருந்தது என்றும் இது "Lady Month" என்று அழைக்கப்பட்டதாகவும் மரியியல் ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். இத்தகைய பாரம்பரியத்தைப் பின்பற்றியே திருச்சபையின் அனைத்து ஆலயங்களிலும் அன்னை மரியாவுக்கு மே மாதத்தில் சிறப்பு வணக்கம் செலுத்த 1815ல் திருத்தந்தை 7வது பத்திநாதர் அனுமதியளித்தார். அவரைத் தொடர்ந்து, 1945 ஆம் ஆண்டில், திருத்தந்தை பன்னிரெண்டாம் பத்திநாதர் மே 31ஆம் திகதி அன்னை மரியாள் என்றும் அரசி என்னும் விழாவை நிறுவி மே மாதத்தை மரியாளின் மாதமாக உறுதிப்படுத்தினார்.

இரண்டாவது வத்திக்கான் பொதுச்சங்கத்திற்குப் பிறகு, இந்த விழாவானது ஆகஸ்ட் 22க்கு மாற்றப்பட்டது, அதே நேரத்தில் மே 31ஆம் திகதியானது மரியாள் எலிசபெத்தம்மாளைச் சந்திக்கும் விழாவாக மாறியது. இத்தகைய மாண்பும் மகத்துவமும் மிக்க மரியாளுக்கான மே மாதக் கொண்டாட்டமானது பாரம்பரியம் நிறைந்த ஒன்றாகும் மற்றும் நமது தாயைக் கௌரவிப்பதற்கான ஆண்டின் அழகான சந்தர்ப்பமும் ஆகும்.

அருட்தந்தை
**அமல்ராஜ்...**

---

# புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் ஏழு புதிய மன்றாட்டுகள் இணைப்பு

*மே 01, சிறப்பிக்கப்பட்ட, தொழிலாளரான புனித யோசேப்பு திருநாளன்று, புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் ஏழு புதிய மன்றாட்டுகளை இணைத்துள்ளது திருவழிபாடு மற்றும் அருளடையாளங்கள் பேராயம்.*

*புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் சில புதிய மன்றாட்டுகள் இணைக்கப்பட்டுள்ளமை தொடர்பில் உலகின் அனைத்து ஆயர் பேரவைகளின் தலைவர்களுக்கும் மடல் ஒன்றை அனுப்பியுள்ள இப்பேராயம், 1909ம் ஆண்டில் திருப்பீடத்தால் அங்கீகரிக்கப்பட்ட புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் புனித யோசேப்பு பற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் சில சிந்தனைகளும் தற்போது மன்றாட்டுகளாக இணைக்கப்பட்டுள்ளன என குறிப்பிட்டுள்ளது.*

*புனித யோசேப்பு உலகளாவிய திருஅவையின் பாதுகாவலராக அறிவிக்கப்பட்டதன் 150ஆம் ஆண்டை முன்னிட்டு அந்த மாபெரும் புனிதரின் மீது நமது அன்பை அதிகரிக்கவும் அவரது பரிந்துரையை மன்றாடவும் அவரது புண்ணியப் பண்புகளையும் இறைப்பற்று பேரார்வத்தையும் நாம் பின்பற்றவும் திருத்தந்தை பிரான்சிஸ் ஒரு தந்தையின் இதயத்தோடு (Patris corde) என்ற திருத்தூது மடல் வழியாக நம்மை ஊக்கப்படுத்தியுள்ளார்.*

*திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஒப்புதலுடன் இந்த புதிய மன்றாட்டுகள் இணைக்கப்பட்டுள்ளன.*

*Patris corde திருத்தூது மடலின் ஒளியில் இடம்பெற்றுள்ள புதிய சில மன்றாட்டுகள்:*

*மீட்பரின் பாதுகாவலர்; கிறிஸ்துவின் பணியாளர்; நோயுற்றோரின் திருப்பணியாளர்;*

*துயரங்களில் துணையாளர்; புலம்பெயர்ந்தோரின் பாதுகாவலர்; இன்னலுற்றோரின் பாதுகாவலர்; வறியோரின் பாதுகாவலர்.*

*புனித யோசேப்பு மன்றாட்டு மாலையில் புதிதாக இணைக்கப்பட்டுள்ள இந்த மன்றாட்டுகளை ஆயர் பேரவைகள் அந்தந்தப் பகுதிகளின் மொழிகளில் மொழிபெயர்க்கலாம். அதற்குத் திருப்பீடத்தின் அனுமதி தேவையில்லை, தங்களின் நாடுகளில் புனித யோசேப்பிடம் பரிந்துரைக்கப்படும் மன்றாட்டுகளையும் ஆயர் பேரவைகள் விவேகத்தோடு தீர்மானித்து அதில் இணைக்கலாம் என்றும் அப் பேராயத்தின் மடலில் கூறப்பட்டுள்ளது.*

**மேரி தெரேசா...**

கிறிஸ்தவ
மஞ்சரி
லோரன்ஸ்
செல்வா

---

## புல்லுமலை புனித செபமாலை மாதா திருத்தல திருவிழா

மட்டக்களப்பு மறைமாவட்டத்தின் வரலாற்றுத் தொன்மைமிக்க புல்லுமலை புனித செபமாலை மாதா திருத்தல திருவிழா கடந்த ஞாயிற்றுக்கிழமை மறைமாவட்ட ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் நடைபெற்றது. பங்குத் தந்தை அருட்பணி பேதுரு ஜீவராஜ் அடிகளாரினால் கொடியேற்றத்துடன் ஆரம்பமான ஆலய திருவிழா நிகழ்வுகளில் நவநாள் ஆராதனைகள் இடம்பெற்று கடந்த ஞாயிற்றுக்கிழமை சுகாதார விதிமுறைகளை பின்பற்றி திருவிழா கூட்டுத் திருப்பலி நிறைவேற்றப்பட்டது. ஆயர் மற்றும் அருட்தந்தையர்கள் சம்பிரதாய முறைப்படி வரவேற்கப் படுவதையும் திருவிழா கூட்டுத் திருப்பலி பூசையையும் இறுதி திருச்சுரூப ஆசீர்வாதத்தையும் படங்களில் காணலாம். (படங்கள்: உதயகாந்த் உதயகுமார்)

---

# "அன்பு செய்யாதவர்கள் கடவுளை அறியமுடியாது ஏனெனில் அன்பே கடவுள்"

*கத்தோலிக்கக் கிறிஸ்தவர்கள் பலர் விண்ணகம் சென்றனர், அங்கு அவர்கள் இந்துக்களையோ இஸ்லாமியர்களையோ அல்லது வேறு கிறிஸ்தவ சபையினரையோ காணவில்லை, அதனால் அவர்கள் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.*

*ஆனால் விண்ணகத்தின் நடுவே ஒரு பெரிய குறுக்குச்சுவர் இருப்பதைக் கண்டு, அவர்கள் பேதுருவிடம், "இக் குறுக்குச்சுவரின் மறுபக்கம் வேறுயாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டனர், அதற்குப் பேதுரு, "ஆம், நீங்கள் யாரெல்லாம் விண்ணகத்திற்கு வரமாட்டார்கள் என்று நினைத்தீர்களோ அவர்களை யெல்லாம் இக்குறுக்குச் சுவரின் மறுபக்கம் உங்கள் கண்ணில் படாமல் வைத்திருக்கிறோம்" என்றார்.*

*ஒரு குறிப்பிட்ட மதத்தினர் தான் விண்ணம் செல்வார்கள் என்னும் தவறான கருத்தைக் கொண்டவர்கள் சிந்திப்பதற்காக உருவாக்கப்பட்ட கட்டுக்கதை இது!*

*மீட்பு என்பது யூதர்களுக்கு மட்டும் உரித்தான தனி உடமை அல்ல; அது எல்லா இனத்தாருக்கும் உரிய பொது உடமை என்பது. இன்றைய முதல் வாசகத்தில் தெளிவாக உணர்த்தப்படுகிறது.*

*கொர்னேலியு என்பவர் யூத இனத்தைச் சேராத பிற இனத்தவர், ஆனால் கடவுளுக்கு அஞ்சி வாழ்ந்தவர். கடவுளுடைய ஆணையின் படி பேதுரு அவர் வீட்டிற்குச் சென்று மீட்பின் நற்செய்தியை அறிவித்துக் கொண்டிருந்தபோதே தூய ஆவியார் கொர்னேலியு மீதும் அவர் வீட்டிலிருந்த அனைவர் மீதும் இறங்கிவர அவர்கள் அனைவரும் அயல் மொழிபேசி ஆண்டவரைப் போற்றிப் புகழ்ந்தனர்.*

*திருமுழுக்குப் பெறுவதற்கு முன்னரே உறுதிப்பூசுதல் பெற்று விட்டனர்! இந்நிகழ்வு மூலம் பேதுரு அறிந்து, அறிவித்த உண்மை : "கடவுள் ஆள்பார்த்துச் செயற்படுவதில்லை. எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்கு ஏற்புடையவர்" (திப 10:34).*

*மீட்படைய இயேசுவின் பெயரைத் தவிர வேறுபெயர் கிடையாது (திப 4:12) என்று ஆணித்தரமாக எடுத்துரைத்த பேதுரு, நல்மனம் கொண்ட அனைவரும் மீட்படைய இறைவன் வழிவகுத்துள்ளார் என்பதையும் அறிவித்துள்ளார்.*

*விண்ணகப் பேரின்பத்திற்கு எல்லா இனத்தவரும் அழைக்கப்பட்டுள்ளனர். விண்ணகத்தில் "யாராலும் எண்ணிக் கையிட முடியாத பெரும் திரளான மக்களைக் கண்டேன், அவர்கள் எல்லா நாட்டையும் குலத்தையும் மக்களினத்தையும் மொழியையும் சார்ந்தவர்கள்” எனக் குறிப்பிட்டுள்ளார் திருத்தூதர் யோவான் (திவெ 7:9).*

*ஆவியானவர் தாம் விரும்பியபடி செயல்படுகிறார். அதாவது அவருடைய செயற்பாட்டை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது (யோவா 3:8), மேலும், "கடவுளின் வார்த்தையைச் சிறைப்படுத்த முடியாது" (2தீமோ 2:9), ஆம், கடவுளின் கரங்களை எவரும் கட்டுப்படுத்த முடியாது.*

*தங்களுடைய குற்றமின்றி கிறிஸ்துவையும் திருச்சபையையும் அறியாதவர்கள், நேரிய உள்ளத்துடன் மனச்சான்றின் குரலைக்கேட்டு. கடவுளுடைய திருவுளத்தை நிறைவேற்றினால், அவர்களும் இறையருளால் மீட்புப் பெறமுடியும் என்று தெளிவுபடுத்தியுள்ளது. இரண்டாம் வத்திக்கான் சங்கம் (திருச்சபை, எண் 18) எங்கெல்லாம் உண்மையும் நன்மையும் காணப்படுகிறதோ அவை அனைத்துமே உண்மைக்கும் நன்மைக்கும் ஊற்றாகிய கடவுளிடமிருந்தே வருகிறது என்பதை ஏற்று, பிறசமயத்தாரோடு நல்லுறவை வளர்ப்பது காலத்தின் கட்டாயமாகும்.*

*புனித அகுஸ்தீனாரின் கூற்றை மேற்கோள்காட்டி இரண்டாம் வத்திக்கான் சங்கம் பின்வருமாறு கூறுகிறது, "திருச்சபையில் இணைந்திருந்தும், அன்பில் நிலைத்திராது, 'உள்ளத்தாலன்றி', 'உடலால் மட்டும் அதன் மடியில் தவழ்கின்றவர்கள் மீட்படைவதில்லை (திருச்சபை, எண் 14).*

*எனவே நாம் திருமுழுக்குப் பெற்றிருக்கிறோம் என்ற ஒரே காரணத்திற்காக மட்டும் மீட்படைய முடியாது. திருச்சபையில் இருந்தால் மட்டும் போதாது, அன்பில் நிலைத்திருக்க வேண்டும். கடந்த ஞாயிற்றுக்கிழமை நாம் வாசிக்கக் கேட்ட நற்செய்தியின் தொடர்ச்சியான இம்முறை ஞாயிறு நற்செய்தியில் தம் ஆண்டவர் அன்பை வலியுறுத்துகின்றார், "என் அன்பில் நிலைத்திருங்கள்... நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை" (யோவா 15:10,12)*

*இன்றைய இரண்டாவது வாசகத்திலும் திருத்தூதர் யோவான் பிறரன்பை முன்னிலைப்படுத்துகிறார். அன்பு செய்யாதவர்கள் கடவுளை அறியமுடியாது. ஏனெனில் அன்பே கடவுள் (1 யோவா 4:78). 7).*

*தெரு நடுவில் கீழே விழுந்து கிடந்த ஊனமுற்ற ஒருவரை மற்றொருவர் தூக்கி விட்டு, அவருக்குப் பணமும் கொடுத்து உதவினார். ஊனமுற்றவர் தன் கண்களில் கண்ணீர் மல்க அவரிடம், "நீங்கள் இயேசு ஆண்டவரா?" என்று கேட்டார். அதற்கு அவர், “நான் இயேசு ஆண்டவர் அல்ல; ஆனால் அவரைப் பின்பற்றும் சீடர்களில் ஒருவர் நான்" என்றாம். இவ்வாறு தான் நாம் இக்காலத்தில் இயேசுவின் அன்பு நற்செய்தியின் சாட்சிகளாகத் திகழ வேண்டும்.*

*கடவுள் நமது அன்பிற்காகக் காத்திராமல், அவரே முதன் முதல் நம்மை அன்பு செய்து, நமது பாவங்களுக்குக் கழுவாயாகத் தமது மகனை அனுப்பினார், அவ்வாறே நாமும் பிறருடைய அன்பிற்காகக் காத்திராமல், பிறரை அன்பு செய்ய முன்வருவோம். ஏனெனில் கிறிஸ்துவின் பேரன்பு நம்மை ஆட்கொண்டு நம்மை உந்தித் தள்ளுகிறது (2 கொரி 5:14).*

அருட்பணி
**வை. இருதயராஜ்...**

# சர்வதேச செய்திகள்

# யூதர்களின் பேரணியால் ஜெருசலத்தில் வன்முறை மேலும் அதிகரிக்கும் அச்சம்

## தொடர்ந்து இடம்பெற்ற மோதல்களில் பலஸ்தீனர் பலரும் காயம்

ஜெருசலத்தில் மூன்றாவது நாள் இரவாகவும் கடந்த ஞாயிற்றுக்கிழமை இஸ்ரேல் பொலிஸார் மற்றும் பலஸ்தீனர்களுக்கு இடையே மோதல் ஏற்பட்ட நிலையில் அந்த நகரில் யூத தேசியவாதிகள் பேரணி நடத்துவதால் வன்முறை அதிகரிக்கும் அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஆண்டு தோறும் இடம்பெறும் ஜெருசலம் தினத்தில் இளம் சியோனிசவாதிகள் முஸ்லிம்கள் வாழும் பகுதிகள் வழியாக பேரணி நடத்துகின்றனர்.

1967 இல் யூதர்களின் புனிதத் தலம் இருக்கும் கிழக்கு ஜெருசலத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்ததை நினைவுகூரும் வகையிலேயே இந்தப் பேரணி இடம்பெறுகிறது.

இதனை மோதலைத் தூண்டும் ஒன்றாகவே பலஸ்தீனர்கள் பார்க்கின்றனர்.

இந்நிலையில் இஸ்ரேல் நேரப்படி நேற்று நடைபெறவிருந்த இந்த பேரணியை ரத்துச் செய்வதற்கு அல்லது அதன் பாதையை மாற்றுவதற்கு இஸ்ரேலின் உயர்மட்ட பாதுகாப்பு அதிகாரியான அமோஸ் கிலாட் அழைப்பு விடுத்திருந்தார். திரி பற்றி எரிந்தால் எந்த நேரமும் அது வெடிக்கலாம் என்று அவர் எச்சரித்துள்ளார் .

இதனிடையே அல் அக்ஸா பள்ளிவாசல் வளாகத்திற்கு நேற்று நுழைந்த இஸ்ரேலிய படையினர் பலஸ்தீனர்கள் மீது இரப்பர் குண்டு தாக்குதல் மற்றும் கண்ணீர்ப்புகைப் பிரயோகம் மேற்கொண்டிருப்பதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவித்துள்ளன. இதன்போது பலஸ்தீனர்கள் பலர் காயமடைந்ததாக பலஸ்தீன செம்பிறை அமைப்பு தெரிவித்துள்ளது.

கிழக்கு ஜெருசலத்தின் செய்ன் ஜர்ராஹ் மாவட்டத்தில் உள்ள பலஸ்தீன குடும்பங்களை இஸ்ரேல் வெளியேற்ற முயற்சிக்கும் நிலையிலேயே அந்த நகரில் தற்போது பதற்றம் அதிகரித்துள்ளது.

கடந்த மூன்று நாட்களாக இடம்பெறும் வன்முறைகளால் நூற்றுக்காணக்கான பலஸ்தீனர்கள் மற்றும் 20 இஸ்ரேலிய பொலிஸார் காயமடைந்திருப்பதாக மருத்துவ வட்டாரங்கள் மற்றும் இஸ்ரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளியேற்றப்படவுள்ள பலஸ்தீன குடும்பங்களின் ஓர் ஆண்டுக்கு மேலாக நீடிக்கும் வழக்கு விசாரணை நேற்று இடம்பெறவிருந்த நிலையில் அது தற்போது ஒத்திவைக்கப்பட்டுள்ளது. யூத குடியேற்றவாசிகளுக்கு சாதகமாக தமது வீடுகளில் இருந்து வெளியேற்றப்படுவதை எதிர்த்து 70 க்கும் அதிகமானவர்கள் வழக்குத் தொடுத்துள்ளனர்.

இந்நிலையில் செய்ன் ஜர்ராஹ் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற மோதலில் பலஸ்தீனர்கள் இஸ்ரேலிய பொலிஸார் மீது கற்களை எறிந்ததோடு, பொலிஸார் அதிர்ச்சி அளிக்கும் கையெறி குண்டுகளை எறிந்து, தண்ணீர் பீச்சியடித்தனர். பழைய நகரின் டமஸ்கஸ் வாயிலிலும் மோதல்கள் இடம்பெற்றன.

ஆர்ப்பாட்டக்காரர்கள் பலரும் காயமடைந்ததாக பலஸ்தீன மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

வடக்கு நகரான ஹைபா மற்றும் மேற்குக் கரையின் ரமல்லா நகருக்கு அருகிலும் மோதல்கள் இடம்பெற்றுள்ளன.

இந்நிலையில் ஆர்ப்பாட்டக்காரர்கள் மீதான பொலிஸாரின் நடவடிக்கையை இஸ்ரேல் பிரதமர் பெஞ்ஜமின் நெதன்யாகு காத்து பேசியுள்ளார். நகரில் அமைதியை சீர்குலைக்கும் எந்த ஒரு கடும்போக்கு செயற்பாடுகளையும் தமது அரசு அனுமதிக்காது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

கிழக்கு ஜெருசலத்தில் உள்ள முஸ்லிம் புனிதத் தலங்களின் காவலராக உள்ள அண்டை நாடான ஜோர்தான், இஸ்ரேல் பாதுகாப்பு படையின் செயற்பாட்டை கண்டித்துள்ளது.

மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தையின் முக்கிய தரப்புகளாக உள்ள அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றிய, ரஷ்யா மற்றும் ஐ.நா, இந்த வன்முறைகள் குறித்து கவலை வெளியிட்டிருப்பதோடு அனைத்து தரப்புகளும் அமைதி காக்கும்படி வலியுறுத்தியுள்ளன.

இது தொடர்பில் ஐ.நா பாதுகாப்புச் சபையிலும் நேற்று பேசப்பட்டுள்ளது.

முஸ்லிம்களின் புனித மாதமான ரமலான் ஆரம்பமான ஏப்ரல் நடுப்பகுதி தொடக்கம் பதற்றம் அதிகரித்துள்ளது. இதற்கு பல காரணிகளும் துண்டுதலாக இருந்துள்ளது.

டமஸ்கஸ் வாயிலுக்கு வெளியில் இஸ்ரேல் பாதுகாப்பு படை தடுப்பு வேலி அமைத்ததால் ரமலான் ஆரம்பித்தில் பலஸ்தீன ஆர்ப்பாட்டக்காரர்களும் பொலிஸாருக்கும் இடையே மோதல் எற்பட்டது. இந்த தடுப்பு மூலம் பலஸ்தீனர்கள் ரமலானில் மேற்கொள்ளும் வழக்கமான ஒன்றுகூடல் தடுக்கப்பட்டதே கோபத்திற்கு காரணமாகும்.

மூடப்பட்ட அந்தப் பகுதி ஊடாக தீவிர வலதுசாரி யூதக் கடும்போக்காளர்கள் பேரணி சென்றதால் அந்த வன்முறை மேலும் தீவிரம் அடைந்தது.

இஸ்ரேல் மற்றும் பலஸ்தீன பிரச்சினையில் கிழக்கு ஜெருசலம் விவகாரம் தீர்க்கமான ஒன்றாக உள்ளது. இந்த நகருக்கு இரு தரப்பும் உரிமை கோரும் நிலையில் 1980இல் இந்தப் பகுதியை இஸ்ரேல் தனது ஆட்புலத்திற்குள் சேர்த்தது. இதனை பெரும்பான்மை சர்வதேச சமூகம் ஏற்கவில்லை.

ஒட்டுமொத்த ஜெருசலமும் தனது தலைநகர் என்று இஸ்ரேல் உரிமை கோரும் நிலையில் அதன் கிழக்கு ஜெருசலம் தனது எதிர்கால சுதந்திர நாட்டின் தலைநகர் என்று பலஸ்தீனர்கள் கூறி வருகின்றனர்.

# மியன்மாரின் இராணுவ அரசுக்கு தொடர்ந்து ஆதரவளிக்கும் சீனா

மியன்மாரில் கடந்த செப்டெம்பர் 1ஆம் திகதி இடம்பெற்ற இராணுவ சதிப்புரட்சி தொடக்கம் இராணுவம் ஆட்சியாளர்களுக்கு சீனா போதுமான சர்வதேச ஆதரவை வழங்குவதாகக் கூறப்படுகிறது.

மியன்மாரில் பிரதான உட்கட்டமைப்பு மற்றும் ஏனைய திட்டங்களுக்கு முதலீடு செய்யும் சீனா அதனுடனான நாளாந்த 16 மில்லியன் டொலர் வர்த்தகத்திலும் ஈடுபட்டு வருகிறது.

பல முதலீடுகளில் மியன்மார் மேற்கு பிராந்தியம் மற்றும் சீன வரை செல்லும் எண்ணெய் மற்றும் இயற்கை வாயு குழாய் முக்கிமானதாக பார்க்கப்படுகிறது. இந்த மசகு எண்ணெய் குழாயினால் ஆண்டுக்கு 22 மில்லியன் தொன்களும், இயற்கை வாயு குழாயினால் 12 பில்லியன் கன மீற்றர் எரிவாயுவும் எடுத்துச் செல்லப்படுகிறது.

மியன்மாரின் இராணுவ அரசுக்கு பல தசாப்தங்களாக சீனா அளிக்கும் ஆதரவு தொடர்பில் மியன்மார் மக்கள் அதிருப்தியில் உள்ளதாக அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர்.

# கினியாவில் தங்கச் சுரங்கம் சரிந்ததில் 15 பேர் உயிரிழப்பு

கினியாவின் வட கிழக்கு சகுரி பிராந்தியத்தில் உள்ள இரகசியமாக இயக்கப்பட்ட தங்கச் சுரங்கம் ஒன்றில் ஏற்பட்ட நிலச்சரிவில் குறைந்தது 15 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்தச் சுரங்கத்தின் மேலால் பாறைகள் விழுந்த நிலையில் சிலர் அதில் புதையுண்டிருப்பதோடு மேலும் சிலர் சுரங்கத்திற்குள் சிக்கியுள்ளனர். இந்த அனர்த்தம் பற்றி விசாரணை நடத்தப்பட்டு வருவதாக அரச பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். இந்த விபத்தில் இரு பெண்கள் இறந்திருப்பதாக உள்ளூர் செஞ்சிலுவை சங்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

‘இந்த சுரங்கத்தில் ஏற்கனவே இயந்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. சுரங்கத் தொழிலாளர்கள் அதிக ஆழத்திற்கு சென்றுள்ளனர். அதனாலேயே நில அமைப்பு பலவீனம் அடைந்துள்ளது’ என்று மேற்படி அரச பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

சிகுரி பிராந்தியத்தில் இவ்வாறான நூற்றுக்காணக்கான ரகசிய சுரங்கங்கள் இயங்கி வருகின்றன. அங்கு பாதுகாப்பு ஏற்பாடுகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் கினியாவில் இடம்பெற்ற நிலச்சரிவில் பதினேழு பேர் கொல்லப்பட்டதோடு ஒன்பது மாதங்களின் பின்னர் இடம்பெற்ற பற்றொரு நிலச்சரிவில் மேலும் பலர் உயிரிழந்தனர்.

# ஆப்கான் பஸ் குண்டு தாக்குதல்: 11 பேர் பலி

ஆப்கானிஸ்தானின் தெற்கு மாகாணமான சபூலில் பஸ் வண்டி ஒன்றை தாக்கிய வீதியோர குண்டு வெடிப்பில் 11 பேர் உயிரிழந்திருப்பதோடு மேலும் பலர் காயமடைந்துள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இந்தத் தாக்குதல் இடம்பெற்றிருப்பதாக அந்த மாகாண ஆளுநரின் பேச்சாளர் குல் இஸ்லாம் செயால் தெரிவித்துள்ளார்.

இதில் காயமடைந்த பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 25 பேர் உயிருக்கு ஆபத்தான நிலையில் இருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்க துருப்புகள் வரும் செப்டெம்பர் மாதத்துடன் ஆப்கானில் இருந்து முழுமையாக வாபஸ் பெறுவதாக அறிவித்திருக்கும் நிலையில் அண்மைய வாரங்களில் அந்நாட்டில் வன்முறை அதிகரித்துள்ளது.

நோன்புப் பெருநாளை ஒட்டி தலிபான்கள் மூன்று நாள் போர் நிறுத்தத்தை அறிவித்திருக்கும் நிலையிலேயே இந்த தாக்குதல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

‘பெருநாளின் முதலாவது தினம் தொடக்கம் மூன்றாம் நாள் வரை எதிரிகளுக்கு எதிராக நாடு முழுவதும் இடம்பெறும் அனைத்து தாக்குதல் நடவடிக்கைகளையும் நிறுத்துவதற்கு இஸ்லாமிய எமிரேட் (தலிபான்) முஜாஹிதீகள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்’ என்று தலிபான்கள் வெளியிட்ட அறிவிப்பில் கூறப்பட்டுள்ளது.

# அமெரிக்கா: பிறந்த நாள் விழாவில் அறுவர் சூட்டுக்கொலை

அமெரிக்காவின் கொலராடோ மாநிலத்தில் பிறந்த நாள் கொண்டாட்டம் ஒன்றில் துப்பாக்கிதாரி ஒருவர் ஆறு பேரை சுட்டுக்கொன்று விட்டு தன்னைத் தானே சுட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்.

நடமாடும் வீடுகள் தரித்து வைக்கப்படும் இடம் ஒன்றில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. ‘கொல்லப்பட்ட ஒருவரின் காதலரான சந்தேக நபர் அந்த குடியிருப்பு பகுதிக்குள் தமது வாகனத்தை செலுத்தி பின்னர் நடந்து வந்து கொண்டாட்டம் இடம்பெறும் இடத்தில் துப்பாக்கிச் சூடு நடத்திவிட்டு தற்கொலை செய்துகொண்டுள்ளார்’ என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அந்த தாக்குதலுக்கான காரணம் தெரியவில்லை. இதில் கொல்லப்பட்ட அனைவரும் பெரியவர்கள் என்றபோதும் துப்பாக்கிச் சூடு இடம்பெறும்போது அங்கு பல சிறுவர்களும் இருந்துள்ளனர்.

‘பொலிஸார் சம்பவ இடத்திற்கு விரைந்தபோது அங்கு ஆறு பெரியவர்களின் உடல்கள் இருந்ததோடு படுகாயம் அடைந்திருந்த ஆடவர் ஒருவரை மருத்துவமனைக்கு எடுத்துச் சென்ற நிலையில் அவரது காயம் காரணமாக பின்னர் உயிரிழந்தார்’ என்று பொலிஸார் வெளியிட்ட செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

# மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மீது குண்டு வைத்த சந்தேக நபர் கைது

மாலைதீவு முன்னாள் ஜனாதிபதி மொஹமட் நஷீட் மீதான படுகொலை முயற்சியுடன் தொடர்புபட்ட பிரதான சந்தேக நபரை கைது செய்ததாக அந்நாட்டு பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தலைநகர் மாலியில் தனது வீட்டுக்கு வெளியில் இடம்பெற்ற குண்டு தாக்குதலில் 53 வயதான நஷீட் மோசமாக காயத்திற்கு உள்ளானார். இந்த தாக்குதல் இடம்பெற்று மூன்று நாட்கள் கடந்த நிலையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை 25 வயதான அப்துல்லாஹ் அஹ்மது ரஷீத் என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நஷீட்டின் உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பதாக அவரது குடும்பத்தினர் கடந்த சனிக்கிழமை தெரிவித்தனர். கடந்த மே 6 ஆம் திகதி இடம்பெற்ற இந்த தாக்குதலில் பிரிட்டன் நாட்டவர் ஒருவருடன் மேலும் இருவரும் காயமடைந்தனர். கைது செய்யப்பட்டிருக்கும் சந்தேக நபர் நஷீடின் காருக்கு அருகில் வெடிக்கச் செய்யப்பட்ட மோட்டார் சைக்கிளில் குண்டை வைப்பதற்கு முன்னர் அங்கு மற்றொருவருடன் காத்திருக்கும் காட்சிகள் சி.சி.டீ.வி கெமராவில் பதிவாகியுள்ளது.

மதக் கடும்போக்காளர்களாலேயே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டிருப்பதாகவும் இது தொடர்பில் மேலும் இருவர் கைது செய்யப்பட்டிருப்பதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இதனுடன் தொடர்புபட்ட ஏனையவர்களை கைது செய்வதற்கு மாலைதீவு பொலிஸார் தொடர்ந்து விசாணைகளை முன்னெடுத்துள்ளனர்.

ஆடம்பர சுற்றுலாத் துறைக்கு பிரபலம் பெற்ற மாலைதீவில் அரசியல் பதற்றம் மற்றும் இஸ்லாமியவாதிகளின் வன்முறைகள் அதிகரித்துள்ளன.

கடந்த 2008 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் வெற்றியீட்டிய நிலையில் நான்கு ஆண்டுகளில் சதி ஒன்றின் மூலம் பதவி கவிழ்க்கப்பட்ட நஷீட், தற்போது நாட்டின் இரண்டாவது அதிகாரம் மிக்க பதவியான சபாநாயகர் பதவியை வகித்து வருகிறார். அவர் கடும்போக்கு இஸ்லாமியவாதிகளுக்கு எதிராக கடும் விமர்சனங்களை முன்வைப்பவராகவும் உள்ளார்.

# அமெரிக்காவில் எண்ணெய் குழாய் மீது சைபர் தாக்குதலால் அவசர நிலை அமுல்

அமெரிக்காவின் மிகப்பெரிய எண்ணெய் குழாய் மீது ரான்சம்வேர் சைபர் தாக்கதல் இடம்பெற்றிருக்கும் நிலையில் அந்நாட்டு அரசு கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசரகால நிலையை அறிவித்துள்ளது.

நாட்டின் கிழக்குக் கடற்கரைக்கு டீசல், பெட்ரோல் மற்றும் ஜெட் எரிபொருளில் 45 வீதமான நாளொன்றுக்கு 25 மில்லியன் பீப்பாய் எரிபொருளை விநியோகிக்கும் எண்ணெய் குழாயே தாக்கப்பட்டுள்ளது.

சைபர் குற்றக் கும்பல் ஒன்று கடந்த வெள்ளிக்கிழமை இதன் செயற்பாட்டை முழுமையாக நிறுத்திய நிலையில் அதனை மீண்டும் இயக்க வைப்பதற்கு தொடர்ந்து பணியாற்றி வருகின்றனர்.

இந்நிலையில் வீதி வழியாக இந்த எரிபொருளை எடுத்துச் செல்வதற்கு வழி செய்யும் வகையிலேயே அவசர நிலை அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மொத்தம் 18 மாநிலங்களுக்கு பெட்ரோல், டீசல், ஜெட் எரிபொருள் மற்றும் ஏனைய சுத்திகரிக்கப்பட்ட பெட்ரோலிய உற்பத்திகளை எடுத்துச்செல்வதற்காக தற்காலிக சேவை விலக்கு ஒன்று அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் எரிபொருள் விலை 2 முதல் 3 வீதம் வரை அதிகரிக்கும் என்று நிபுணர்கள் கூறியிருக்கும் நிலையில், இதனை சரிசெய்ய நீண்ட காலம் எடுத்துக்கொண்டால் நிலைமை மேலும் மோசமடையலாம் என்று எச்சரித்துள்ளனர்.

இதில் டார்க்சைட் என்ற சைபர் குற்றக் கும்பல் ஒன்றே இந்த ரான்சம்வேர் தாக்குதலின் பின்னணியில் இருப்பதாக பல தரப்புகளை மேற்கோள் காட்டி உறுதி செய்யப்பட்டுள்ளது. இந்த கும்பல் எண்ணெய் குழாய் வலையமைப்புக்குள் ஊடுருவி சுமார் 100 ஜி.பி தரவுகளை பிணையில் வைத்துள்ளது.

பிணைத் தொகையை செலுத்தாவிட்டால் அந்தத் தரவுகளை இணையத்தில் கசியவிடுவதாகவும் அந்தக் கும்பல் எச்சரித்திருப்பதாக கூறப்படுகிறது.

# கொரோனா தொற்றை கட்டுப்படுத்தும் முழு பொறுப்பும் பொலிஸ், படையினர் வசம்

## மட்டு. மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

**மட்டக்களப்பு விசேட நிருபர்**

நாட்டினில் எதிர்வரும் ஜுன் மற்றும் ஜுலை மாதங்களில் கொவிட் 19 தொற்றின் தாக்கம் அதிகரிக்கும் எனும் சுகாதாரத் துறையினரின் எதிர்வு கூறலுக்கிணங்க, அரசு பொலிஸ் மற்றும் பாதுகாப்புப் படையினரிடம் இதனைக் கட்டுப்படுத்துவதற்கான முழுப்பொறுப்பையும் தந்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுதத் மாசிங்க தெரிவித்தார்.

மட்டக்களப்பில் தொற்றின் தாக்கம் அதிகரித்து வருவதன் காரணமாக சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத பாதசாரிகள், வர்த்தகர்கள், வாடிக்கையாளர்கள் மற்றும் பிரயாணிகள் உள்ளிட்ட பலரையும் கைது செய்து அன்ரிஜன் பரிசோதனையை நேற்று (10) மட்டக்களப்பு காந்திப் பூங்காவில் செய்தனர்.

சுகாதார நடைமுறையைப் பின்பற்றாது காணப்படுபவர்களைக் கைது செய்ய வேண்டும் என பொலிசாருக்கு விளக்கமளிக்கையிலேயே அவர் அவ்வாறு தெரிவித்தார்.

பொதுமக்கள் கூடும் இடங்களான கடைத் தொகுதிகள், பஸ் நிலையங்கள், வைத்தியசாலைகள் மற்றும் சந்தைகள் உள்ளிட்ட இடங்களில் கைது செய்தவர்களை பொலிஸ் வாகனத்தில் எடுத்து வந்து பரிசோதனைக்கு உட்படுத்தினர்.

அத்தோடு நகரில் உள்ள வீதிகள், கடைகள், பொது மக்கள் கூடும் இடங்களில் பொலிசாரின் வாகனத்தின் மூலம் தொற்று நீக்கும் பணியில் ஈடுபட்டனர்.

இச்செயற்பாடுகளில் மட்டக்களப்பு பொலிஸ் அத்தியட்சகர் எல்.ஆர்.குமாரசிறி, பொலிஸ் பொறுப்பதிகாரி சி.ஐ.ஹெட்டியாராச்சி, பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் உள்ளிட்ட சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊழியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

## முகக்கவசம் அணியாத 18 வர்த்தகர்கள் கைது

**மட்டக்களப்புகுறூப் நிருபர்**

முகக்கவசம் அணியாது வர்த்தக நிலையங்களில் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்ட 18 வர்த்தகர்கள் மட்டக்களாப்பு காத்தான்குடி நகரில் கைது செய்யப்பட்டதாக காத்தான்குடி பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி துமிந்த நயணசிறி தெரிவித்தார்.

நேற்றுமுன்தினம் குருக்கள்மடம் இராணுவத்தினருடன் இணைந்து காத்தான்குடி பொலிசார் மேற்கொண்ட இச் சுற்றிவளைப்பின்போது முகக்கவசம் அணியாது மற்றும் முகக்கவசங்களை சரியான முறையில் அணியாது வர்த்தக நடவடிக்கையில் ஈடுபட்ட 18 வர்த்தகர்கள் பொலிசாரினால் கைது செய்யப்பட்டனர்.

குறித்த நடவடிக்கையில் இராணுவத்தினர் பொலிசார் சுகாதாரத்துறை சார்ந்தோரும் கலந்து கொண்டிருந்தனர்.

## ஒன்லைன் நேரசூசிகளை தயாரித்து பாடங்களை நடத்துமாறு வேண்டுகோள்

**நற்பிட்டிமுனை தினகரன் நிருபர்**

கல்வி அமைச்சினால் மறுஅறிவித்தல் வரும் வரை நிகழ்நிலை (oneline) நேரசூசிகளை தயாரித்து கல்வியை தொடருமாறும் ,அதிபர்களால் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்ட நேரசூசிகளை வலயக்கல்வி அலுவலகத்துக்கு சமர்ப்பிக்குமாறு கல்முனை வலயகல்வி அலுலக அபிவிருத்திக்கான பிரதிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ஜிஹானா.அலிப் அதிபர்களைக் கேட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை கல்முனை வலயக்கல்வி அலுவலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்ற கல்வி அபிவிருத்திக் கூட்டத்தில் உரையாற்றுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

கல்விப் பொதுத் தராதரப் பத்திர உயர்தரப் பரீட்சை முடிவுகள் கொவிட் 19 காலத்திலும் கல்முனை வலயப் பெறுபேறுகள் மிகச்சிறப்பாய் அமைந்துள்ளது என்றார்.

# மருதமுனை கடற்கரை பகுதிக்கு பொதுமக்கள் வர தற்காலிக தடை

## மருதமுனை கொரோனா தடுப்புச் செயலணி தீர்மானம்

**(மருதமுனை தினகரன் நிருபர்)**

நேற்று 10ஆம் திகதி முதல் மறு அ றிவித்தல் வரும் வரை மருதமுனை பிரதேச கடற்கரைப் பகுதிக்கு உள்ளூர் மற்றும் வெளியூர் பொதுமக்கள் வருவது தடைசெய்யப்பட்டுள்ளதாக மருதமுனை கொரோனா தடுப்புச் செயலணி அறிவித்துள்ளது.நாட்டில் தீவிரமாகப் பரவிவரும் கொரோனாவைக் கட்டுப்படுத்தும் வகையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி டொக்டர் ஏ.ஆர்.எம். அஸ்மி தலைமையில் சனிக்கிழமை (08) நடைபெற்ற விஷேட கலந்துரையாடலின் போதே இத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கலந்துரையாடலில்கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி, கல்முனை பொலிஸ் நிலைய பிரதான பொலிஸ் பரிசோதகர் ஏ.எல்.ஏ.வாஹிட், மருதமுனை ஜம்மியத்துல் உலமா சபையின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ஐ.ஹ_சைனுதீன் றியாழி, மருதமுனை தாறுல்ஹுதா மகளிர் அறபுக் கல்லுரியின் பணிப்பாளர் கலாநிதி அஷ்ஷெய்க் எம். எல்.முபாறக் மதனி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இங்கு ஏகமனதாக மேலும் பின்வரும் தீர்மானங்களும் எடுக்கப்பட்டன. தொழில் நிமித்தம் வெளி இடங்களுக்குச் சென்று ஊர் திரும்புகின்றவர்கள் தங்களின் வருகையை தங்கள் பிரிவு கிராம உத்தியோகத்தர் அல்லது பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோரிடம் அறிவிக்க வேண்டும், வெளி இடங்களில் இருந்து மருதமுனை கடற்கரைக்கு வருகின்றவர்களைக் கட்டுப்படுத்தல்,வர்த்தக நிலையங்களுக்கு வருகின்ற பொது மக்களை மட்டுப்படுத்தல், கடற்கரைப் பிரதேசத்தில் புதிதாக கடைகள் வைப்பதை தடைசெய்தல், தேவையற்ற வகையில் வீதிகளில் சுற்றித்திரிகின்ற இளைஞர்களை கட்டுப்படுத்தல்.

மேலும் அயல் கிராமங்களில் இருந்து மருதமுனை கடற்கரைக்கு வருகின்றவர்களின் வருகையைத் தவிர்த்துக் கொள்வதற்கான அறிவுறுத்தல்களை அந்தந்த கிராம பள்ளிவாசல்கள் ஊடாகத் தெரியப்படுத்துதல் ,இவற்றை மீறிச் செயற்படுபவர்களுக்கு எதிராக பொலிஸார் மூலம் சட்ட நடவடிக்கை எடுத்தல் பொன்ற தீர்மானங்களும் எடுக்கப்பட்டன.

# ரமழானை முன்னிட்டு உலர் உணவு பொதிகள் வழங்கி வைப்பு

**(பாலமுனை கிழக்கு தினகரன் நிரபர்)**

ALMA
ALMA / YMMA
YMM PAL
ALMA

அம்பாறை மாவட்டத்துக்கு ரமழானை முன்னிட்டு விதவைக் குடும்பங்களுக்கு வழங்குவதற்காக அல்மா அமைப்பு மற்றும் அகில இலங்கை வை.எம்.எம்.ஏ.பேரவையினால் வழங்கப்பட்ட ஒரு தொகுதி உலர் உணவுப் பொதிகளை வழங்கி வைக்கும் நிகழ்வு சனிக்கிழமை (08) பாலமுனை பிரதேசத்தில் இடம்பெற்றது.

அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தரும் பாலமுனை வை.எம்.எம்.ஏ.கிளையின் உப தலைவருமான எம்.எப். பர்சாத் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில், அகில இலங்கை வை.எம். எம்.ஏ.பேரவையின் அம்பாறை மாவட்ட பணிப்பாளரும் வீதி அபிவிருத்தி திணைக்கள பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தருமான கே.எல். சுபையிர், பாலமுனை வை.எம்.எம். ஏ.கிளையின் பிரதம ஆலோசகரும் ஓய்வுபெற்ற வங்கி முகாமையாளருமான கவிஞர் பாலமுனை பாறுக், பாலமுனை வை.எம்.எம்.ஏ.கிளையின் செயலாளர் எஸ்.எச்.ஏ.முபீத், சமூக சேவைப்பிரிவின் தலைவர் ஏ.எச்.றிக்காஸ் அஹமட், உப தலைவர் எம்.இஸட்.எம்.பைசால், உட்பட பலர் கலந்து கொண்டு உலர் உணவு பொதிகளை வழங்கி வைத்தனர். இதன் போது அம்பாறை மாவட்டத்தின் அட்டாளைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவின் பாலமுனை பிரதேசத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட நாற்பதாயிரம் ரூபா பெறுமதியான உலர் உணவுப் பொதிகள் பாலமுனை பிரதேசத்திலுள்ள ஐந்து கிராம சேவகர் பிரிவுகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ள விதவைக் குடும்பங்களுக்கு வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

பிரதமர் மகிந்த ராஜபக்ஷவின் யோசனைக்கமைய கொரோனாவிலிருந்து பாதுகாப்புப் பெறும் பொருட்டு ஏற்பாடு செய்யப்பட்ட விசேட துஆப் பிரார்த்தனை இறக்காமம் ஜும்ஆப் பெரிய பள்ளிவாசலில் சனிக்கிழமை (08) பள்ளிவாசல் தலைவர் மௌலவி ஏ.கே.அப்துல் றஊப் தலைமையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் இறக்காமம் பிரதேச செயலாளர் எம்.எம்.நஸீர், பிரதேச சபைத் தவிசாளர் எஸ்.ரீ.ஜெமீல் காரியப்பர் உட்பட பலரும் கலந்து கொண்டனர். (படம்: இறக்காமம் தினகரன் நிருபர்)

## மருதமுனை நூர் ஜூம்ஆ பள்ளிவாசலில் துஆ பிரார்த்தனை

**(பெரியநீலாவணை விசேட நிருபர்)**

பிரதமர் மஹிந்த ராஜபக்சவின் சிந்தனைக்கு அமைவாக புத்த சாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் ஊடாக நாடுபூராகவுமுள்ள சர்வமத வணக்கஸ்தலங்களிலும் கொரோனா தொற்று நோயிலிருந்து மக்களை பாதுகாக்க வேண்டி விசேட பிராத்தனை வழிபாடுகள் சனிக்கிழமை (08) நாடுபூராகவும் நடைபெற்றன.

மருதமுனை மஸ்ஜிதுல் நூர் ஜூம்ஆ பள்ளிவாசல் நிருவாக சபை ஏற்பாடு செய்த விசேட துஆ பிராத்தனை நிகழ்வு, பள்ளிவாசல் மண்டபத்தில் நடைபெற்றது. வீடுகளில் இருந்தவாறு பெண்கள் மற்றும் கிராம மக்கள் துஆ பிராத்தனைகளில் ஈடுபட்டனர்.

## அக்கரைப்பற்றில் இடம்பெற்ற விசேட துஆப் பிரார்த்தனை

**(அட்டாளைச்சேனை குறூப், அக்கரைப்பற்று மேற்கு நிருபர்கள்)**

ஜனாதிபதி, பிரதமர் ஆகியோர்களின் எண்ணக்கருவுக்கு அமைய, கொரோனா தொற்று நோய் நீங்கி சுபீட்சமான வாழ்வுமலர ஒழுங்கு செய்யப்பட்ட சர்வத மத வழிபாட்டுக்கு அமைவாக அக்கரைப்பற்று ஜும்ஆ பெரிய பள்ளிவாசலில் ஒழுங்கு செய்யப்பட்ட விசேட துஆ பிராத்தனை சனிக்கிழமை (08) இடம்பெற்றது.

அக்கரைப்பற்று அனைத்துப்பள்ளிவாசல் தலைவர் எஸ்.எம் சபீஸ் தலைமையில் நடைபெற்ற இநநிகழ்வில், மௌலவி ஹபீஸ் எஸ். ரியாஸ் டீன் துஆ பிராத்தனையை நடாத்தினார்.

கொரோனா முழு உலகத்தையும் விட்டு நீங்கவேண்டும், கொரோனாவால் பாதிப்படைந்தவர்கள் பூரண சுகமடையவேண்டும், சகலரும் வளமான வாழ்வைப் பெற வேண்டும் என இங்கு பிரார்த்தனை நடைபெற்றது. இதில் மௌலவி மார்கள், நம்பிக்கையாளர் சபை உறுப்பினர்கள் என பலதரப்பினரும் சுகாதார விதிமுறைகளைப் பேணி கலந்துகொண்டனர்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரார்த்தனை நிகழ்வுகளை நடத்துமாறு பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு அறிவிக்கப்பட்டது. அதன் பிரகாரம் காத்தான்குடி முகைதீன் மெத்தைப் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலில் இடம்பெற்ற விசேட பிரார்த்தனை நிகழ்வின் போது. (படம்: புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

# காத்தான்குடியில் யாசகத்திற்காக வீடுகளுக்கு செல்வோருக்கு தடை

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

காத்தான்குடியில் யாசகத்திற்காக வீடுகளுக்குச் செல்வது, வீதிகளில் அலைவது என்பன தடை செய்யப்பட்டுள்ளதுடன், இன்று செவ்வாய் கிழமை முதல் மறு அறிவித்தல் வரை அத்தியாவசிய சேவைகள் தவிர்ந்த சகல வர்த்தக நிலையங்களும் மாலை 6 மணியுடன் மூடப்படுதல் வேண்டும் என காத்தான்குடி கொவிட்–19 தடுப்பு செயலணி அறிவித்துள்ளது.

தற்போது நாட்டில் கொரோனா 3ம் அலை தீவிரமாக பரவிவருவது தொடர்பில் சனிக்கிழமை (08) காத்தான்குடி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம் பெற்ற முக்கிய கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கமைய பின்வரும் விடயங்களை பொது மக்கள் கண்டிப்பாக கடைப்பிடிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உடன் அமுலுக்கு வரும் வகையில் யாசகத்திற்காக வீடுகளுக்குச் செல்வது, வீதிகளில் அலைவது என்பன தடை செய்யப்பட்டுள்ளதுடன், சதகா, பித்ரா விடயத்தில் பொது மக்கள் தங்கள் வீடுகளுக்கு அருகில் உள்ள ஏழை எளியவர்கள், உறவினர்கள் தொடர்பில் முன்னுரிமை வழங்கவும்.

கடற்கரை, ஆற்றங்கரை, மைதானம் போன்ற பொது இடங்களில் பொது மக்கள் கூடுவது மறு அறிவித்தல் வரை முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

செவ்வாய்கிழமை முதல் மறு அறிவித்தல் வரை அத்தியவசிய சேவைகள் தவிர்ந்த சகல வர்த்தக நிலையங்களும் மாலை 6 மணியுடனும், அத்தியாவசிய சேவைகள் இரவு 9 மணியுடனும் மூடப்படுதல் வேண்டும்.

பெருநாள் ஒன்று கூடல்கள் உறவினர் வீடுகளுக்குச் செல்லல் என்பன தடைசெய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# நகர்வலம்

## கொரோனா முடியும் வரை சகல விமான சேவைகளும் மத்தலை ராஜபக்ஷ விமான நிலையத்துக்கு மாற்றம்

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

நாட்டிற்கு வருகை தரும் சகல விமானங்கள் மற்றும் சேவைகளை மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினூடாக ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. தற்பொழுதுள்ள கொவிட் நிலைமை சீரடையும் வரை இந்தத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தரும் விமானங்களையும், விமானப் பயணிகளையும் கவர்வதற்கான திட்டங்களை தயாரித்து விமான நிறுவனங்களுக்கு ஒரு வருட காலத்திற்கு தரை இறக்குதல் மற்றும் தங்கி நிற்கும் கட்டணம் என்பவற்றை விலக்களித்து சலுகைகளை வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதற்கமைய தரை இறக்குதல் கட்டணம் இரண்டு வருட காலத்திற்கு விடுவிக்கப்பட்டுள்ளது.

மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து புதிய விமான பயணங்களை ஆரம்பிப்பதற்காக லொட் பொலிஸ், லயன் எயார், எயார் அஸ்டானா, யுக்ரேய்ன் எயார் லைன், இன்டிகோ, எலாய்ன்ஸ் எயார், எயார் இந்தியா, எமிரேட்ஸ், எயார் விஸ்தாரா, மோல்டிவியன் எயார் மற்றும் சலாம் எயார் ஆகிய விமான சேவைகள் நிறுவனங்களுடன் ஆரம்ப கட்ட கலந்துரையாடல்களும் நடத்தப்பட்டுள்ளன.

இதன் பிரதிபலனாக எட்டு விமான சேவை நிறுவனங்கள் மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினூடாக விமான பயணங்களை ஆரம்பித்துள்ளன. ஸ்கெட், எயார் அஸ்டானா, யுக்ரேய்ன் எயார் லைன், இன்டிகோ, எமிரேட்ஸ், மோல்டிவியன் எயார் மற்றும் சலாம் எயார் ஆகிய விமான சேவைகள் தங்களது விமான பயணங்களை ஏற்கனவே ஆரம்பித்தும் உள்ளன.

மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்திலிருந்து கடந்த மார்ச் மாதம் 31 ஆம் திகதி வரையில், 687 விமானப் பயணங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. இவற்றில் 33450 இற்கும் கூடுதலான பயணிகள் விமான சேவையைப் பெற்றுள்ளனர்.

வெளிநாடுகளில் நடைபெறும் விமான நிறுவன மாநாடுகளில் கலந்து கொண்டு மத்தலை ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையத்தினை பிரபல்யப்படுத்துவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

## மின்சார வேலியில் சிக்கி யானை உயிரிழப்பு

**அநுராதபுரம் மேற்கு தினகரன், தலாவ குறூப் நிருபர்கள்**

தலாவ கரகஹவெவ பிரதேசத்தில் சட்ட விரோத மின் இணைப்பில் சிக்கி 20 வயது மதிக்கத்தக்க கொம்பன் யானை ஒன்று, உயிரிழந்துள்ளதாக தலாவ வனவிலங்குகள் அலுவலகம் தெரிவித்துள்ளது. விவசாயி ஒருவர் தனது தோட்டத்தை பாதுகாக்கும் நோக்கில் ஏற்படுத்தியிருந்த சட்ட விரோத மின்சார வேலியில் சிக்கியே இந்த யானை உயிரிழந்துள்ளது.இது குறித்து

வன விலங்குகள் அதிகார சபை அதிகாரிகள் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.சம்பவத்துடன் தொடர்புடைய விவசாயியைக் கைது செய்து நீதி மன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் அலுவலகர் மேலும் தெரிவித்தார்.இச்சம்பவம் தொடர்பில் தலாவ வனவிலங்குகள் அலுவலகமும் தலாவ பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

இளைஞர் விவகார மற்றும்விளையாட்டுத்துறை அமைசர் நாமல் ராஜபக்ஷ நேற்று (09) தங்காலை ஆதார வைத்தியசாலைக்கு விஜயம் செய்து அங்கு நிலவும் குறைபாடுகளை கேட்டறிந்துகொண்டார். வைத்தியசாலை அதிகாரிகளுடன் அமைச்சர் உரையாடுவதைப் படத்தில் காணலாம்.

படம்: ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்

## வங்கியில் பணம் வைப்பிலிட வந்தவரை தாக்கி கொள்ளையடித்த முயற்சி முறியடிப்பு

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுரம் புதிய பஸ்தரிப்பு நிலையத்திலுள்ள சம்பத் வங்கி கிளையில் வைப்பிலிடுவதற்கு கொண்டுவரப்பட்ட பல இலட்சம் ரூபா பணத்தினை கொள்ளையடிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாக அநுராதபுரம் பொலிஸார் தெரிவித்தனர்.

அநுராதபுரம் புதிய நகரில் அமைந்துள்ள சம்பத் வங்கி கிளையில் இச்சம்பவம் (06)காலை இடம் பெற்றுள்ளதாக விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார் தெரிவித்தனர். சம்பத் வங்கியிலுள்ள தன்னியக்க இயந்திரத்தின் உதவியுடன் பணத்தை வைப்பிலிடுவதற்கு முயற்சித்த போது, மோட்டார் சைக்கிள் வந்த கொள்ளையர்கள் இருவர் பணத்தை வைப்பிலிட்டுக் கொண்டிருந்தவருக்கு மிளகாய் தூளை வீசி பணத்தை கொள்ளயடிப்பதற்கு முயற்சித்துள்ளனர். மோட்டார் சைக்கிளில் வந்த அடுத்த கொள்ளையர் வங்கியின் பாதுகாப்பு கடமையில் இருந்த பாதுகாப்பு உத்தியோகத்தரின் துப்பாக்கியினை பறிப்பதற்கு முயற்சித்தபோது துப்பாக்கி இயங்கியதில் பாதுகாப்பு உத்தியோகத்தர் காயமடைந்து அநுராதபுரம் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பணத்தை வைப்பிலிடுவதற்கு வந்த வானின் சாரதி பாதுகாப்பு உத்தியோகத்தரிடம் இருந்து கொள்ளையர் அபகரித்த துப்பாக்கியைப் பறித்து கொள்ளயர் மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்ட போதிலும் அவ்விடத்திலிருந்து அவர்கள் தப்பிச்சென்றுள்ளதாக மேலும் தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அநுராதபுரம் தலைமையக பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## அநுராதபுரத்தில் 130 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சை

**அநுராதபுரம் தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்டத்தில் கொவிட் 19 தொற்று நோயினால் பாதிக்கப்பட்ட 130 க்கும் மேற்பட்ட நோயாளர்கள் தத்தமது வீடுகளிலேயே சுய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாக மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.மாவட்டத்தில் அமைக்கப்பட்டுள்ள கொவிட் 19 தொற்று நோய் சிகிச்சை பிரிவுகளில், தற்சமயம் நோயாளர்களை அனுமதிக்க முடியாத நிலமை ஏற்பட்டுள்ளதாலே,இவர்கள் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டு சிகிச்சையளிக்கப்பட்டு வருகின்றனர். கடந்த ஏப்ரல் மாத பண்டிகை காலத்தின் பின்னர் மாவட்டத்தில் அதிகளவிலான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டு தொற்று நோய் சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டனர். இதனால், அப்பிரிவுகளில் நோயாளர்கள் நிரம்பி வளியும் நிலை ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மாவட்டத்தில் இதுவரையான காலப்பகுதியில் 1465 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதுடன் 5856 பேர் சுய தனிமைப்படுத்தலுக்கும் உட்படுத்தப்பட்டுள்ளதாக அநுராதபுரம் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக உயர் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## கொரோனா நோய் நீங்க பிரார்த்தனை

**வெலிகம தினகரன் நிருபர்**

கொவிட்19 கொரோனா தாக்கத்திலிருந்து நாட்டு மக்களை பாதுகாப்பதற்காக வேண்டி நாடு பூராகவும் இடம்பெற்ற பிரார்த்தனைகளுக்கிணங்க, வெலிகம கல்பொக்கை புகாரிப்பள்ளி வாசலிலும் வஷேட பிரார்த்தனைகள் இடம் பெற்றன. இதில் பள்ளிவாசல் கதீப்கள், பள்ளிவாசல் நிர்வாகிகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் கலந்து கொண்டனர்.

பூரண சுகாதார வழிகாட்டல்களுக்கமைய இடம்பெற்ற இப்பிரார்த்தனை நிகழ்வு, பிரமர் மஹிந்த ராஜபக்ஷவின் வழிகாட்டலில் முஸ்லிம் சமயப் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்தது.

## வேளாண்மைச் செய்கையில் ஈடுபட அதிக விவசாயிகள் ஆர்வம்

**திறப்பனை தினகரன் நிருபர்**

அ / ஹிதோகம விவசாய வதிவிடப் பிரிவின் நாச்சியாதீவு பகுதியில் இம்முறை சிறுபோக வேளாண்மை செய்கையில் ஈடுபடுவதற்கு அதிகமான விவசாயிகள் விருப்பம்தெரிவித்துள்ளனர்.

இதனால் உரியநேரத்துக்கு தொழிலாளர்களைப்பெறுவதில் விவசாயிகள் பெரும் சிரமங்ளை எதிர்கொள்கின்றனர்.

கொரோனாவின் தாக்கம் அநுராதபுரம் மாவட்டத்தில் அதிகரித்துள்ளதால் வெளி மாவட்டங்களிலிருந்து விவசாயிகள் வருவதும் குறைடைந்துள்ளது. இந்நிலைமைகள் நீடித்தால், விவசாயச் செய்கைகளை உரிய காலத்திற்கு முடிக்க முடியாமல் போகலாமெனவும் விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

நாச்சியாதீவு விவசாய பகுதியில் கொந்தராத்தின் அடிப்படையில் மாத்திரமே தொழிலாளர்கள் ஈடுபட்டு வருவதால், ஏக்கர் ஒன்றுக்கு ஒரு வேளைக்கு மாத்திரம் ஆராயிரம் ரூபாவை இவர்கள் கூலியாக பெற்று வருகின்றனர்.

இதனால் விவசாயிகள் இம்முறை கடும் கஷ்டங்களை எதிர் கொண்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## வடமத்திய மாகாண பஸ் நடத்துநர்கள் சாரதிகளுக்கு இலவச முகக் கவசங்கள்

**திறப்பனை தினகரன் நிருபர்**

வட மத்திய மாகாணத்திற்குள் சேவையில் ஈடுபட்டுள்ள அனைத்து தனியார் பஸ் சாரதிகள் மற்றும் நடத்துநர்களுக்கு இலவச முகக் கவசம் வழங்கும் வேலைத்திட்டமொன்று இம் மாதம்(10) முதல் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளதாக மாகாண வீதி போக்கு வரத்து அதிகார சபையின் தலைவர் நிலந்த ஏக்கநாயக்க தெரிவித்தார்.

அநுராதபுரம் மற்றும் பொலனறுவை ஆகிய இரண்டு மாவட்டங்களிலும் தற்சமயம் சேவையில் ஈடுபட்டுள்ள சாரதி நடத்துநர்களுக்கே இவற்றை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வட மத்திய மாகாண ஆளுநர் மகிபால ஹேரத் வழங்கிய ஆலோசனையின் பிரகாரம் இத் திட்டத்தைதொடர்ச்சியாக முன்கொண்டு செல்ல திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

சுகாதார வழிமுறைகள் மற்றும் சுகாதார சட்ட திட்டங்களுக்கு இணங்க இவர்களுக்கு இரண்டு முகக் கவசங்கள் வழங்கப்படவுள்ளன.

வட மத்திய மாகாணத்தின் நூற்றுக்கு 40 வீதமான தனியார் பஸ் சேவைகள் தற்போது இடம்பெறும் நிலையில், போக்குவரத்துக்களுக்கு எவ்வித இடையூறுமின்றி, சேவைகள் இடம் பெற்று வருகின்றன.

கொழும்பு, மாளிகாவத்தை பிளேஸ் பகுதியில் குறைந்த வருமானம்பெறும் குடும்பங்களின் பிள்ளைகளுக்கு முன்னாள் மேல் மாகாண சபை உறுப்பினர் அர்ஷாத் நிசாம்தீன் அப்பியாசம் புத்தகம், கொப்பிகளை அன்பளிப்புச் செய்தார். அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முன்னாள் மாகாண சபை உறுப்பினரின் செயலாளர் ரியாஸ் கபூரும் கலந்து கொண்டார்.

## தரம் இரண்டில் கற்கும் மாணவனுக்கு கொரோனா வகுப்பு மாணவர்களும் தனிமைப்படுத்தலில்

**கல்நேவ தினகரன் விசேட நிருபர்**

இபலோகம ஹிரிபிட்டியாகம வித்தியாலயத்தில் இரண்டாம் ஆண்டில் கல்வி கற்கும் மாணவர் ஒருவருக்கு, கொவிட்19 கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக இபலோகம சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் தெரிவித்தது.கொரோனா தொற்று கண்டறியப்பட்ட மாணவனுடைய தாயும் கொரோனா தொற்றுக்குஉள்ளாகியுள்ளார்.

கொரோனா தொற்று கண்டறியப்பட்ட மாணவன் பாடசாலை விடுமுறை வழங்கப்படும் வரை பாடசாலைக்கு சென்றுள்ளதால், இவரது வகுப்பு மாணவர்கள் 19 பேரும், வகுப்பு ஆசிரியையும் தற்போது சுய தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் அனைவருக்கும் பீ.சீ.ஆர்.பரிசோதனை மேற்கொள்ள இபலோகம சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயம் மற்றும் பொது சுகாதார பரிசோதகர்கள் நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இந்த மாணவர் உட்பட இபலோகம சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய பிரதேசத்தில் கொவிட் 19 கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இதுவரை 36 பேர் கண்டறியப்பட்டுள்ளதாகவும்,இதில்

12 பேர் சிங்கள தமிழ் புதுவருட தினத்திற்கு பின்னர் கண்டறியப்பட்டவர்கள் எனவும், இதில் நான்கு பேர் தற்போது வைத்திய சாலைகளில் இடப்பற்றாக் குறை காரணமாக வீடுகளில் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாகவும் பொது சுகாதார வைத்திய அதிகாரி காரியாலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## தென் மாகாணவைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்ற 46 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி

**ஹம்பாந்தோட்டை குறூப் நிருபர்**

தென் மாகாணத்தில் காலி, மாத்தறை மற்றும் ஹம்பாந்தோட்டை ஆகிய மாவட்டங்களில்உள்ள வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வரும் 46 நோயாளர்கள், கொவிட் 19 கொரோனா தொற்றிற்கு உள்ளாகியுள்ளதாக தென் மாகாண கொவிட் 19 கொரோனா தகவல் நிலையம் (09 )அறிவித்துள்ளது. கராபிட்டிய வைத்தியசாலையிலிருந்து 38 பேரும், வலஸ்முல்லை வைத்தியசாலையிலிருந்து மூவரும், தங்காலை வைத்தியசாலையிலிருந்து இருவரும் மற்றும் மாத்தறை, பலபிட்டிய, எல்பிடிய ஆகிய வைத்தியசாலைகளிருந்து தலா ஒவ்வொருவருமாக 46 கொவிட் நோயாளர்கள இனங்காணப்பட்டுள்ளனர். இவர்களுக்கு சிறந்த சிகிச்சையளிப்பதில் தென் மாகாண சுகாதார தணைக்களம் ஈடுபட்டுள்ளது.

## இரசாயன பசளை இடைநிறுத்தம் தொடர்பில் விசேட கலந்துரையாடல்

நுவரெலியா மரக்கறி தோட்ட உரிமையாளர்கள் ,இரசாயன பசளை (உரம்) விற்பனையாளர்கள், இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியாரேுக்கு இடையில் விசேட கலந்துரையாடலொன்று இடம்பெற்றது.

இதன்போது அண்மையில் இரசாயன பசளை இடைநிறுத்தப்பட்டதையடுத்து மரக்கறி தோட்ட உரிமையாளர்களும் இரசாயன பசளை விற்பனையாளர்களும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகங்கொடுத்து வருவதாக இராஜாங்கஅமைச்சர் ஜீவன் தொண்டமானிடம் சுட்டிக்காட்டப்பட்டது.

இதனையடுத்து இவ்விடயம் தொடர்பாக குறித்த அமைச்சர்களின் கவனத்திற்கு கொண்டு செல்லப்பட்டது.

மேலும் இவ்விடயம் தொடர்பாக உரிய அமைச்சர்களுடனும் அதிகாரிகளுடனும் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்கப்படும் என இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் இதன்பாதே தெரிவித்தார்.

# இத்தாலி தீவுக்கு ஆயிரம் தஞ்சம் கோரிகள் வருகை

இத்தாலி தீவானா லம்பெடுசாவுக்கு ஒருசில மணி நேர இடைவெளிக்குள் கடந்த ஞாயிற்றுக்கிழமை 1000க்கும் அதிகமான தஞ்சக்கோரிக்கையாளர்கள் வந்திருப்பதாக உள்ளூர் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இதில் ஒரு படகில் பெண்கள் மற்றும் சிறுவர்கள் உட்பட 400 பேர் இருந்ததாக இத்தாலியின் அன்சா செய்தி நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

சீரான காலநிலை நிலவும் சூழலிலேயே இந்த தஞ்சக்கோரிக்கையாளர்கள் வருகை அதிகரித்திருப்பதாக அந்த தீவின் மேயர் டொடோ மார்டிலோ தெரிவித்துள்ளார்.

ஐரோப்பாவை அடைய முயற்சிப்பவர்களின் பிரதான துறைமுகங்களில் ஒன்றாக லம்பெடுசா உள்ளது. அருகில் இருக்கும் மோல்டாவை ஒட்டி கடற்பகுதியில் மேலும் பல படகுகள் அவதானிக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களுக்கு அவசர உதவி தேவைப்படுவதாக தொண்டு அமைப்புகள் கூறியுள்ளன.

'ஒரு மீட்பு முயற்சியின் மூலம் மொத்தம் 231 பேர் மூழ்கும் அபாயத்தில் இருந்து காப்பற்றப்பட்டனர்' என்று தொண்டு அமைப்ப ஒன்று குறிப்பிட்டுள்ளது.

இந்த ஆண்டு ஆரம்பம் தொடக்கம் லம்பெடுசா தீவுக்கு சுமார் 11,000 தஞ்சக் கோரிக்கையாளர்கள் வந்துள்ளனர். இது கடந்த ஆண்டு இதே காலப்பிரிவில் வருகை தந்த 4,105 பேருடன் ஒப்பிடுகையில் கணிசமான அதிகரிப்பாக உள்ளது.

# உயர்தர பரீட்சை பெறுபேற்று பகுப்பாய்வு அறிக்கை வெளியீடு

## இறுதி இடத்தில் கிழக்கு மாகாணம்

**(காரைதீவு குறூப் நிருபர்)**

கடந்தவா ரம் வெளியான 2020ஆம் ஆண்டுக்கான க.பொ.த.உயர்தரப் பரீட்சை தொடர்பான பகுப்பாய்வு அறிக்கையை கல்வி அமைச்சின் மதிப்பீட்டு ஆய்வுப்பகுதி வெளியிட்டுள்ளது.

மாகாண அடிப்படையில் முதலிடத்தை வடமேல் மாகாணமும் இறுதி இடத்தை அதாவது ஒன்பதாம் இடத்தை கிழக்கு மாகாணமும் அடைந்துள்ளது. அதேவேளை, வடக்கு மாகாணம் ஆறாவது இடத்தை அடைந்துள்ளது.

மாகாண அடிப்படையில் முதலிடத்தை வடமேல் மாகாணமும் இரண்டாமிடத்தை மேல் மாகாணமும் மூன்றாமிடத்தை ஊவா மாகாணமும் நான்காம் இடத்தை தென்மாகாணமும் ஐந்தாம் இடத்தை சபரகமுவ மாகாணமும் ஆறாம் இடத்தை வடக்கு மாகாணமும் ஏழாம் இடத்தை மத்திய மாகாணமும், எட்டாமிடத்தை வடமத்திய மாகாணமும் ஒன்பதாமிடத்தை கிழக்கு மாகாணமும் பெற்றுள்ளன.

---

**திகதி 09.05.2021**
**ஞாயிற்றுக்கிழமை**
**உத்தியோகபூர்வ முடிவுகள்**
www.nlb.lk

### மஹஜன சம்பத

சீட்டிழுப்பு இலக்கம் : 4476
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 23,820,936.60
ஆங்கில எழுத்து: M
வெற்றி இலக்கங்கள்: 1 9 2 9 1 7
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 10,000,000.00

### கொவிசெத

Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் : 2771
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,204,580.00
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 05 15 21 38
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 71,447,134.00

### செவன

சீட்டிழுப்பு இலக்கம் : 336
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,670,830.00
ஆங்கில எழுத்து: N
வெற்றி இலக்கங்கள்: 04 08 11 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 14,000,000.00

### தன நிதானய

சீட்டிழுப்பு இலக்கம் : 513
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 3,529,780.00
ஆங்கில எழுத்து: Z
வெற்றி இலக்கங்கள்: 11 40 46 51
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 96,621,814.40

### தரு திரி சம்பத

சீட்டிழுப்பு இலக்கம்: 37
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 1,992,480.00
ஆங்கில எழுத்து: T
வெற்றி இலக்கங்கள்: 30 46 74 92
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு
ரூ. 7,284,260.40

**09.05.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 460,863**
**பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.36,218,606.60**
**மஹஜன சம்பத சுப்பர் பரிசு ரூ.17,739,636.60 சுப்பர் பரிசு 01**
**ரூ. 1,000,000.00 பரிசுகள் 02 ரூ. 100,000.00 பரிசுகள் 22**

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெறும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01

---

# எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி பகிரங்க ஏலவிற்பனை

எல் பீ ஃபினான்ஸ் பி.எல்.சி நிறுவனத்தில் அடகு வைத்து தங்கக் கடன் பெற்று, உரிய காலத்தினுள் மீட்கப்படாத தங்க நகைகள் பின்வரும் இடங்களில் கீழ்க்காணும் திகதிகளில் மு.ப. 10.00 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| ஏலவிற்பனைத் திகதி | | முகவரி |
|---|---|---|
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 755/1, பண்ணிபிட்டிய வீதி, பத்தரமுல்ல. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 91, ஹைலெவல் வீதி, கிருலப்பனை, கொழும்பு 06. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 92, ஸ்டான்லி திலகரட்ன மாவத்தை, நுகேகொடை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல.434, ஈ.டபிள்யு.பெரேரா மாவத்தை, கோட்டே வீதி, பிட்டகோட்டே. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 595, ஹைலெவல் வீதி, கங்கொடவில, நுகேகொடை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 61/2, கண்டி வீதி, திஹாரிய. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 594/3, கண்டி வீதி, நிட்டம்புவ. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 19, பிரதான வீதி, கேகாலை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 1B, பௌத்தாலோக மாவத்தை, கம்பஹா. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 81, கண்டி வீதி, வரகாபொல. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 282, அநகாரிக தர்மபால மாவத்தை, மாத்தறை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 13, ஸ்டேசன் வீதி, மாத்தறை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 66, திஸ்ஸ வீதி, தங்காலை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 83, தெனியாய வீதி, அக்குரெஸ்ஸ. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 2, எச்.வி.கட்டிடம், தெல்லாவ வீதி, நெலுவ. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 149, பிரதான வீதி, தெனியாய. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 65/A, ஸ்ரீ சத்தர்ம மாவத்தை, மாளிகாவத்தை, கொழும்பு 10. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 282, நாகலாகம் வீதி, கொழும்பு 14. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 52/17, கொதட்டுவ புதிய நகரம், கொதட்டுவ. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 21, புனித ஜோசப் வீதி, கொழும்பு 14. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 371/1, டாம் வீதி, கொழும்பு 12. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 551, தெமட்டகொட வீதி, கொழும்பு 09. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 66, ஜம்பட்டா வீதி, கொழும்பு 13. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 197, செட்டியார் தெரு, கொழும்பு 11. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 256, புதிய நகரம், தம்புத்தேகம. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | ரஜரட்ட கட்டிடம், பிரதான வீதி, கதுருவெல, பொலன்நறுவை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 137, பிரதான வீதி, அனுராதபுரம். |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 514/A, புதிய நகரம், அனுராதபுரம். |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 26, கண்டி வீதி, மதவாச்சி. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 38, குருநாகல் சந்தி, தம்புளை. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | பிரதான வீதி, மெதிரிகிரிய. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 15, தலாவ வீதி, கெக்கிராவ. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 24, சிலாபம் வீதி, ஆனமடுவ. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 96, அகலவத்த வீதி, மத்துகம. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 87, பிரதான வீதி, பிட்டிகல. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 14, பிரதான வீதி, எல்பிட்டிய. |
| 01/07/14/21 | ஜீன் 2021 | இல. 48, இரத்தினபுரி வீதி, பதுரலிய. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 134, பிரதான வீதி, வென்னப்புவ. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 106C, குருநாகல் வீதி, புத்தளம். |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 356, பிரதான வீதி, நீர்கொழும்பு. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 40A, கொழும்பு வீதி, சிலாபம். |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 110, சிலாபம் வீதி, கொச்சிகடை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 57, வெயாங்கொட வீதி, மினுவாங்கொட. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 229/1, கடவத்த வீதி, கனேமுல்ல. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 69, கிரஉல்ல வீதி, திவுலபிட்டிய. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 107, சென் ஜோசப் வீதி, நீர்கொழும்பு. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 75A, சிலாபம் வீதி, மாரவில. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 434, பேஸ்லைன், சாலை, அவரிவத்தா கட்டுநாயக்க. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 661/A, தேவத்த வீதி, ராகம. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 6/1/1, பழைய நீர்கொழும்பு வீதி, ஜா-எல. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 39, கொழும்பு வீதி, கந்தானை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 18, எலகந்த, ஹெந்தல, வத்தளை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 17, ஸ்டேசன் வீதி, ஹெந்தல சந்தி, வத்தளை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 350/16, கொழும்பு வீதி, தெல்கொட. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 484, அவிசாவளை வீதி, கடுவளை |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 722, வராகொட வீதி, விஹாரை சந்தி, களனி. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 44, மாகொல வீதி, கிரிபத்கொட. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 175, கண்டி வீதி, கிரிபத்கொட. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 139/6, கண்டி வீதி, கடவத்தை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 145, மலே வீதி, கொழும்பு 02. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 66, காலி வீதி, கல்கிசை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 11, கல்தெமுல்ல வீதி, மொரட்டுவ. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 20, தர்மபால மாவத்தை, கொழும்பு 03. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 245, ஸ்ரீ சங்கராஜ மாவத்தை, கொழும்பு 10. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 54, டி.எஸ்.சேனாநாயக்க மாவத்தை, பொரளை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 197, டீன்ஸ் வீதி, கொழும்பு 10. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 556, 558, மருதானை வீதி, கொழும்பு 10. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 239, கிருல வீதி, நாரஹேன்பிட்டி. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 10, ஸ்டேசன் வீதி, மொரட்டுவ. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 68, ஹொரண வீதி, பிலியந்தலை. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 28, தெஹிவளை வீதி, பொரலஸ்கமுவ. |
| 02/08/15/22 | ஜீன் 2021 | இல. 227, டி சொய்ஸா வீதி, மொரட்டுமுல்ல, மொரட்டுவ. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 118A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 103A, கொழும்பு வீதி, குருநாகல். |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 21, தம்புளை வீதி, குருநாகல். |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 12, பிரதான வீதி, குளியாப்பிட்டி. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 35, சரசவி கட்டிடம், பிரதான வீதி, நாரம்மல. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 835/2A, தலங்கம வடக்கு, மாலபே. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 365, ஹைலெவல் வீதி, கொட்டாவ. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 76, ஹைலெவல் வீதி, ஹோமகம. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 347A, கோட்டே வீதி, ராஜகிரிய |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 69, தெஹிவளை வீதி, மஹாரகம. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 227/A, ஹைலெவல் வீதி, வத்தேகெதர, மஹாரகம |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 124/A, துட்டுகெமுனு வீதி, கொஹுவல. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 165, தர்மபால மாவத்தை, கொழும்பு 07. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 50/12, கொடகம வீதி, அத்துருகிரிய. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 04, பாணந்துறை வீதி, பண்டாரகம. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 18, கெசெல்வத்த, பாணந்துறை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 508, காலி வீதி, பாணந்துறை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 103, பாணந்துறை வீதி, ஹொரணை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 534, காலி வீதி, வாத்துவ. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 334, பிரதான வீதி, களுத்துறை தெற்கு. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 358/D, மத்துகம வீதி, தர்கா நகர். |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 175/A, காலி வீதி, பேருவளை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 358, காலி வீதி, அளுத்கம. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 84A, காலி வீதி, தெஹிவளை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 124, காலி வீதி, தெஹிவளை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 224, காலி வீதி, வெள்ளவத்தை. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 269, பிரதான வீதி, அத்திடிய. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 275/75, பேராசிரியர். ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 676, காலி வீதி, கொழும்பு 03. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 150, பிரதான வீதி, காலி. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 96/2, காலி வீதி, அம்பலாங்கொட. |
| 03/09/16/23 | ஜீன் 2021 | இல. 598 E, ஹிரிம்புர வீதி, கராபிட்டிய. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 56, 57, எட்வின் விக்ரமரட்ன சொப்பிங் கம்பிளெக்ஸ், புதிய நகரம், மஹியங்கனை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 44/1, புதிய பேருந்து தரிப்பிட வீதி, மொனராகலை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல.10/2, இலங்கை வங்கிக்கு எதிரே, புதிய நகரம், தெஹியத்தகண்டிய. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 226, டி எஸ் சேனநாயக்க வீதி, கண்டி |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 153, மடவல வீதி, கட்டுகஸ்தோட்டை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 251, பிரதான வீதி, மாத்தளை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 55, லோவர் வீதி, பதுளை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 167, பிரதான வீதி, பண்டாரவளை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 3, நுவரெலியா வீதி, வெலிமடை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 26, வங்கி வீதி, பதுளை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 71, ராணி எலிசபெத் மாவத்தை, நுவரெலியா. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 473, நுவரெலியா வீதி, புஸ்ஸல்லாவ |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 22, நுவரெலியா வீதி, கம்பளை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 115, கொட்டுகொடெல்ல வீதி, கண்டி. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 13A, கண்டி வீதி, கெலிஓயா. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 52, தன்பார் வீதி, ஹட்டன். |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 175, பிரதான வீதி, மஸ்கெலியா. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 66, நாவலபிட்டிய வீதி, கம்பளை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 298, கொழும்பு வீதி, பிலிமத்தலாவ. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 73, கொத்மலை வீதி, நாவலபிட்டி. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 367/1, அளுத் மாவத்தை, கொழும்பு 15. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 81, மோதர வீதி, கொழும்பு 15. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 03, சென் லூசியாஸ் வீதி, கொட்டாஞ்சேனை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 3/729, பாம் வீதி, கொழும்பு 15. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 47, கிராண்ட்பாஸ் வீதி, கொழும்பு 14. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 04, மணிக்கூட்டு கோபுரம் எதிரே, அம்பாறை |
| 04/10/17/25 | ஜீன் 2021 | MPCS கட்டிடம், பிரதான வீதி, சாய்ந்தமருது - 09. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | பிரதான வீதி, மட்டக்களப்பு வீதி, கல்முனை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 25, ஹிஜ்ரா சந்தி, கல்முனை வீதி, சம்மாந்துறை. |
| 04/10/17/25 | ஜீன் 2021 | இல. 28, சாகம வீதி, அக்கரைப்பற்று - 08 |
| 04/10/17/25 | ஜீன் 2021 | பிரதான வீதி, பொத்துவில். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 24/A, பிரதான வீதி, ஹங்வெல்ல. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 25, யட்டியாந்தோட்ட வீதி, அவிசாவளை |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 141/A, கொலன்னாவ வீதி, கொலன்னாவ. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 25A, பிரதான வீதி, எஹெலியகொட. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 49, சேனாநாயக்க மாவத்தை, இரத்தினபுரி. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 34, பிரதான வீதி, திஸ்ஸமஹாராமய |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 21, புதிய நகர வீதி, எம்பிலிபிட்டிய. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 19, தனயம் பிவிசும் மாவத்தை, பலாங்கொட. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 275, சென்ரல் வீதி, திருகோணமலை. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 175, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல.301, மொஹமட் அலியார் கட்டிடம், பிரதான வீதி, காத்தான்குடி-01. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 50/2, பிரதான வீதி, கிண்ணியா. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | பிரதான வீதி, 10 ஆம் பிரிவு, கொக்கட்டிச்சோலை |
| 05/11/18/26 | ஜீன் 2021 | சந்தைக்கு எதிரே, பிரதான வீதி, வாழைச்சேனை |
| 05/11/18/26 | ஜீன் 2021 | பாடசாலைக்கு எதிரே, வைத்தியசாலை வீதி, களுவாஞ்சிக்குடி. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | சந்தைத் தொகுதிக்கு எதிரே, பிரதான வீதி, செங்கலடி |
| 05/11/18/26 | ஜீன் 2021 | பிரதான வீதி, அட்டாளைச்சேனை |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 69, பிரதான வீதி, அச்சுவேலி. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 136, கண்டி வீதி, சாவகச்சேரி. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 440, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 111, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 406, வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 10, பருத்தித்துறை வீதி, நெல்லியடி. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 187, பிரதான வீதி, மன்னார். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 497, கண்டி வீதி, கிளிநொச்சி. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 32B, 2ஆம் குறுக்குத் தெரு, வவுனியா. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | வாட் இல. - 01, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | பி டபிள்யு வீதி, முல்லைத்தீவு. |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 55, கே கே எஸ் வீதி, சுன்னாகம். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 171, யாழ்ப்பாணம் வீதி, மானிப்பாய். |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 95, பலாலி வீதி, திருநெல்வேலி |
| 05/11/18/26 | ஜீன் 2021 | பிரதான வீதி, மல்லாவி |
| 05/11/18/26 | ஜீன் 2021 | இல. 266, தெல்லிப்பளை வீதி, வட்டு தென்மேற்கு, வட்டுக்கோட்டை |

எந்தவொரு முன்னறிவித்தலுமின்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளிப் போடவோ எல்பீ ஃபினான்ஸ் பி.எல்சி நிறுவனத்துக்கு உரிமம் உள்ளது.

LB FINANCE
தலைமை முகாமையாளர் - தங்கக் கடன் பிரிவு
275/75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

---

வாங்கிவிட்டீர்களா?
வண்ண வானவில்
சிந்தையெங்கும் வர்ணஜாலம்

- முழுக் குடும்பத்துக்கும் ஏற்ற பல்சுவை இதழ்
- சிந்தை கவர்ந்த சினிமா செய்திகள்
- அந்தக் கால சினிமா
- சிறுவர் வண்ண மலர்
- விளையாட்டு
- மகளிர் பகுதி
- மருத்துவம்
- உளவியல் உண்மைக் கதைகள்
- சிறுகதைகள்
- குற்றச் சம்பவம்
- இளைஞர்களுக்கான பல்சுவைப் பகுதிகள்

36 பக்கங்களுடன்...
50/- மட்டுமே
நாடெங்கிலும் இப்போது கிடைக்கிறது!
LAKE HOUSE
பக்கத்துக்குப் பக்கம் இனிமை, இளமை, செழுமை

# பிரதேச சபை – வெலிமட

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## SKID STEER லோடரை வழங்குதல் மற்றும் விநியோகித்தல்

**(BD/WPS/GOODS/2021/1)**

1. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாண சபை வெலிமட பிரதேச சபையின் கீழ் SKID STEER லோடர் ஒன்றைக் கொள்வனவு செய்ய உத்தேசித்துள்ளது.
2. எனவே பின்வருமாறு விபரிக்கப்படும் SKID STEER லோடர் ஒன்றை வழங்கி விநியோகிப்பதற்கு தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை வெலிமட பிரதேச சபையின் சார்பில் வெலிமட பிரதேச சபையின் பெறுகைக் குழுவின் தலைவர் இப்போது அழைக்கின்றார்.

| இல. | விபரம் | எண்ணிக்கை (அலகு) | தேவையான விலைமனுப் பிணை முறி (இல. ரூபா) | விலைமனுப் பிணை முறி செல்லுபடியாகும் காலம் |
|---|---|---|---|---|
| A-1 | Skid steer Loader | 01 | 55000.00 | 02/09/2021 |

- ➢ விநியோக இடம்: வெலிமட பிரதேச சபை
- ➢ விநியோக திகதி: வழங்கல் கடிதம் விநியோகிக்கப்பட்ட திகதி முதல் 60 நாட்களுக்குள்.

3. தேசிய போட்டி ரீதியில் விலைக்கோரல் நடைமுறைபடுத்தப்படும்.
4. ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விலைமனுதாரர்கள் மேலதிக விபரங்களை வெலிமட பிரதேச சபை செயலாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். .(057-2245973) மற்றும் 2021 ஜூன் 02ஆம் திகதி வரை மேற்குறிப்பிடப்பட்ட இதே முகவரியில் அலுவலக நேரங்களில் (மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை) விலைமனு ஆவணங்களைப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5. 5 மில்லியன் ரூபாவிற்கு மேற்பட்ட விலைக்கோரலுக்கு 1987ஆம் ஆண்டின் 03ஆம் இலக்க அரச பொதுச் சட்டத்தின் கீழ் வழங்குநர் பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.
6. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2021 ஜூன் 02ஆம் திகதி வரை வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை மீளளிக்கப்படாத கட்டணமாக இரண்டாயிரம் (2000.00 இல. ரூபா) ரூபாவைச் செலுத்தியும் மற்றும் வெலிமட பிரதேச சபையின் செயலாளருக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் கடிதமொன்றையும் சமர்ப்பிப்பதன் பேரில் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவு முறை ரொக்கப் பணமாகவிருத்தல் வேண்டும்.
7. விலைமனுக்களை நகல் பிரதியுடன் 2021 ஜூன் 3ஆம் திகதி பி.ப. 2.00 மணி அல்லது அதற்கு முன் மேற்படி 4ஆம் பந்தியில் குறிப்பிட்ட முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது மேற்படி முகவரியில் (4ஆம் பந்தி) வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைக்கோரல் முடிவுறுத்தப்பட்டதன் உடனடுத்து சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.
8. விலைமனுக்கள் 2021 ஆகஸ்ட் 5ஆம் திகதி வரை செல்லுபடியாதல் வேண்டும்.
9. சகல விலைமனுக்களுடனும் விலைமனுப் பிணை முறியாக இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட வங்கி உத்தரவாதமொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். இந்த பிணை முறி 2021 செப்டெம்பர் மாதம் 2ஆம் திகதி வரை செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும்.

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**வெலிமட பிரதேச சபை.**
**057-2245973**
**2021-05-10**

---

# கிண்ணியாவில் கொரோனா சிகிச்சை நிலையங்களை அமைக்க ஏற்பாடு

**திருமலை மாவட்ட விசேட நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தில் குறிப்பாக கிண்ணியா பிரதேசத்தில் கொரோனா தொற்றாளர்கள் அதிகமாக அடையாளம் காணப்படுவதால் கிண்ணியாவிலும் கொரோனா சிகிச்சை நிலையம் அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

திருகோணமலை மாவட்டத்தின் குச்சவெளி, ஈச்சிலம்பற்று போன்ற பிரதேசங்களில் இவ்வாறான சிகிச்சை நிலையங்கள் அமைக்கப்பட்டு இருந்த போதிலும் அவற்றில் இடப்பற்றாக்குறை நிலவுகின்றது. இதன் அடிப்படையில் குறிஞ்சாக்கேணி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட நடுத்தீவு ஆயுர்வேத வைத்தியசாலை, மற்றும் விருந்தினர் விடுதி என்பவற்றை மேற்படி நிலையங்களாக மாற்ற முடியும்.

இது குறித்து கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எம்.எம். கனி கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரிடமும் மற்றும் சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் முன்வைக்க உள்ளதாக பிரதேச செயலாளர் தெரிவித்தார்.

---

# கந்தளாய் சீனிஆலை கொரோனா தடுப்பு மத்திய நிலையமாக மாற்றம்

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மாவட்டத்தின் கந்தளாய் சீனிஆலை இளைஞர் படையணி நிலையம் கொரோனா தடுப்பு மத்திய நிலையமாக மாற்றப்பட்டுள்ளது.

நூற்றுக்கும் மேற்பட்ட நோயாளர்கள் தடுத்து வைக்கப்பட்டு கிகிச்சை அளிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கந்தளாய் இளைஞர் படையணி நிலையத்தினை திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் தலைவருமான கபில அத்துக்கோரல. நேற்றுமுன்தினம் (9) நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன் போது திருகோணமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டி.ஜி.எம்.கொஸ்தாவிடம் விபரங்களை பாராளுமன்ற உறுப்பினர் கேட்டறிந்தார்.

---

# அட்டாளைச்சேனை தேசிய பாடசாலைக்கு புதிய அதிபர்

**அக்கரைப்பற்று மேற்கு தினகரன் நிருபர்**

அட்டாளைச்சேனை மத்திய கல்லூரி தேசிய பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவை தரம் 1 ஐச் சேர்ந்த மீராசாஹிப் நபார் புதிய அதிபராக அண்மையில் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

இவர் சாய்ந்தமருது08ம் பிரிவைச் சேர்ந்த அசனார் மீராசாஹிபு உமறு லெவ்வை அலிமாக்கண்டு தம்பதியினரின் புதல்வரார். தனது ஆரம்பக் கல்வியை சாய்ந்தமருது அல்ஜலால், நிந்தவூர் அல்ஸபா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளிலும் உயர் கல்வியை கல்முனை ஸாஹிறா கல்லூரியிலும் கற்று பேராதனைப்பல் கலைக் கழகத்தில் பொதுக்கலைமாணி பட்டத்தையும் பெற்றுள்ளார்.

சமூக சேவைத் திணைக்களம், நிந்தவூர் பிரதேச செயலகம், கல்முனை கட்டிடங்கள் திணைக்களம் ஆகியவற்றில் பணியாற்றிய நிலையில் இலங்கை ஆசிரியர் சேவைக்கு 2000 ஆம் ஆண்டு தெரிவாகிய இவர், சாய்ந்தமருது மல்ஹருல் ஷம்ஸ் மற்றும் கல்முனை அல்பஹ்ரியா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் ஆசிரியராக பணிபுரிந்துள்ளார்.

பின்னர் இலங்கை அதிபர் சேவைப் பரீட்சையில் சித்தியடைந்து கல்முனை அல்ஜலால் வித்தியாலயம், கல்முனை அல்அஷ்றப் மகா வித்தியாலயம், கல்முனை அல் பஹ்ரியா மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளில் அதிபராக சேவையாற்றியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

---

# சேனைக்குடியிருப்பில் இரு மாணவிகள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 3 'ஏ' சித்தி

**காரைதீவு குறூப் நிருபர்**

கல்முனையையடுத்துள்ள சேனைக்குடியிருப்பு கணேச மகா வித்தியாலயத்தில், இம்முறை க.பொ.த உயர்தரப் பரீட்சைப்பெறுபேறுகளின்படி இரு மாணவிகள் 3 ஏ சிறப்புச் சித்திகளைப் பெற்றுள்ளனர்.

மாணவிகளான யோகராசா லிதுர்ஷனா 3ஏ பெற்று மாவட்டத்தில் 12ஆவது நிலையிலும், தவக்குமார் கேமஷாலினி 3ஏ பெற்று 56 ஆவது நிலையிலும் சித்திபெற்றுள்ளனர்.

---

# ஹோமாகம பிரதேச சபை

## 2021ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள்/ ஒப்பந்ததாரர்களைப் பதிவு செய்தல்

**2021ஆம் வருடத்திற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்கு பதிவு செய்துகொள்ள உத்தேசிக்கும் ஒப்பந்தக்காரர்கள்**/ அங்கீகரிக்கப்பட்ட தொண்டு நிறுவனங்கள்/ வழங்குநர்கள் மற்றும் உற்பத்தியாளர்களிடமிருந்து, 2021.06.01ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை என்னால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. **கவனிக்கவும்:- 2021 ஆண்டிற்காக முன்பு பதிவு செய்துள்ள நிறுவனங்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.**

அனைத்து விண்ணப்பங்களும், தமது நிறுவன (இருப்பின்) முகவரி மற்றும் ஏனைய விபரங்களுடன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்படல் வேண்டும். பின்வரும் மாதிரிக்கமைவாக குறித்த விண்ணப்பப்பத்திரம் தயாரிக்கப்படல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையில் “வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்ளல் 2021” எனக் குறிப்பிட வேண்டும்.

அனைத்து வழங்கல்கள் மற்றும் சேவைகளுக்காக 1000.00 ரூபா பதிவு செய்யும் விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு “தலைவர், ஹோமாகம பிரதேச சபை” எனும் பெயருக்கு எழுதப்பட்ட காசோலையொன்றை உங்கள் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

அனைத்து ஒப்பந்தக்காரர்களும் 1000.00 ரூபா பதிவு செய்யும் விண்ணப்பக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும். சித்திகரமான ஒப்பந்தக்காரர்கள் என உறுதிப்படுத்துவதற்காக எழுத்து மூல சாட்சியங்களை சமர்ப்பித்தல் வேண்டும். (ICTAD) நிறுவனத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள், பெறுமதிச் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் என்பது கட்டாயமில்லை.

### பொருள் வழங்கல்

1. கணனி துணைப்பாகங்கள், அச்சு இயந்திரம் மற்றும் தொலைநகல் இயந்திரம் மற்றும் நேரம் பதிவு செய்யும் இயந்திரம்
2. அலுவலக உபகரணங்கள், தட்டச்சு, ரோணியோ இயந்திரம் புகைப்படப் பிரதி இயந்திரம், கல்கியுலேட்டர் மற்றும் கூட்டல் இயந்திரம்
3. அலுவலக மேசை, கதிரை மற்றும் உபகரணங்கள் (மரம், இரும்பு, பிளாஸ்டிக், உருக்கு)
4. கனரக வேலை இயந்திர உதிரிப்பாகங்கள் (பெக்கோ லோடர்/ மோட்டார் கிறேடர்)
5. சிறுவர் பூங்கா தொடர்பான விளையாட்டு உபகரணங்கள்
6. உடற்பயிற்சி உபகரணங்கள்
7. விளையாட்டு உபகரணங்கள்
8. நினைவுப் படிகங்கள் (கருங்கல் ஆக்கங்கள் உட்பட)
9. கொடி, செயற்கை அலங்கரிப்புகள்
10. திரைச்சீலை, மேசை விரிப்பு மற்றும் நுளம்பு வலை
11. அலுவலக கைப்பைகள், மழை அங்கிகள் மற்றும் குடைகள்
12. பாதணிகள்/ பாதுகாப்பு பாதணிகள், கம்பூட்ஸ் மற்றும் மழை அங்கிகள்
13. முன்பள்ளி சீருடைகளைத் தைத்து வழங்கல்
14. சீருடைகளுக்கான துணிகள்
15. ஊழியர் சீருடைகளைத் தைத்து வழங்கல் மற்றும் டீ சேர்ட் மற்றும் சீருடை இலச்சினைகள்
16. பாடசாலைச் சிறுவர்களுக்கான தண்ணீர் போத்தல் மற்றும் உணவுப்பெட்டி, பாடசாலைப் பை, குடை
17. இறப்பர் முத்திரைகளைத் தயாரித்தல்
18. மிதிவண்டி தகடு வகைகளை வழங்கல்
19. ஈர்க்கில், தும்புத்தடி, வாளி, குடை, மொப் மற்றும் பொலிசெக் பேக்
20. கிருமி நாசினி, களைகொல்லி மற்றும் பீடைகொல்லிகள்
21. அலுவலக திரைச்சீலை தைத்து, பூர்த்தி செய்து மற்றும் பொருத்திக் கொடுத்தல்/ குஷன் வேலைகள்
22. புற்கற்றை, தும்புச்சோறு மற்றும் உரம்
23. நுளம்பு நாசினி விசிறும் இயந்திரம், புகையடிக்கும் இயந்திரம் போன்ற உபகரணங்கள்
24. புல்வெட்டும் இயந்திரம் உள்ளிட்ட தோட்ட அலங்கரிப்பு உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
25. சவர்க்காரம், சுத்திகரிப்பு மற்றும் சுத்தம் செய்யும் பொருட்கள்
26. நீரைச் சுத்தப்படுத்தும் மற்றும் சுத்திகரிப்புப் பொருட்கள்
27. குடிநீர் போத்தல்கள்
28. இயந்திராதிகள் மற்றும் வாகன உதிரிப்பாகங்கள்
29. தீயணைக்கும் உபகரணம் மற்றும் பாதுகாப்பு உபகரணம், கண் பாதுகாப்புக் கண்ணாடிகள் (Goggles) இறப்பர் கையுறை (Rubber Gloves)
30. அனைத்து பலகை வகைகள்
31. கருங்கல் மற்றும் மட்டம் செய்யப்பட்ட கருங்கல் (அம்மி)
32. இரும்புப பொருட்கள், கட்டிடப் பொருட்கள்
33. பிவீசீ முலாமிடப்பட்ட வலைகள்
34. நீர்க்குழாய் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள்
35. டயில்
36. அனைத்து வகையான நிறப்பூச்சுகள்
37. மிதிவண்டிகள்
38. டிராக்டர்களுக்கான உதிரிப்பாகங்கள்
39. டயர்கள் மற்றும் டியூப்கள்
40. வாகன உதிரிப்பாகங்கள்
41. கை வண்டிகள்
42. மருத்துவ உபகரணங்கள்
43. வீட்டு மின்சார உபகரணங்கள்

### சேவை வழங்கல்

1. அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல்
2. வாகனங்களை சேர்விஸ் செய்தல்
3. i. வாகன திருத்த வேலைகள்
   ii. முச்சக்கர வண்டி திருத்த வேலைகள்
4. உருக்கியொட்டும் மற்றும் இணைப்பு வேலைகள்
5. தொழிலாளர்கள் சேவை (பயிற்றப்பட்டவர்கள்/ பயிற்றப்படாதவர்கள்)
6. கணனி இயந்திரங்களைப் பராமரித்தல், திருத்தவேலைகளைச் செய்தல்
7. அளவை வேலைகள்
8. கணனி மென்பொருள் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் பராமரித்தல்
9. வைபவங்களுக்காக மற்றும் சபைக்குத் தேவைப்படும் சந்தர்ப்பங்களில் உணவு வகைகளை வழங்குதல்
10. கனரக வேலைகளுக்குப் பயன்படுத்தப்படும் இயந்திராதிகளுக்கான திருத்தவேலைகள் (பெக்கோ லோடர், வீதியை அழுத்தும் உபகரணம், மோட்டார் கிறேடர், பீ4, டீ8 டோசர்கள் போன்றவை)
11. பூங்கா அலங்காரங்கள்
12. மரங்களை வெட்டி அகற்றல்
13. மரம் வெட்டும், புல்வெட்டும் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
14. புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம் கணனி இயந்திரங்களின் திருத்தவேலைகள்
15. மேடை உள்ளிட்ட வைபவப் பொருட்களை வழங்குதல்
16. மின் பிறப்பாக்கி இயந்திரங்களை வாடகைக்கு வழங்குதல் (கி.வோ. 10)
17. மின்சார வேலைகள், மேசன் வேலைகள், குழாய் வேலைகள், தச்சுத் தொழில்
18. ட்ரக்டர்/ ட்ரேலர்களின் திருத்தவேலைகள்/ உதிரிப் பாகங்களை வழங்குதல்
19. தகனசாலைகளைப் பராமரிக்கும் சேவையை வழங்குதல்
20. சட்ட ஆலோசனை சேவைகளை வழங்குதல்
21. வீட்டு உபகரண திட்டமிடல் சேவைகள், சேவை வழங்கல்கள் (பட்டய கட்டிடக் கலைஞராக இருத்தல் வேண்டும்)
22. கட்டமைக்கப்பட்ட மற்றும் பட்டய பொறியியல் சேவைகள் வழங்கல்
23. கட்டிடம், வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்பு வேலைகள்
24. வைபவங்களுக்கான மேடை அலங்கரிப்புகள்
25. பிரம்பினாலான கதிரைகள் இழைத்தல்
26. அலுவலக உருக்குத் தளபாடங்களின் திருத்தவேலைகள்
27. நாய்களுக்கான கழுத்துப் பட்டிகள் வழங்குதல்
28. கணனி மென்பொருள் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகள்
29. அலுவலக உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு வேலைகள்
30. தட்டச்சு, கல்கியுலேட்டர், டுப்ளிகேட்டின் மற்றும் கூட்டல் இயந்திரங்களின் திருத்தவேலைகள்
31. புகைப்படமெடுத்தல் மற்றும் வீடியோபடமெடுத்தல்
32. டிஜிட்டல் பெனர் மற்றும் ஸ்டிக்கர் அச்சிடும் வேலைகள்
33. புகைப்படங்களுக்குச் சட்டமிடல் மற்றும் அறிவித்தல் பலகைகளைத் தயாரித்தல்
34. ஒலிபெருக்கி சாதனங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் ஒளியேற்றல்களை வாடகைக்கு வழங்குதல்
35. வாடகை அடிப்படையில் வைபவப் பொருட்களை வழங்குதல்
36. விளையாட்டு உபகரணங்கள் மற்றும் முன்பள்ளி உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள்
37. தீயணைப்பு முறைமை, தன்னியக்க மற்றும் கையால் இயக்கப்படும் தீ அபாய அறிவிப்பு முறைமையை பராமரித்தல்
38. பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தீ பாதுகாப்பு உபகரணங்களின் திருத்தவேலைகள்
39. வளிச்சீராக்கி இயந்திரங்களை வழங்கி நிறுவுதல்
40. ஸ்பிலிட் வகையிலான வளிச்சீராக்கி இயந்திரம் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு
41. பழைய பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல்
42. உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல்
43. சீருடைகளை தைத்து முடிவுறுத்தல் (ஓவரோல்)
44. இயந்திரம் மூலம் மேற்கொள்ளப்படும் என்ஜின் திருத்தவேலைகள் (ஸ்லீவ்களை இணைத்தல், க்ரேன்க் வெட்டுதல், போர் செய்தல் மற்றும் ஏனைய திருத்தவேலைகள்)
45. ஹைட்ரோலிக் ஹோஸ்/ உபகரண திருத்தவேலைகள்
46. வாகன குஷன் திருத்தவேலைகள்
47. வாகன கண்ணாடி உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் அது தொடர்பான பகுதிகளின் திருத்தவேலைகள்
48. வாகன வளிச்சீராக்கிகளின் திருத்தவேலைகள்
49. வாகன ரேடியேட்டர் திருத்தவேலைகள்
50. இன்ஜெக்டர் பம்பிகளின் திருத்தவேலைகள்
51. கிளச்பிளேட், பிறேக் லைனர்களை ஒட்டும் வேலைகள்
52. அனைத்து வாகன டயர்களையும் மீள் நிரப்புதல்
53. ஸ்பீடோ மீட்டர்களின் திருத்தவேலைகள்
54. வாகன கேபிள் வகைகளின் திருத்தவேலைகள்
55. இரும்பு தகடுகளை வளைக்கும் மற்றும் வெட்டும் வேலைகள்

### நிபந்தனைகள்

1. மேற்படி வழங்கல்கள் மற்றும் சேவை/ ஒப்பந்தங்கள் ஒவ்வொரு வகைக்கும் வெவ்வேறாக விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் இதன்பொருட்டு வெவ்வேறாக விண்ணப்பக் கட்டணங்களைச் செலுத்துதல் வேண்டும்.
2. பதிவு செய்துகொள்வதற்கான தகுதியைக் கொண்டுள்ள எந்தவொரு வழங்குநர்/ ஒப்பந்தக்காரரும் முன்வரலாம் என்பதுடன் சமர்ப்பிக்கப்படும் விலைகளை பொதுவாக 06 மாதகாலத்திற்கு மாற்றம் செய்யப்படாது, நிலையாக வைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
3. தேவைப்படும் சந்தர்ப்பங்களில் பதிவு செய்து கொண்டுள்ள வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களுக்குப் புறம்பாகவும் ஏனைய வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களிடமிருந்து பொருட்கள் மற்றும் சேவைகள் தொடர்பாக விலைமனுக்களைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை, ஹோமாகம பிரதேச சபை தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும், வழங்குநர்கள் 30 நாட்களுக்கு கடன் விலைப்பட்டியல் அடிப்படையில் பொருள் மற்றும் சேவையை வழங்க இணங்குதல் வேண்டும்.

#### ஹோமாகம பிரதேச சபையில் பதிவு செய்துகொள்ளும் வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களுக்கு இருக்க வேண்டிய தகவுத் திறன்கள்

1. வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்கள், ஒவ்வொரு சேவை தொடர்பாகவும் வெவ்வேறாக பதிவு செய்துகொள்ளல் வேண்டும்.
2. ஒரே வழங்குநர்/ ஒப்பந்தக்காரருக்கு ஒன்றிற்கு மேற்பட்ட சேவைகளுக்கு பதிவு செய்துகொள்ளத் தேவையாயின், ஒவ்வொரு சேவை தொடர்பாகவும், பதிவு செய்துகொள்ளும் விண்ணப்பக் கட்டணத்தைச் செலுத்துதல் வேண்டும்.
3. வழங்குநர்கள்/ ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதன் மூலம் சபைக்கு வழங்கப்பட வேண்டிய சேவைகளை, அவர்களிடமிருந்து மாத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும் என்ற கடப்பாடு சபைக்கில்லை.
4. பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் போது, குறித்த பொருள் அல்லது சேவை வழங்கப்படுவது யாரிடமிருந்து என்பதை மதிப்பீட்டுக் குழுவின் பரிந்துரைக்கமைவாக கேள்விச் சபை மற்றும் தலைவரினால் சந்தர்ப்பத்திற்கேற்றாற்போல் தீர்மானம் மேற்கொள்ளப்படும்.
5. கூட்டுத்தாபனமெனின், கூட்டுத்தாபனமொன்றாக கூட்டிணைக்கப்பட்டதற்காக வழங்கப்படும் சான்றிதழ்
6. தனி நபர் வியாபாரமொன்றெனின் பதிவுச் சான்றிதழ்
7. நிறுவனமொன்றெனின் நிறுவன சட்டத்திற்கமைவான பதிவுச் சான்றிதழ்

### மாதிரி விண்ணப்பப் பத்திரம்
### ஹோமாகம பிரதேச சபை

#### 2021ஆம் வருடத்தில் வழங்குநர்/ ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்துகொள்வதற்கான விண்ணப்பப்பத்திரம்

01. வழங்குநர்/ ஒப்பந்தக்காரரின் நிறுவனத்தின் பெயர்: ......................................................................................................................................
02. வழங்குநர்/ ஒப்பந்தக்காரரின் நிறுவன முகவரி: ......................................................................................................................................
03. தொலைபேசி இலக்கம் :
    i. நிலையான தொலைபேசி இலக்கம் :- ....................................................
    ii. கையடக்கத் தொலைபேசி இலக்கம் :-...................................................
04. மின்னஞ்சல் முகவரி :-.........................................................................
05. தொலைநகல் இலக்கம் :-.......................................................................
06. வியாபார பதிவிலக்கம் :- .......................................................................
07. வியாபாரத்தின் தன்மை :- ......................................................................
08. பதிவு செய்துகொள்ள வேண்டிய பொருள்/ சேவைகளின் வகுதி:-..................
09. கணக்கு வைத்திருக்கும் வங்கியின் பெயர்:- ...............................................
10. கடன் வசதியை வழங்க முடியுமான காலப்பகுதி:-..........................................
11. சித்திகரமான ஒப்பந்தக்காரர் என்பதை உறுதி செய்வதற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய எழுத்து மூல சான்றுகள்:-..........................................................
12. ICTAD நிறுவனத்தில் பதிவு செய்திருந்தால், பதிவிலக்கம்:-..........................
13. பெசேவ (VAT) வரி இலக்கம் (இருப்பின்) :- ...............................................
14. வழங்குநர்/ ஒப்பந்தக்காரராக பதிவு செய்து கொள்வதற்கான கட்டணம் ரூ. 1,000/-
15. மேற்படி தொகையை ரொக்கப்பணமாக/ ...........................இலக்க காசோலை மூலம் வழங்கப்படுவதுடன், என்னால்/ எம்மால் குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் சரியானவையென்றும், பிரதேச சபைத் தலைவரினால் விதிக்கப்படும் ஒழுங்கு விதிகளுக்கமைவாக ஒப்பந்தக்காரராகப் பதிவு செய்துகொள்ளுமாறு தயவுடன் வேண்டுகின்றேன்.

திகதி : ................................................
விண்ணப்பதாரரின் பெயர் : ................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம் மற்றும் உத்தியோகபூர்வ முத்திரை:........

**திகதி:.................**
**ஹோமாகம பிரதேச சபை.**

**சம்பத் சமிந்த ஜயசிங்ஹ**
**தலைவர்,**
**பிரதேச சபை, ஹோமாகம.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

### இரண்டு பாடசாலைகள் மற்றும் மூன்று விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதிகளுக்கு 130 மீற்றர் - 04 நிரைகளைக் கொண்ட முழுமையான PUR செயற்கை பயிற்சித் தட வசதிகளை (130m - 4 LANE FULL PUR SYNTHETIC TRAINING TRACK FACILITY) வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் பதித்தல்

**ஒப்பந்த இல. MOYS/PCM/PRO/10-2021**

1. இரண்டு பாடசாலைகள் மற்றும் மூன்று விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதிகளுக்கு 130 மீற்றர் - 04 நிரைகளைக் கொண்ட முழுமையான PUR செயற்கை பயிற்சித் தட வசதிகளை (130m - 4 LANE FULL PUR SYNTHETIC TRAINING TRACK FACILITY) வடிவமைத்தல், நிர்மாணித்தல் மற்றும் பதித்தல் என்பவற்றுக்கு உள்நாட்டு ஒப்பந்தக்காரருடன் தகுதி மற்றும் தகைமை வாய்ந்த செயற்கை தட உற்பத்தியாளர்களின் (Full PUR) கூட்டு முயற்சியில் இருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட தொழில்நுட்பம் மற்றும் விலைத் திட்டங்களை (வடிவமைப்பு மற்றும் நிர்மாணம்) இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் சார்பில் அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவர் அழைக்கின்றார்.

   பெயர் வாரியாக இரண்டு பாடசாலைகள் மற்றும் விளையாட்டுத்துறை கட்டிடத் தொகுதிகள்

   அ. அனுராதபுரம் மத்திய கல்லூரி, அனுராதபுரம்
   ஆ. டீ. எஸ். சேனாநாயக்க கல்லூரி, அம்பாறை
   இ. மாவட்ட விளையாட்டுத் துறை கட்டிடத் தொகுதி, கொட்டவில, கம்புறுகமுவ, மாத்தறை
   ஈ. சபரகமுவ மாகாண ரீதியான விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி, இரத்தினபுரி
   உ. சிறிமாவோ பண்டாரநாயக்க விளையாட்டுத்துறை கட்டிடத்தொகுதி, கம்பஹா.

   *Design and laying of 4 lane, 130m Full PUR (Polyurethane) Cast Elastomers Synthetic training track and Long and Triple Jump facility with a Full PUR synthetic runaway. The major items of Work consists of design and installation of foundation base including sub base and sub grade; design and installation of new drainage system, installation of full PUR 4 lane synthetic 130m track, class I tests for synthetic track, construction of Long and Triple Jump facility with a Full PUR synthetic runaway and maintain until the completion of Defects Notification Period, Installation of general purpose lighting, Chain-link fence and Landscaping work* என்பன இந்த வேலையில் உள்ளடங்குகின்றன.

   முழு வேலைகளையும் நிறைவுசெய்வதற்கான காலமானது 150 நாட்காட்டி நாட்களாகும்.

2. விலைக்கோரல்கள் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை மூலம் இடம்பெறும்.

3. தகைமை வாய்ந்த விலைமனுதாரர்கள் பின்வரும் தகவுத்திறன் தேவைப்பாடுகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

   அ. Synthetic track manufacturer shall have experience in installing minimum number of ten (10) IAAF class II or IAAF class I or both, In situ (full PUR) tracks.
   ஆ. Synthetic track manufacturer shall have IAAF certification of Full PUR track product with minimum of 13mm or above thickness
   இ. செயற்கை தட உற்பத்தியாளர்கள் முழுமையாள PUR முறைமையுடனான செயற்கை தட உற்பத்தித் துறையில் 10 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   உ. உள்நாட்டு ஒப்பந்தக்காரர்கள் (கூட்டு முயற்சியின் பொறுப்புப் பங்குதாரர்) வீதி நிர்மாணத் துறையில் 10 வருட அனுபவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஊ. கூட்டு முயற்சியின் பொறுப்புப் பங்குதாரர் உள்நாட்டு பங்குதாரராகவிருத்தல் வேண்டும்.
   எ. கூட்டு முயற்சியின் உள்நாட்டு பங்குதாரர் நிர்மாணக் கைத்தொழில் மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தில் (CIDA) (முன்னைய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் (ICTAD)) C2 அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் வீதி நிர்மாணத் துறையில் பதிவைப் பெற்றிருத்தல் வேண்டும். உள்நாட்டு பங்குதாரர் செயற்கை தட உற்பத்தியுடன் (முழுமையாள PUR) கூட்டு முயற்சியாக விலைக்கோரலில் பங்கேற்க வேண்டும்.
   ஏ. கூட்டு முயற்சி உடன்படிக்கை விலைக்கோரலை கையேற்கும் நேரத்தில் அங்கீகரிக்கப்பட்ட நபர் (சட்டத்தரணி அல்லது நொத்தாரிசு) உறுதிப்படுத்துவார் என்பதுடன் ஒப்பந்தத்தை வழங்கிய பின்னர் மற்றும் வேலைகளை ஆரம்பிக்கும் முன் பதிவாளர் நாயகத் திணைக்களத்துடன் பதிவு செய்து கொள்ளல் வேண்டும்.
   ஐ. செயற்கை தட உற்பத்தியாளர் மற்றும் உள்நாட்டு பங்குதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் உள்ளாகாதவராக இருத்தல் வேண்டும் என்பதுடன் உள்நாட்டு பங்குதாரர் விலைக்கோரல் காலத்தில் CIDA செல்லுபடியாகும் பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
   ஒ. ஒப்பந்தக்காரர் கடந்த ஏழு வருட காலத்தில் குறைந்தபட்சம் 368 மில்லியன் இலங்கை ரூபா வருடாந்த சராசரி புரள்வைக் கொண்ட கட்டிட நிர்மாண வேலையைச் செய்திருத்தல் வேண்டும்.
   ஒ. ஆகக் குறைந்த திரவச் சொத்து அல்லது / மற்றும் கடன் வசதியானது பிரத்தியேகமாக இந்தத் திட்டத்திற்கு வழங்கப்பட்ட எந்தவொரு முற்பணம் தவிர்த்து 147 மில்லியன் இலங்கை ரூபாவிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
   ஓ. 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்களின் 8 ஆம் பிரிவிற்கமைவாக பொது ஒப்பந்தங்களின் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழை விலைமனுதாரர் விலைமனுவுடனும் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் பெறுபவர் மீதான உள்நோக்கக் கடிதத்தையும் சமர்ப்பித்தல் வேண்டும்.
   ஔ. CIDA நிறுவனத்தினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலின் பிரகாரம் கூட்டு முயற்சியின் வெளிநாட்டு தரப்பினர் 2014ஆம் ஆண்டின் 33ஆம் இலக்க நிர்மாணக் கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 39(1) உப பிரிவின் பிரகாரம் ''வெளிநாட்டு ஒப்பந்தக்காரர்களுக்கான தற்காலிகப் பதிவு'' பெற்றுக்கொள்ளல் வேண்டும். திட்டத்தின் ஒப்பந்த பெறுமதியில் 0.01% தற்காலிகப் பதிவுக் கட்டணமாக கருதப்படுகின்றது.

4. 2021-05-11ஆம் திகதி முதல் 2021-06-07ஆம் திகதி வரையான சாதாரண கடமை நேரங்களில் கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 3ம் மாடியிலுள்ள உதவிச் செயலாளர் (பெறுகைகள்) அவர்களிடமிருந்து நீங்கள் மேலதிக விபரங்கள் மற்றும் பரீட்சித்தல் என்பவற்றை மேற்கொள்ளலாம். (தொலைபேசி 011-2680172 / 011-2670028 தொலைநகல் இல. 011-2678926 மின்னஞ்சல்: procurement02@gmail.com). மேற்படி முகவரியில் வேலை நாட்களில் விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

5. கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் பெறுகைகள்) அவர்களுக்கு 2021-05-11ஆம் திகதி முதல் 2021-06-07ஆம் திகதி ஏந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் எழுத்து மூலமான கோரிக்கையொன்றைச் சமர்ப்பிப்பதன் பேரிலும் மீளளிக்கப்படாத கட்டணமாக முப்பத்தையாயிரம் (35,000.00) ரூபாவை (இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 2ஆம் தளம்) சிறாப்பருக்குச் செலுத்துவதன் பேரிலும் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் கிடைக்கத்தக்க முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றை ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

6. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 119 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும். (2021-10-05ஆம் திகதி வரை)

7. அனைத்து விலைமனுக்களும் முப்பத்தாறு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா (3,650,000.00 ரூபா) பெறுமதியான நிபந்தனையற்ற மற்றும் கோரும்போது செலுத்தப்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட இலங்கையில் செயற்படும் வர்த்தக வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைமனுமனுப் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். விலைமனுப் பிணை முறி விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 147 நாட்களுக்கு செல்லுபடியாகும் தன்மையில் இருத்தல் வேண்டும். (2021-11-02ஆம் திகதி வரை)

8. நகல் பிரதியுடன் பூரணப்படுத்தப்பட்டு முத்திரை பொறிக்கப்பட்ட கடிதவுறை -1 (பொதுத் தகவல்கள்), கடிதவுறை – 2 (வடிவமைப்பு / தொழில்நுட்ப பிரேரணை), கடிதவுறை – 3 (விலைப் பிரேரணைகள்) விலைமனுக்களை 2021-06-08ஆம் திகதி பி.ப. 12.30 மணி அல்லது முன் கிடைக்கும் வகையில் கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் 3ஆம் மாடியிலுள்ள மேலதிகச் செயலாளர் (நிர்வாகம் மற்றும் பெறுகைகள்) அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு அல்லது தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, மேற்குறிப்பிடப்பட்ட விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் விலைக்கோரலில் பங்குபற்ற தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டு உடன் திறக்கப்படும்.

9. கொழும்பு-07, இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை, இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு, 4ஆம் மாடி, டங்கன் வைட் கேட்போர்கூடத்தில் 2021-05-21ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு விலைக்கோரலுக்கு முன்னரான கூட்டம் இடம்பெறும். ஒரு விலைக்கோரலுக்கு அதிகபட்சம் 5 எண்ணிக்கையான பிரதிநிதிகளே அனுமதிக்கப்படுவார்கள்.

10. விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைக்கோரல் ஆரம்பத்திலேயே சமுகம் தருமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர். ஒரு விலைக்கோரலுக்கு அதிகபட்சம் 5 எண்ணிக்கையான பிரதிநிதிகளே அனுமதிக்கப்படுவர்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு,**
**இல. 09, பிலிப் குணவர்தன மாவத்தை,**
**கொழும்பு-07.**

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk
Your dream job awaits you...
Newspaper
Web
Social media
Networking
Headhunting
At your fingertips
Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0112429314

OBSERVER JOBS
BREAKING BOUNDARIES
THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE
FOR JOBSEEKERS
www.observerjobs.lk

---

**கடற்றொழில் அமைச்சு**

அலங்கார மீன்கள், நன்னீர் மீன்கள், இறால்களை வளர்த்தல்,
கடற்றொழில் துறைமுகங்கள் அபிவிருத்தி, பலநாள் கடற்றொழில்
அலுவல்கள் மற்றும் மீன் ஏற்றுமதி இராஜாங்க அமைச்சு

**இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகார சபை (NAQDA)**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

01. இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை (NAQDA) நீரியல் வளம் மற்றும் நீர் உயிரின கைத்தொழில் அபிவிருத்தி மற்றும் முகாமைத்துவத்திற்காக 1998 இல.53 தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி சட்டத்தின் கீழ் உருவாக்கப்பட்டுள்ள நிறுவனமாகும்.

கீழ்க்காணும் வேலைகளை செயற்படுத்தி பூர்த்தி செய்வதற்காக தகைமையுள்ள கேள்விதாரர்கள் பொறியிடப்பட்ட கேள்விகளை அனுப்புமாறு இலங்கை தேசிய நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் திணைக்கள பெறுகைக்குழு (பாரிய அளவிலான) தலைவரால் அழைப்பு விடுக்கப்படுகிறது.

| ஒப்பந்தத்தின் பெயர் இலக்கம் மற்றும் நிர்மாண காலம் | நிதி கிடைக்கும் தன்மை | குறைந்தபட்ச CIDA தரம் | விலைமனு பிணைமுறி மற்றும் செல்லுபடி யாகும் காலம் (ரூபா) | விலைமனு பிணைமுறி செல்லுபடி யாகும் காலம் வரை | மீளளிக்கப் படாத கட்டணம் (ரூபா) | தொகை (நிலையற்ற செலவுகள் மற்றும் வெட்வரி இன்றி) பொறியியல் மதிப்பீடு ரூபா மில்லியன் |
|---|---|---|---|---|---|---|
| மாத்தளை மாவட்டத்தின் தம்புள்ள நீர் உயிரின வளர்ப்பு அபிவிருத்தி நிலையத்தின் மேம்படுத்தலுக்கான (06 மாதம்) 2021/SP/DAM/01 | இலங்கை அரசு | C3 C4 நீர்ப்பாசனம்/ நீர் வழங்கல் மட்டும் | 1,000,000.00<br>121 நாட்கள் | 01.10.2021 | 14,000/- | 61.29 |

மேலதிக தகவல்களுக்கு தயவுசெய்து www.naqda.gov.lk இற்கு பிரவேசியுங்கள்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு (பாரிய அளவிலான)**
**இலங்கை தேசிய நீர் உயிரினங்கள் வளர்ப்பு அபிவிருத்தி அதிகாரசபை**
**இல.41/1, புதிய பாராளுமன்ற வீதி,**
**பெலவத்த, பத்தரமுல்ல.**
**2021.05.11**

---

# பெறுகை அறிவித்தல்

**கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணம் மற்றும்**
**கட்டிடப் பொருட்கள் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு**

## அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம் - கொலொன்னாவ

## Supply, Installation, Commissioning, Testing, Training and Handing Over of a Brand-New CNC Lathe Machine, and Supply, Installation and Commissioning, Testing, Training and Handing Over of a Brand New Center Lathe Machine

**பெறுகை இல. 3/1/4/21Q/01/CE/FA/491 மற்றும் 3/1/4/21Q/01/CE/FA/492**

1. அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் திணைக்கள பெறுகைக் குழு தவிசாளரால் புத்தம் புதிய கணனித் தொடர்பினால் கட்டுப்படுத்தும் கடைசல் இயந்திரத்தை வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் காண்பித்து, பரீட்சித்து, தேவையான பயிற்சிகளை வழங்கி ஒப்படைப்பதற்காக தகைமை வாய்ந்த கீர்த்தி வாய்ந்த வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன. வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கான காலம் கட்டளை வழங்கப்பட்டதன் பின் 12 வாரங்களாகும்.

2. நாடளாவிய ரீதியில் விலைமனுக்கள் கோரப்படும்.

3. அபகீர்த்தியாளர் (பிளெக் லிஸ்டட்) பட்டியல்படுத்தப்பட்ட வழங்குநர்கள் விலைமனுக்களை வழங்குவதற்கு தகுதியற்றவர்களாவர்.

4. விபரக்குறிப்பு, வழங்கல் கால எல்லை மற்றும் வரைபு மற்றும் மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளன.

5. இதில் ஆர்வம் கொண்ட கேள்விதாரர்கள் மேலதிக விபரங்களை அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களத்தின் பணிப்பாளர் (பொறியியல் வேலை வழங்கல்) / வழங்கல் இயந்திரப் பொறியியலாளர் (தொலைபேசி: (011)2534579/ (011)2572351/2 நீடிப்பு 150 தொலைநகல் (011) 2572254) அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம். அல்லாவிடில் அரச வேலை நாட்களில் 2021-05-11ஆம் திகதி முதல் 2021-06-02ஆம் திகதி வரை அரசாங்கத் தொழிற்சாலைக்கு சமுகம் தந்து விலைமனு ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

6. 2021-05-11ஆம் திகதி முதல் 2021-06-02ஆம் திகதி வரை அரச வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பணிப்பாளர் நாயகத்திற்கு எழுத்து மூலமான வேண்டுகோள் மற்றும் மீளளிக்கப்படாத 1000.00 ரூபா பணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சடிக்கப்பட்ட விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம்.

7. இரு நகல்களிலான விலைமனுக்களை 2021-06-03ஆம் திகதி மு.ப. 11.00 மணி அல்லது அதற்கு முன் தலைவர், பிரதான பெறுகைக் குழு, 3வது மாடி, தொழிற்சாலை பொறியியல் அலுவலகம், அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களம், கொலன்னாவை எனும் முகவரிக்கு கிடைக்கச் செய்தல் வேண்டும். விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனடுத்து விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும். தாமதமாகக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

8. விலைமனுதாரரினால் மேற்குறிப்பிடப்பட்ட விலைக்கோரலுக்கு இலங்கையில் செயற்படும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றில் குறித்த படிவத்தின் பிரகாரம் முறையே கணனி தொடர்பினால் கட்டுப்படுத்தப்படும் கடைசல் இயந்திரத்திற்காக 150,000.00 ரூபா பெறுமதியானதும் மைய கடைசல் இயந்திரத்திற்காக 40,000.00 ரூபா பெறுமதிக்கான விலைமனுப் பிணை முறி / வங்கிப் பிணை முறி அல்லது அப்பெறுமதிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் காசாளருக்கு பி.ப. 3.00 மணிக்கு முன் செலுத்தப்பட்ட பண வைப்புக்கான பற்றுச்சீட்டின் மூலப் பிரதியை இணைத்து அனுப்புதல் வேண்டும். அப்பிணை முறிகள் / வங்கிப் பிணை முறிகளின் குறைந்தபட்சம் கணனி தொடர்பினால் கட்டுப்படுத்தப்படும் கடைசல் இயந்திரத்திற்கு 2021-09-02ஆம் திகதி வரையும் மைய கடைசல் இயந்திரத்திற்கு 2021-08-19ஆம் திகதி வரையும் செல்லுபடியாதல் வேண்டும்.

9. கேள்வியின் பெறுமதி 5,000.000.00 ரூபாவை விஞ்சும் பட்சத்தில் வெளிநாட்டு உற்பத்தியாளர்களின் உள்நாட்டு முகவர்கள் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவு செய்து கொண்ட படிவத்தை விலைமனுவுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

10. விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான முன்னோடி தெளிவுபடுத்தல் 2021-05-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு அரசாங்கத் தொழிற்சாலைத் திணைக்களத்தின் 3ம் மாடியிலுள்ள பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இடம்பெறும்.

| | பெறுகை இல. | பொருட்களின் விபரம் | விலைமனுப் பிணை முறியின் அளவு | விலைமனுக்கள் திறக்கப்படும் திகதி |
|---|---|---|---|---|
| 01 | **3/1/4/21Q/01/ CE/FA/491** | புத்தம் புதிய கணனித் தொடர்பினால் கட்டுப்படுத்தும் கடைசல் இயந்திரத்தை வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் காண்பித்து, பரீட்சித்து, தேவையான பயிற்சிகளை வழங்கி ஒப்படைத்தல் (Supply, Installation and Commissioning, Testing, Training and Handing Over of a Brand New CNC Lathe Machine) | 150,000.00 | 03-06-2021 |
| 02 | **3/1/4/21Q/01/ CE/FA/492** | புத்தம் புதிய மையக் கடைசல் இயந்திரத்தை வழங்கி, பொருத்தி செயற்படுத்திக் காண்பித்து, பரீட்சித்து, தேவையான பயிற்சிகளை வழங்கி ஒப்படைத்தல் (Supply, Installation and Commissioning, Testing, Training and Handing Over of a Brand New Centre Lathe Machine) | 40,000.00 | 03-06-2021 |

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகைக் குழு,**
**பணிப்பாளர் நாயகம் அலுவலகம்,**
**அரசாங்க தொழிற்சாலைத் திணைக்களம்,**
**கொலொன்னாவை.**
2021-05-11.

## ஹசன் அலி, நவ்மன் அலி அபார பந்து வீச்சு:

# இரண்டாவது டெஸ்டில் சிம்பாப்வே அணி இன்னிங்ஸ் மற்றும் 147 ஓட்டங்களால் தோல்வி

சிம்பாப்வே அணிக்கு எதிரான இரண்டாவது டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி இன்னிங்ஸ் மற்றும் 147 ஓட்டங்களால் வெற்றி ஈட்டி தொடரை 2-0 என கைப்பற்றியது..

பாகிஸ்தான், சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் போட்டி ஹராரேயில் நடைபெற்றது. நாணயச்சுழற்சியில் வென்ற பாகிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தை தேர்வு செய்தது.

முதல் இன்னிங்சில் பாகிஸ்தான் அணி 147.1 ஓவரில் 8 விக்கெட் இழப்புக்கு 510 ஓட்டங்கள் எடுத்து ஆட்டத்தை இடைநிறுத்தியது. அபித் அலி 215 ஓட்டக்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். அசார் அலி 126 ஓட்டங்களிலும், நவ்மன் அலி 97 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

சிம்பாப்வே சார்பில் முசாராபனி 3 விக்கெட்டும், சிசோரா 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதையடுத்து, சிம்பாப்வே அணி முதல் இன்னிங்சை தொடர்ந்தது. இரண்டாம் நாள் முடிவில் சிம்பாப்வே 30 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 52 ஓட்டங்கள் எடுத்தது.

இந்நிலையில், மூன்றாம் நாள் ஆட்டம் நடைபெற்றது. தொடர்ந்து ஆடிய சிம்பாப்வே அணி முதல் இன்னிங்சில் 60.4 ஓவர்களில் 132 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டையும் இழந்து பலோஒன் ஆனது. அந்த அணியில் சகாப்வா அதிகபட்சமாக 33 ஓட்டங்கள் எடுத்தார்.

பாகிஸ்தான் சார்பில் ஹசன் அலி 5 விக்கெட்டும், சஜித் கான் 2 விக்கெட்டும் வீழ்த்தினர்.

இதைத்தொடர்ந்து, சிம்பாப்வே இரண்டாவது இன்னிங்சை ஆடியது. இதிலும் பாகிஸ்தான் பந்துவீச்சாளர்கள் அசத்தி விக்கெட்டுகளை விரைவாக வீழ்த்தினர்.

ஆனாலும், சகாப்வா பொறுப்புடன் ஆடி அரைச் சதமடித்து 80 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார். பிரெண்டண் டெய்லர் 49 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

மூன்றாம் நாள் முடிவில் சிம்பாப்வே அணி 63 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 220 ஓட்டங்கள் எடுத்திருந்தது. லூக் ஜாங்வே 30 ஓட்டங்களுடன் களத்தில் இருந்தார். இன்னும் 158 ஓட்டங்கள் பின்தங்கியது சிம்பாப்வே அணி. நேற்று தனது ஒரு விக்கெட்டையும் காலை வேளையில் பறிகொடுக்க அவ்வணி தோல்வியை தழுவியது. லூக் ஜாங்வே 37 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பாகிஸ்தான் அணி டெஸ்ட் வரலாற்றில் மூன்று பந்து வீச்சாளர்கள் 5 விக்கெட்டுக்களை வீழ்த்தியது குறிப்பிடத்தக்கது.

பாகிஸ்தான் சார்பில் நவ்மன் அலி 5 விக்கெட்டும், ஷஹீன் அப்ரிடி 5 விக்கெட்டும் வீழ்த்தினர். இதன்மூலம் பாகிஸ்தான் அணி டெஸ்ட் தொடரை 2-0 என கைப்பற்றியது.

ஆட்ட நாயகனாக ஆபித் அலி தெரிவானார்.தொடரின் நாயகனாக ஹசன் அலி தெரிவானார். இன்னும் ஒரு நாள் மீதமான நிலையில் ஆட்டம் முடிவுற்றது.

# இலங்கை அணியின் இளம் வீரர்கள் இருவருக்கு கொவிட்–19 தொற்று

இலங்கை கிரிக்கெட் அணியினுடைய இளம் வீரர்களான தனன்ஜய லக்ஷான், மற்றும் இஷான் ஜயரட்ன ஆகியோருக்கு கொவிட்19 வைரஸ் தொற்று ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

அறிமுக வேகப்பந்துவீச்சாளர் ஷிரான் பெர்னாந்துவுடன் நேரடியான தொடர்புகளை பேணியதன் காரணமாகவே, இந்த இரண்டு வீரர்களுக்கும் கொவிட்19 தொற்று ஏற்பட்டிருப்பதாக கண்டறியப்பட்டிருக்கின்றது.

இம்மாத நடுப்பகுதியில் பங்களாதேஷிற்கு சுற்றுப்பயணம் மேற்கொள்கின்ற இலங்கை கிரிக்கெட் அணி அந்த நாட்டு அணியுடன் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடுகின்றது.

இந்த ஒருநாள் தொடரில் விளையாடும் இலங்கையின் உத்தேச அணியில் பெயரிடப்பட்டிருந்த ஷிரான் பெர்னாந்துவே கொவிட்19 தொற்றுக்கு இலக்காகியிருப்பதோடு, அவரினைத் தொடர்ந்து தற்போது சகலதுறை வீரர்களான தனன்ஞய லக்ஷான் மற்றும் இஷான் ஜயரட்ன ஆகியோருக்கும் கொவிட்19 வைரஸ் தொற்று ஏற்பட்டிருக்கின்றது.

வைரஸ் தொற்றுக்கு இலக்கான வீரர்கள் அனைவரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டு சிகிச்சைகளை பெற்று வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சர்வதேச கிரிக்கெட் சபையின் (ஐ.சி.சி.) ஒருநாள் சுபர் லீக்கினுள் அடங்கும் இலங்கை – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான ஒருநாள் தொடர் இம்மாதம் 23ஆம் திகதி டாக்காவில் ஆரம்பமாகவிருக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

# மலையகத்தில் நடைபெற்ற மாபெரும் மென்பந்து கிரிக்கெட் சுற்று போட்டி

புஸ்ஸல்லாவ இந்து தேசிய கல்லூரியின் பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் கல்லூரியில் கடந்த காலங்களில் கல்வி பயின்ற பழைய மாணவர்களை ஒன்றினைத்து 11 பேர் கொண்ட 16 அணிகள் உருவாக்கபட்டு குறித்த அணிகளுக்கு இடையில் கிரிக்கெட் மென்பந்து சுற்றுப்போட்டி கடந்த மாதம் 16 மற்றும் 17 ஆம் திகதிகளில் நடைபெற்றது.

கல்லூரியின் அதிபர் எஸ்.சந்திரமோகன் மற்றும் பழைய மாணவர் சங்கத்தின் செயலாளர் எம். கவாஸ்கர் தலைமையில் நடைபெற்ற இந்த சுற்றுபோட்டியை கடந்த 16ஆம் திகதி கிராமிய வயல் நிலங்கள் மற்றும் அண்டியுள்ள குளங்கள், நீர்த்தேக்கங்கள் மற்றும் நீர்ப்பாசன அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் அநுராத ஜயரத்ன அவர்களினால் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைக்கபட்டன. இதன் போது கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு கூறினார்.

தொடர்ந்து இந்த விடயம் தொடர்பில் கருத்து தெரிவித்த இராஜாங்க அமைச்சர்.

இன்று நம் நாட்டில் மக்கள் ஏதோ ஒரு காரணத்திற்காக இனம், மதம், மொழி சாதி, அரசியல் தோட்டம் ஊர் ரீதியாக பிரிக்கபட்டே இருக்கின்றோம். இது இந்த நாட்டுக்கும் எமக்கும் எமது சமூகத்திற்கும் உகந்த ஒன்று அல்ல நாம் இளைஞர்கள் என்ற ரீதியில் ஒற்றுமையாக இருந்து எமது சமூகத்தையும் நாட்டையும் காப்பாற்ற வேண்டும். இதற்கு இந்த கிரிகெட் போட்டி ஒரு நல்ல சந்தர்ப்பம். இதில் எப்படி ஒன்றுமையாக இருக்கின்றோமோ அதேபோல் நாமும் ஒற்றுமையாக இருக்க வேண்டும். நான் இங்கு கட்சி அரசியல் ரீதியாக வரவில்லை. உங்களில் ஒருவனாகவே வந்திருக்கின்றேன். ஒற்றுமையே எமது பலம். இந்த பாடசாலையில் விளையாட்டு மைதானத்தை விளையாட்டுதுறை அமைச்சர் நாமல் ராஜபக்ஸ ஊடாக புனர்நிர்மாணம் செய்ய இரண்டு மில்லியன் நிதியை ஒதுக்கீடு செய்துள்ளேன். தொடர்ந்து இந்த பாடசாலையின் அபிவிருத்தியில் உங்களுடன் தோல் நிற்பேன் என்று கூறினார்.

இந் நிகழ்வில் சமய பெரியார்கள் கல்வி அதிகாரிகள் பிரஜாசத்தி பணிப்பாளர் பாரத் அருள்சாமி அயல் பாடசாலைகளின் அதிபர்கள் அரசியல் பிரமுகர்கள் பாடசாலையின் அபிவிருத்தி சங்கத்தினர் பழைய மாணவர்கள் பெற்றோர்கள் உட்பட நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து நடைபெற்ற இந்த கிரிக்கெட் சுற்றுபோட்டி 17ம் திகதி முடிவுற்றது. இந்த போட்டியின் முதலாவது வெற்றி கிண்ணத்தையும் பணப்பரிசையும் 2014 ஆம் கல்வி பயின்ற பழைய மாணவர் அணி வெற்றி கொண்டதுடன் இரண்டாம் இடத்தை 2009 ஆம் ஆண்டு கல்வி பயின்ற பழைய மாணவர் அணியும் மூன்றாம் இடத்தை 2010 ஆம் ஆண்டு கல்வி பயின்ற பழைய மாணவர் அணியும் பெற்றுக் கொண்டது.

# ஸ்பானிஷ் கிராண்ட்பிரிக்ஸ்: நடப்பு சம்பியன் லீவிஸ் ஹமில்டன் முதலிடம்

போமியுலா1 கார்பந்தயத்தின் ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ் சுற்றில் நடப்பு சம்பியனான மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லீவிஸ் ஹமில்டன் முதலிடம் பெற்றுள்ளார்.

ஒவ்வொரு ஆண்டும் 'போமியுலா1' கார் பந்தயம், 23 சுற்றுகளாக நடைபெறும். ஒவ்வொரு சுற்றும் ஒவ்வொரு நாடுகளில் நடைபெறும்.

இதன்படி, நடப்பு ஆண்டின் நான்காவது சுற்றான ஸ்பானிஷ் கிராண்ட் பிரிக்ஸ், நேற்றுமுன்தினம் பார்சிலோனா கட்டலோனியா ஓடுதளத்தில் நடைபெற்றது.

இதில் 308.424 கிலோ மீறறர் பந்தய தூரத்தை நோக்கி, 10 அணிகளை சேர்ந்த 20 வீரர்கள் காரில் சீறிப்பாய்ந்தனர்.

இதில் நடப்பு சம்பியனான மெர்சிடஸ் பென்ஸ் அணியின் லீவிஸ் ஹமில்டன், பந்தய தூரத்தை 1 மணித்தியாலம் 33 நிமிடங்கள் 07.680 வினாடிகளில் இலக்கை கடந்து முதலிடத்தை பிடித்தார். இதற்காக அவருக்கு 25 புள்ளிகள் வழங்கப்பட்டது.

அவரை விட 15.841 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த, ரெட்புல் அணியின் வீரரான மேக்ஸ் வெர்ஸ்டபேன், இரண்டாவது இடத்தை பெற்றார். அத்தோடு அவர், இரண்டாம் இடத்திற்கான 19 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டார்.

26.610 வினாடிகள் பின்தங்கிய நிலையில், பந்தய தூரத்தை கடந்த மெர்சிடஸ் பென்ஸ் அணியின் மற்றொரு வீரரான வால்டெரி போட்டாஸ் மூன்றாவது இடத்தை பிடித்தார். அதற்கு அவருக்கு 15 புள்ளிகள் வழங்கப்பட்டது.

இதுவரை நடைபெற்று முடிந்துள்ள நான்கு சுற்றுகளின் முடிவில், லீவிஸ் ஹமில்டன் மூன்று வெற்றிகளுடன் 94 புள்ளிகளுடன் முதலிடத்தில் உள்ளார்.

இதற்கு அடுத்தப்படியாக மேக்ஸ் வெர்ஸ்டபேன்ஒரு வெற்றியுடன் 80 புள்ளிகளுடன் இரண்டாவது இடத்திலும், வால்டெரி போட்டாஸ் 47 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளனர்.

அடுத்த ஐந்தாவது சுற்றான மோனோகோ கிராண்ட் பிரிக்ஸ், எதிர்வரும் 23ஆம் திகதி, மோனோகோ சர்வதேச ஓடுதளத்தில் நடைபெறவுள்ளது.

## உலக பராலிம்பிக் போட்டிக்கான தெரிவு போட்டியில்

# மகேஷ் ஜயகொடி வெற்றி

**(வட கொழும்பு தினகரன் நிருபர்)**

முன்னாள் இராணுவ வீரரும், மாற்றுத் திறனாளியும் எமது நாட்டின் தனிநபர் படகு சவாரி வீரருமான மகேஷ் ஜயகொடி ( வயது 32) ஜப்பானில் டோக்கியோவில் கடந்த ஐந்தாம் திகதி இடம்பெற்ற 2021 உலக பராலிம்பிக் போட்டிக்கான தெரிவு போட்டியின் போது மாற்றுத்திறனிகளுக்கான தனி நபர் படகு சவாரி போட்டியில் இணைந்து கொள்ளும் வாய்ப்பை பெற்றுக் கொண்டார்.

இவர் கொழும்பு மாளிகாவத்தையில் இயங்கும் இலங்கை தேசிய பராலிம்பிக் அமைப்பு உறுப்பினரும் இலங்கையின் பிரபல தனிநபர் படகு சவாரி வீரருமான மகேஷ் ஜயகொடியின் இவ் வெற்றி தெரிவை தேசிய பராலிம்பிக் சங்கம் ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளது.

தினேஷ் பிரியந்த ஏற்கனவே பல படகு போட்டிகளில் ஈடுபட்டு வெற்றிப் பெற்றவராவார்.

இத் தனிநபர் படகு சவாரியானது சக்கர நாற்காலியில் அமர்ந்தவாறு துடுப்பை வலித்து மேற்கொள்ளும் கடுமையான போட்டியாகும்.

ஜப்பான் நாட்டின் டோக்கியோவில் எதிர்வரும் ஆகஸ்ட் 24 முதல் செப்டெம்பர் 05 வரையில் மாற்றுத் திறனாளிகளுக்கான உலக விளையாட்டு போட்டிகள் இடம் பெறவுள்ளன.

இவ் பராலிம்பிக் போட்டியில் பங்கு கொள்ளவே மகேஷ் ஜயகொடியின் தெரிவு இடம்பெற்றுள்ளது.படகு சவாரி போட்டிக்கு மகேஷ் ஜயகொடியின் தெரிவுடன் ஏற்கனவே ஈட்டி எறிதல் போட்டிக்கு தினேஷ் பிரியந்த ஹேரத்,சமித்த துலான் ஆகியோரின் தெரிவுடன் ஈட்டி எறிதல் போட்டிக்கு சம்பத் பண்டார தெரிவாகி உள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2021 மே மாதம் 11ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.